விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 27 செவ்வாய்க்கிழமை (13.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 359

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# யாழ்ப்பாண கள நிலைமைகளை துருவித்துருவி ஆராயும் தூதுவர்கள்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ்ப்பாண கள நிலைமை, யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் செயற்பாடு, மக்களின் வாழ்வாதாரம் என்பன தொடர்பில் துருவித் துருவி ஆராய்வதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக டக்ளஸ்

(கொழும்பு)

வடமாகாண சபைக்கான தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக தான் போட்டியிடவுள்ளதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி. கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடமாகாண சபைக்கான தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவீர்களா? என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சர் டக்ளஸிடம் (19ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவனை பணயம் வைத்து மிரட்டி நள்ளிரவில் துணிகரக் கொள்ளை

### கலாசாலை வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கூரிய ஆயுதங்களுடன் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் பல லட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள், மோட்டார் சைக்கிள் தொலைக்காட்சிப் பெட்டி, கைத்தொலைபேசி என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வீட்டின் (20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நிலைமைகளை இரகசியமாக திரட்டிய ஜப்பான்!

(கொழும்பு)

வடக்கு, கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஜப்பான் இரகசியத் தகவல்களை திரட்டிவந்துள்ளது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சிங்கள வாரஇதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக முன்னாள் அரச அதிகாரியொருவரினால். ஜப்பானுக்கு அனுப்பப்பட்ட மிகவும் நம்பகமான புலனாய்வு அறிக்கையொன்று இலங்கை அரச புலனாய்வு சேவையினால் இடைமறிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே இரு முன்னாள் அரச அதிகாரிகள் இந்த இரகசியத் தகவல்களை ஜப்பானுக்கு வழங்கி வந்தவிவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் மீன்பிடிக்க அனுமதி கோரும் அமைச்சர்

(கொழும்பு)

சிங்கள மீனவர்களுக்கு முல்லைத்தீவு சென்று அங்குள்ள கடற்பரப்பில் மீன்பிடி தொழில் ஈடுபட வசதிகள் செய்துகொடுக்கப் படவேண்டும் என சமூக நலன்புரி அமைச்சர் மில்ரோய் பெர்ணான்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் நேற்று உரையாற்றிய அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

முன்னரும் சிங்களவர்கள் முல்லைத்தீவில் மீன்பிடி தொழில் ஈடுபட்டதோடு அங்கு அவர்கள் வசித்து வந்ததாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவில் சிங்கள மீனவர்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்க்கட்சிகள் பங்குபெற வேண்டும்



### அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து தமிழ் கட்சிகளும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துகொள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ.பி.டி.பி) தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று திங்கட்கிழமை அழைப்பு விடுத்தார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் மூலம் தமிழ் மக்களுக்கான உரிய தீர்வினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்குவார். இதற்காக ஜனாபதிக்கு தேவையான பலம் நாடாளுமன்றத்தில் உண்டு எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி. கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கடந்த 2000ஆம். ஆண்டு முன்வைக்கப்பட்ட அரசியல் (20ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோரை கண்டுபிடிக்க கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி காணாமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்களை கண்டுபிடித்து தருமாறு வலியுறுத்தியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் கொழும்பு புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை நண்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

டிசம்பர் 10ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி கலந்துரையாடலுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கானோர், தமது காணாமல்போன, கடத்தப்பட்ட, கைதிகள் குறித்து வேதனையுடன் கோஷங்களை எழுப்பினர்.

அரசியல் (20ஆம் பக்கம் பார்க்க)

## மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக முல்லைத்தீவு மாணவி வழக்கு தாக்கல்

(கொழும்பு)

தன்னை பல் வைத்திய விஞ்ஞான பட்டப் படிப்பை தொடர அனுமதிக்கப்படாமைக்கு எதிராக முல்லைத்தீவைச் சேர்ந்த மாணவி ஒருவர் தொடுத்த வழக்கில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவையும் ஏனைய இரு பிரதிவாதிகளையும் ஜனவரி 10ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா (தலைவர்) எச்.என். ஜே.பெரேரா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

முல்லைத்தீவை சொந்த இடமாக கொண்ட அனுஜா யோகநாதன் எனும் இம் மாணவி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

முல்லைத்தீவை (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறிலங்கா ரெலிகொமின் இணைப்புகள் செயலிழந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்று முன்தினம் பெய்த இடியுடன் கூடிய மழை காரணமாக சிறிலங்கா ரெலிகொமின் தொலைபேசி இணைப்புகள் அனைத்தும் செயலிழந்துள்ளன.

மின்னல் தாக்கி மின்கலம் சேதமடைந்ததாலேயே இணைப்புகள் துண்டிக்கப்பட்டதாக ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன

எனினும் திருத்தும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதால் இன்று தொலைபேசி இணைப்புகள் வழமைக்கு திரும்பும் என நம்பிக்கை வெளியிடப்பட்டது.

இதேவேளை நேற்றிரவு இணையத்தள சேவைகளும் செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# குடிமக்களின் விபரங்களை திரட்டும் முயற்சியில் இராணுவம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்து குடிமக்களினதும் விபரங்களை திரட்டும் நடவடிக்கை ஒன்றை இராணுவம் மேற்கொள்ளவுள்ளது.

புவிசார் குடிமக்கள் தகவல் முறைமைத் திட்டம் என்ற பெயரில் இராணுவம் 2.5 மில்லியன் ரூபாய் செலவில் இந்த தகவல்களை திரட்டவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிலையமும் இராணுவமும் இணைந்து இத் தகவல் திரட்டும் நடவடிக்கையை மேற் கொள்ளவுள்ளன.

தென் கிழக்கு ஆசியாவிலே இலங்கையில் தான் இது முதல்முறையாக நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இலங்கையில் வாழும் அனைத்துக் குடிமக்கள் பற்றிய தகவல்களையும் எண்முறை அடிப்படையில் உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் திட்டம் தற்போது கம்பஹா மாவட்டத்தில் முன்னோடியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக இராணுவத்தின் தகவல் தொழில்நுட்ப ஆலோசகரும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் தலைவருமான கேணல் திரான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள அனைத்து குடிமக்கள் பற்றிய துல்லியமான விபரங்களை திரட்டுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். ஒரு மாத குழந்தைகூட இந்த விபரத்தில் உள்ளடக்கப்படும்.

இந்த முறைமை தனிப்பட்ட விபரங்களை மட்டும் கொண்டதல்ல. இடம்சார் தகவல்களையும் குறிப்பாக ஒவ்வொருவரினதும் வசிப்பிடத்தைக் காட்டும் செயற்கைக்கோள் படத்துடன் கூடிய தகவல்களையும் கொண்டிருக்கும்.

தனிப்பட்ட விபரங்கள், குடும்பப்பின்னணி, வீடுபற்றிய விபரங்கள், செயற்கை கோள் படங்கள் மட்டுமன்றி மின்சாரம், வீதி வலையமைப்பு, குடிநீர், கழிவு நீர் அகற்றும் வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகவும் இந்தத் தகவல் திரட்டு அமையவுள்ளது. (எ-5)

## மொழிச் சங்கத்தினை யாழ்.மாவட்டத்தில் அமைத்தல்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வழிகாட்டலின் பிரதேசங்களில் மொழிச்சங்கம் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் அமையவுள்ள மொழிச் சங்கம் ஊடாக அரச கரும மொழிக்கு அமைவாக தமிழ்மொழி பிரயோகம் அரச நிறுவனங்களில் மற்றும் பொதுப்பாவனையில் முறையாக அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதை இம் மொழிச்சங்கத்தின் ஊடாக எடுத்துக் கூற முடியும்.

மொழிச் சங்கத்தின் மூலம் தமிழ், சிங்கள மொழிகளினுடைய பரிமாற்ற கற்கைநெறிகள் மேற்கொள்ள முடியும்.

அமைச்சு அதற்கேற்ப மொழியை கற்க விரும்புபவர்களுக்கு ஆசிரியர்களை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொள்ளவும் முன்வந்துள்ளது.

ஆகவே யாழ்.மாவட்டத்தில் இவ்வாறான மொழிச் சங்கத்தை அமைத்து தமிழ் மொழியின் செயல்திறனாக்கத்தை அமுல்படுத்துவதற்கு ஓர் குழு ஒன்றை அமைக்க விரும்புகிறோம். இக்குழுவில் அங்கத்தவர்களாக செயற்பட ஆர்வமுள்ள தமிழ் புலமையாளர்கள், மொழித்திறன் ஆற்றல் உள்ளவர்கள் சேவை அடிப்டையில் செயலாற்ற விரும்புபவர்கள் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன் 450, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ 0212229861, 0212224398 என்ற தொலைபேசி இலக்கத்திலோ தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ஏ)

## புதிய நிர்வாகசபை தெரிவு

புங்குடுதீவு பாரதி சன்சமூக நிலையத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் நடைபெற்ற வருடாந்த கூட்டத்தின் போது இந் நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

இதன்போது புதிய தலைவராக வ.செல்வராசா தெரிவு செய்யப்பட்டார். செயலாளர் ம.றஜீவன், பொருளாளர் த.தயாபரன், உப தலைவர் இ.றொபின்சன், உப செயலாளர் ந.குகநேசன் எண் பார்வையாளர் செ.விமலகாந்தன் ஆகியோருடன் மேலும் ஏழு செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.(சு)


**சாரதிகள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு டிலிவரி வான் ஓடுவதற்கு AD லைசன்ஸ் உள்ள மூன்று சாரதிகள் மற்றும் ஒரு ரக்ரர் சாரதி தேவை. தகுதியுடையோர்

இல. 32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

(C-5179)


## மோ.சைக்கிள் விபத்து மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேந்த மூவர் படுகாயமடைந்தனர். நிலாவரைக்கு அண்மையில் நேற்று இரவு 6.45 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்று பெற்றுள்ளது.

இதில் சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியை சேர்ந்த ஐ.பிரபாகன்(வயது 41), அவரது மனைவி பி. செல்வகுமாரி (வயது 33), மகள் பி. பிருத்திகா ( வயது12) ஆகிய மூவருமே படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-11)


**கணித வகுப்பு**

தரம்:- 9, 10, 11 (O/L)
K. யோகேந்திரன்

கிறிஸ்ரல் சென்ரர், நெல்லியடி
திங்கள், வியாழன், சனி, ஞாயிறு மு.ப. 06.00 - 09.00
ஆரம்பம் :- 15.12.2011

கல்வியங்காடு (அம்மன் கோவில் அருகில்)
புதன், வெள்ளி பி.ப. 06.00 - 08.30
ஆரம்பம் :- 14.12.2011

சுன்னாகம் (CAN வைத்தியசாலை அருகில்)
செவ்வாய், புதன்,வெள்ளி பி.ப. 03.00 - 06.00
ஆரம்பம் :- 14.12.2011

T.P. No.:- 0775133990 (6956)


# தனது மரண அத்தாட்சி பத்திரத்தை அரச அதிபரிடம் கோரிய பெண்

## காணி மோசடி அம்பலமானது

தனது மரண அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியை பெற்றுத் தருமாறு பெண் ஒருவர் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.அரச அதிபர் கூறியதாவது,

கடந்த கால யுத்தசூழல் காரணமாக இந்த நாட்டைவிட்டு வெளியேறி சுவிஸ் நாட்டில் தஞ்சம் புகுந்த பெண் ஒருவர் அண்மையில் யாழ்.குடாநாட்டுக்கு மீண்டும் வந்திருந்தார்.

கொக்குவில் பகுதியில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றபோது அவர் உறவினர்களால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

அத்தோடு தான் இறந்துவிட்டதாக தெரிவித்து போலி மரண அத்தாட்சிப் பத்திரத்தின் மூலம் உறவினர்கள் அவரின் காணியை மாற்றி எழுதியுள்ளனர் என்பதையும் அறிந்து கொண்டார்.

இதேவேளை தமது பெயரில் மாற்றி எழுதப்பட்ட காணி உறுதியை மக்கள் வங்கியில் வைத்து பணமும் பெற்றுள்ளனர் என்பதையும் குறித்த பெண் அறிந்து கொண்டார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் என்னிடம் வந்து முறையிட்டார் என அரச அதிபர் கூறினார்.

30 வருட அரச சேவையில் தான் இவ்வாறான ஒரு மோசடியை கண்டதில்லை எனவும், வெளிநாடுகளில் உள்ள உறவுகள் இங்குள்ள தமது சொத்துக்கள் தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு குறித்த மரண அத்தாட்சிப் பத்திரம் மாவட்ட செயலகம் ஊடாக வழங்கப்படவில்லை. அது சுயமாக தயாரிக்கப்பட்ட மரண அத்தாட்சிப் பத்திரம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

காணியையும் வீட்டையும் அபகரிக்கும் நோக்குடன் குறித்த பெண்ணின் மரண அத்தாட்சிப் பத்திரத்தை தயாரித்தவர்கள், 1991ஆம் அண்டு இவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

தமது சொந்த நாட்டில் உறவுகளுடன் வாழ்வதற்காக நீண்டகாலம் கழித்து வந்த பெண்ணுக்கு இறுதியில் ஏமாற்றமும் அதிர்ச்சியுமே காத்திருந்தது.

எனவே இத்தகைய மோசடிக் கும்பல் தொடர்பாகமக்கள்விழிப்புடன்இருக்கவேண்டும் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.(எ-6)

# மற்றொரு சந்தேக நபரும் நேற்று பிணையில் விடுதலை

யாழ். நகரப் பகுதியில் உள்ள விடுதியில் கைது செய்யப்பட்டவர்களில் நேற்று ஒருவர் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்.

கடந்த மாதம் யாழ்.நகர்ப் பகுதியில் உள்ள குறித்த விடுதியில் விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 8 பேர் கைது செய்யப்பட்டனர். அதில் ஏற்கெனவே மூவர் பிணையில் விடுவிக்கப்பட்டு இருந்தனர்.

இது குறித்த வழக்கு நேற்று யாழ்.நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதவான் 8-ம் சந்தேக நபருக்கு 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார்.

மற்றைய முதலாம், இரண்டாம், ஆறாம் சந்தேக நபர்களை தொடர்ந்து எதிர்வரும் 22-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இச் சந்தேக நபர்களில் விடுதி உரிமையாளரும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(எ-4)

# உருளைக்கிழங்கு இறக்குமதி வரி 15 ரூபாயினால் குறைப்பு

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்குவரும் வகையில் உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரி கிலோவிற்கு 15 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. பண்டிகைக் காலத்தில் பொருட்களின் விலைக்குறைப்பை மேற்கொள்ளும் முயற்சியாக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

அரிசி, கோழி இறைச்சி, வெங்காயம், பருப்பு, சீனி, முட்டை ஆகியவற்றின் விலைகளையும் பண்டிகை காலத்தில் அதிகரிக்காமல் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவ் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ-5)


**இதய அஞ்சலி**

11.12.2011 ஞாயிற்றுக்கிழமை இறைபதம்
அடைந்த எமது குடும்ப விளக்கு

**கதிரேசு கனகநாயகம்**
(குழந்தை)



உந்தன் இழப்பைக் கேட்ட
எம் இதயத்தின் காயம் ஆறவில்லை
உறவினர், ஊரவர்கள் ஏங்கி நிற்க நீங்கள்
உலகினை விட்டுச் சென்ற மாயமென்ன?
உங்கள் அன்பு முகம், ஆசை வார்த்தை
கேட்க ஏங்கித் தவித்து நிற்கின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தி வேண்டி
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி

காளிகோவிலடி
உடுவில்

- குடும்பத்தினர்

(சி-5180)

# இன்று ஒரு தகவல்

## தேர்வு எழுதுவது எப்படி?

இந்தக் காலத்தில் மாணவர்கள் எதற்கும் பயப்படமாட்டார்கள். ஆனால், ஒரு விடயத்திற்கு மட்டும் பயப்படுவார்கள்.

என்ன அது?

பரீட்சைதான்! வேறு என்ன?

பரீட்சை நெருங்க நெருங்க பயம் அவர்களை ஆட்கொண்டு விடும்.

படிக்காமலே இருந்தால்தான் பரீட்சை பயமுறுத்தும். ஆரம்பத்தில் இருந்தே நன்றாகப் படித்தால் கடைசி நேரத்திலே பரீட்சையைக் கண்டு பயப்படவேண்டிய அவசியமே ஏற்படாது.

சரி... இப்போது பரீட்சை வந்துவிட்டது. அதை நல்லவிதமாக எழுதுவது எப்படி? அதற்கு சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள் பெரியவர்கள். படிக்கிற மாணவர்களுக்கு இது பிரயோசனமான ஒன்றாகும்.

பரீட்சை எழுத பாடசாலைக்குச் செல்லும் முன்பு உங்களுக்கு வீட்டிலே யார் மேலே மிகவும் பிரியமோ அல்லது யாருக்கு உங்கள் மேலே பிரியமோ அவர்களிடம் சொல்லிவிட்டு புறப்படுங்கள்.

அரை மணித்தியாலத்திற்கு முன்னால் பரீட்சை நிலையத்திற்கு சமூகமளியுங்கள். கடைசி நேரத்தில் ஓடிச் சென்று இடத்தைத் தேடி அவதிப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பரீட்சை எழுதுவதற்கு முன்பு பரீட்சை மண்டபத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்து ஏனைய மாணவர்களிடம் பாடத்தைப் பற்றி சந்தேகம் கேட்காதீர்கள். சில சமயம் அது உங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும். உங்களுக்குத் தெரிந்தது உங்களோடு இருக்கட்டும்.

பத்து நிமிடத்திற்கு முன்பே பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்து விடவேண்டும்.

மணியடிப்பதற்கு முன்பு வேண்டுமென்றால் பரீட்சை மண்டபத்தைச் சுற்றி ஒரு தடவை நோட்டம் விடலாம். யார் யார் எங்கே இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம். மணியடித்தவுடன் பரீட்சை எழுதுவதற்கு உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். நிதானமாக ஒரு தடவை கண்ணை மூடிக் கொண்டு படித்ததை மீட்டுப்பாருங்கள்.

வினாத்தாள் கிடைத்தவுடனேயே அதைக் கவனமாக வாசித்து உங்கள் இலக்கத்தை உரிய இடத்திலே எழுதுங்கள். தேர்வாளர் கையொப்பம் விடைத்தாளிலே இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

வினாத்தாள் கொடுத்தவுடனே அதில் உள்ள குறிப்புகளைக் கவனமாகப் படியுங்கள். எத்தனை கேள்விக்குப் பதில் எழுதச் சொல்லப்பட்டுள்ளது. எத்தனை கேள்விகளுக்குப் பதில் தெரியும் என்பதை முடிவு செய்யுங்கள். தெரியாத கேள்விகள் பற்றி மனதை குழப்பிக் கொள்ள வேண்டாம்.

எந்தக் கேள்விக்கு தெளிவாகப் பதில் எழுதமுடியுமோ அதை விரைந்து முதலிலே எழுதுங்கள்.

முதல் இரண்டு, மூன்று பக்கங்களை சிறிது நிறுத்தி நிதானமாக அழகாக எழுதுங்கள். அதன்பின்பு நேரத்திற்கு ஏற்றவாறு விரைவாகப் பதிலளியுங்கள்.

பதிலளித்த வினாக்களுக்கு புள்ளடி செய்யுங்கள். இந்தக் கேள்விக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கி அந்த நேரத்தினுள் பதில் எழுதுங்கள்.

கேள்விக்குத் தகுந்த பதில் போதும். உங்களுக்கு நிறையத் தெரியுமென்று வளவளவென்று எழுதிக் கொண்டிருக்க வேண்டாம்.

விடை எழுதும் போது தொடர்ச்சியாக எழுதக்கூடாது. சிறிய சிறிய பந்தியாகப் பிரித்து எழுதுங்கள். தாராளமாக இடைவெளி விடவும்.

ஒரே கேள்விக்கு இரண்டு இடத்திலே பதில் எழுதக்கூடாது. இப்படிச் சில மாணவர்கள் எழுதுவதுண்டு. திருத்துபவர்கள் ஏமாந்து போய் புள்ளிகளைப் போட்டு விடுவார்கள் என்று நினைத்துக் கொண்டு அது பிழை அப்படியெல்லாம் ஏமாறமாட்டார்கள்.

மேலதிகமாக விடையளிக்கும் தாள் வாங்கும்போது இலக்கம், பக்க எண் ஆகியவற்றை சரியாகப் போடவேண்டும்.

தேர்வாளர் கையொப்பம் எல்லாம் இணைத்தாளிலும் இருக்கிறதா என்பதை சரி பார்க்க வேண்டும்.

முதலில் தெரிந்த கேள்விகளுக்கு பதில் எழுதுங்கள். பின்னர் தெரியாத கேள்வியாக இருந்தாலும் உங்களுக்குத் தெரிந்த அளவுக்குப் பதில் எழுதுங்கள். அதை விட்டுவிடவேண்டாம்.

எல்லாம் எழுதி முடிந்த பின்னர் கடைசியாக ஒரு தரம் சரி பாருங்கள். கால் புள்ளி அரைப்புள்ளி விடுபட்டிருந்தால் அதை வைக்கலாம்.

கேள்வி இலக்கம், பக்க இலக்கம் எல்லாம் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள். மணியடித்ததும் நிதானமாக விடைத்தாளை உரியவரிடம் ஒப்படைத்து விட்டு வெளியிலே வரவும்.

வீடு சென்றாலும் அடுத்த நாள் நடைபெறும் பரீட்சைக்கான புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு படிக்காதீர்கள்.

ஒரு மணிநேரமாவது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர் அடுத்த பரீட்சைக்கு படிக்க ஆரம்பிக்கலாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பணிமனை புனரமைப்பு

(பூநகரி)

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பணிமனை என்றிப் திட்டத்தின் கீழ் 35 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருவதாக உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

மேல் மாடியைக் கொண்ட உதவி அரசாங்க அதிபர் பணிமனை, புலிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாகப் பலத்த தேசத்திற்குள்ளாகி இருந்தது.

யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டு சிவில் நிர்வாகம் ஆரம்பமானதைத் தொடாந்து அரச திணைக்களங்கள் சொந்த இடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில் வேறு இடத்தில் இயங்கி வந்த பச்சிலைப் பள்ளி உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் தற்பொழுது சேதமடைந்த நிலையிலுள்ள சொந்த கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் இட நெருக்கடியின் மத்தியில் இயங்கி வருகின்றது.

கட்டடத்தின் சேதமடைந்த நிலையிலுள்ள மேல் மாடிப் பகுதி என்றிப் திட்டத்தின் கீழ் 35 மில்லியன் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்க விரைவில் நடவடிக்கை

## அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனா

(பூநகரி)

இலங்கை வங்கியில் இலகு கடன் வசதியை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாய சம்மேளனங்களினதும் கமநல அமைப்புக்களினதும் பிரதிநிதிகளின் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் திருமதி ந.கீதாஞ்சாலி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நான் அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் விவசாயியின் மகன். நானும் விவசாயத்தில் ஈடுபடுகிறேன். நீங்கள் தான் இந்நாட்டின் முதுகெலும்பு. ஆகவே உங்களின் பிரச்சினைகளை நேரில் கண்டறிவதற்காக திருமதி கீதாஞ்சலியின் அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ளேன்.

தமிழ் அதிகாரிகளின் உதவியுடன் விடயத்தை அறிந்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளுக்கு இலங்கை வங்கியில் இலகு கடன் குறைந்த வட்டியில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

இவ் ஒன்றுகூடலில் பூநகரி, பனை, கண்டாவளை, கரைச்சி பிரதேசங்களை சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இவ் ஒன்றுகூடல் தினத்தன்று முதலாவது உழவு இயந்திரத்தினை அமைச்சர் விவசாயி ஒருவருக்கு இலகு கடன் அடிப்படையில் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-84)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 85 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 320 | 280 | 300 |
| தக்காளி | 140 | 150 | 150 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 80 | 100 | 70 |
| கரட் | 80 | 130 | 80 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 100 | 50 |
| வாழைக்காய் | 35 | 40 | 35 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 65 | 100 | 80 |
| பாகற்காய் | 170 | 180 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | -- |
| பயற்றங்காய் | 120 | 130 | 150 |
| லீக்ஸ் | 50 | 100 | 50 |
| பீற்றூட் | -- | 80 | 60 |
| கறிமிளகாய் | -- | 180 | 130 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 160 | 200 | -- |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 130 | 150 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 25 | 20 |

# இராசி பலன்

13.12.2011

(கார்த்திகை 27, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.13 மணிவரை

திருதியை முன்னிரவு 9.57 மணிவரை

புநர்பூசம் முன்னிரவு 10.22 மணிவரை

இராகுகாலம் 3.20-4.50 மணிவரை

சுபநேரம் 10.50-12.20 மணிவரை

**மேடம்** ஆனைமுகனை வழிபட்டு ஆனந்தம் காண வேண்டிய நாள், பிரயாண நன்மையுண்டு, சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறும்.

**இடபம்** வாக்கு மேன்மையுண்டு, வருமானம் அதிகரிக்கும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வியாபார விருத்தியுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களால் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், தெய்வ சிந்தை மேலோங்கும்.

**கடகம்** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர் நலனுக்காக திடீர் செலவுகள் ஏற்படலாம், சில மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், தொலைபேசித் தகவல்களால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**சிங்கம்** எடுத்த காரியங்கள் எளிதில் வெற்றி கிடைக்கும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழிலில் வருமானம் அதிகரிக்கும் சூழ்நிலை அமையும், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**கன்னி** மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் செல்லும், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** உறவினர்களிடையே சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு குறையும், உஷ்ண சம்பந்தமான நிலையுண்டு, வேலைச் சுமை கூடும், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம்.

**தனுசு** அபூர்வ சந்திப்புண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, உற்சாகமான நாள், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள்.


**மகரம்** செய்தொழிலில் மேன்மையுண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும், கனிவான பேச்சுக்களால் பிறரைக் கவர்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்** பூர்வபுண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு, உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**மீனம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், உடன்பிறப்புக்களால் உற்சாகம் பெருகும் நாள், உறவினரின் அன்புத் தொல்லைகளுக்கு உட்பட நேரிடலாம், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

வளவன்





புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் சமூகத்தோடு இணையும் வைபவம் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களை கடன் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட விருந்தினர்கள் நிற்பதையும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர உரையாற்றுவதையும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

# முன்னாள் போராளிகளின் விடுதலையை அரசாங்கம் விரைவுபடுத்தி உள்ளது

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசாங்கம் சமூகத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முயற்சிக்காது. மாறாக அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்கான உதவிகளை வழங்கவே திட்டமிட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை சமூகத்துடன் இணைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இக்காலத்தில் பெருமளவான புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தாமாகவே முன்வந்து சரணடைந்திருந்தார்கள்.

அந்த காலத்தில் எமது மக்கள் பெரும் அச்சத்திற்கு உள்ளானார்கள். இவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். எப்போது அவர்களை மீண்டும் காண்பது என்ற ஏக்கம் மக்கள் மத்தியில் நிலவியது. இந்தக் காலப்பகுதியில்தான் எவருமே எதிர்பாராத விதமாக அரசாங்கம் இவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியது.

அத்தோடு இவர்கள் தமது உறவினருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் நாளாந்தம் அவர்களை பார்வையிடுவதற்குமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. இவை அனைத்தும் அரசாங்கத்தால் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே நடைபெற்று வந்தன.

புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களின் விடுதலையை எந்தளவுக்கு துரிதப்படுத்த முடியுமோ அந்தளவுக்கு அரசாங்கம் விரைவுபடுத்தியது.

இதற்கமைவாக கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டனர். இதனால் கண்ணீருடன் வாழ்ந்த எம்மக்களின் துன்பங்களுக்கு படிப்படியாக தீர்வு காணப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் சமூகத்துடன் இணையும் முன்னாள் போராளிகளின் மத்தியில் நான் ஒரு வேண்டுகோளை முன்வைக்கின்றேன். விடுவிக்கப்பட்ட பத்தாயிரத்திற்கும் அதிகமான இளைஞர் யுவதிகளாகிய நீங்கள் எம் நாட்டின் மிகப் பெரிய சொத்து. கடந்தகால போரின் காரணமாக மிகப் பெரும் தலைமுறை இடைவெளியை கொண்டுள்ள எமது சமூகத்தினை மீண்டும கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பை இந்தநாடு உங்களிடம் ஒப்படைத்துள்ளது. எமது பொருளாதாரத்தையும் வாழ்வியல் விழுமியங்களையும் மீண்டும் கட்டியெழுப்ப நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.

மேலும் மீண்டும் உங்களை திசை திருப்பி உங்கள் வாழ்வை மீண்டும் சீர்குலைப்பதற்கும் கடந்த காலத்தில் நீங்கள் பட்ட துயரங்களை மீட்டுக்காட்டுவதனூடாக அரசியல் இலாபங்களை எட்டுகின்ற நோக்குடனும் சிலர் உங்களை நாடி வரலாம். எனவே அவற்றை நீங்கள் நிராகரிப்பதனூடாவே இனிவரும் காலங்களில் உங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இதேவேளை இந்நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலன்ரின், அமைச்சின் செயலாளர் திசாநாயக்க, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சந்தனராஜகுரு, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.பதில் கட்டளைத் தளபதி பிரிகேடியர் விக்கிரமரட்ன ஆகியோரும் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் வடமாகாண இணைப்பாளர்வேதநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-6)

## விசேட கூட்டம்

(தனங்கிளப்பு)

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட சம்மேளத்தின் விசேட கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேசிய இளைஞர் சேவைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அந்நிகழ்விற்கு மாவட்ட சம்மேளன உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறும் இக் கூட்டத்தின் போது முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் மாவட்ட சம்மேளன உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற தலைவர் திருமதி வினோதினி அறிவித்துள்ளார். (அ-37)

# இடமாற்றம் வழங்கக்கோரி ஆசிரியர்கள் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார், மடு, வவுனியா வடக்கு, வவுனியா வடக்கு, துணுக்காய், முல்லைத்தீவு, கிளிநொச்சி, தீவகம் ஆகிய வலயங்களில் 5 வருட காலத்திற்கும் மேலாக பணிபுரிந்து 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்கென விண்ணப்பித்து இதுவரையிலும் இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர்களின் கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையினை வடமாகாண கல்வியமைச்சின் செயலர் இ.இளங்கோவனிடம் வடமாகாண கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரரிடமும் நேற்று கையளித்துள்ளனர்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு,

கல்வியமைச்சில் இடமாற்ற சுற்று நிருபத்தின் படி இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டும்.

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் 02.01.2012 ஆம் திகதியன்று வழங்கப்பட வேண்டும்.

வெளி மாவட்டங்களில் யுத்த காலத்திலும் தொடர்ச்சியாக கடமையாற்றி பல துன்பங்களையும் அனுபவித்து நலன்புரி நிலையங்களிலும் கடமையாற்றி இதுவரையிலும் இடமாற்றம் எமக்கு வழங்கப்படவில்லை.

வெளிமாவட்டங்களில் பணிபுரிபவரானால் அங்கு வழங்கப்படும் பதவி உயர்வுகள் என்பவற்றினால் புறந்தள்ளப்படுகின்றனர். அதேவேளை நாம் புதிதாக பதவியேற்கும் பாடசாலைகளிலும் சிரேஷ்ட நிலை இல்லாமை காரணமாக இதேநிலை ஏற்பட்டிருக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்இடமாற்றம் கோரும் ஆசிரியர்கள் அனைவரும் யாழ். மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் ஐந்து வருட காலப்பகுதிக்கும் மேலாக வெளிமாவட்டங்களில் சேவையாற்றி வருகின்றனர் என்றும் இவ்வாசிரிய இடமாற்றம் தொடர்பாக தமிழ் ஆசிரியர் சங்கம் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவ்அவறிக்கையின் மூலப் பிரதிகள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவிடமும் கையளிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-4)




## மாற்றுத்திறனாளர்களுக்கான

# தொழிற்பயிற்சி, தொழில்வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

இதம் உளவள நிறுவனமானது மாற்றுத்திறனாளர்களுக்கு உள சமூக மேம்பாடு, உள ஆற்றுப்படுத்தல் பணிகளையும் யாழ். மாவட்டத்தில் மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு பகுதியாக சாவகச்சேரிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளர்களுக்கான தொழிற்பயிற்சி, தொழில் வாய்ப்புக்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சாவகச்சேரி சிவன் கோயில் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் மோட்டிவேஷன் நிறுவன உத்தியோகத்தர், ஜெய்ப்பூர் நிறுவன உத்தியோகத்தர், வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க நிறுவன உத்தியோகத்தர்கள், விழிப்புலனற்றோர் சங்க நிறுவன உத்தியோகத்தர்கள், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உத்தியோகத்தர்கள் தமது நிறுவன செயற்பாடுகள் பற்றியும் தொழில்வாய்ப்புகள், பயிற்சிகளுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்வாக இது அமையவுள்ளது.

இதில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட மாற்றுத்திறனாளர்களைப் பங்குபற்றுமாறு நிறுவன சாவகச்சேரி பிரிவு உளவள பணியாளர் செ. மயூரன் அறிவித்துள்ளார். (அ)

# அண்ண உதட்டுபிளவு இலவச சத்திரசிகிச்சைக்கான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்வைத்தியபீடமும் ஸ்மைல் ரெயின் தொண்டு நிறுவனமும் இணைந்து அண்ண உதட்டு பிளவு சத்திரசிகிச்சையினை முற்றிலும் இலவசமாக வழங்கவுள்ளது.


இச்சிகிச்சை தேவைப்படும் வசதி குறைந்த, ஆதரவற்ற குழந்தைகள் தொடர்பிலான பெயர், வயது, விலாசம், தொலைபேசி இலக் கம் என்பனவற்றை அனுப்பி சிகிச்சைக்கான, பிரயாண, தங்குமிட வசதிகளை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இக்குறைபாடு சிகிச்சையளிக்க முடியாத ஒன்று அல்ல என்றும் இச் சிகிச்சையின் மூலம் இதனை சீர்செய்ய முடியும் என்றும் சிகிச்சைப்பிரிவு கூறியுள்ளது.

இச்சிகிச்சைக்கு செல்ல விரும்புவர்கள் சங்கானை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.கோகுலனுடன் தொடர்பினை ஏற்படுத்தி சிகிச்சையினை இலவ்சமாக மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுவைமிக்க காளான் உணவுகள்

## அறுவடை செய்யப்பட்ட, போசணைப் பொருட்கள் செறிந்த காளான்களில் இருந்து தயாரிக்கக் கூடிய சுவைமிகு உணவு வகைகள்



### காளான் பொரியல்

**தேவையான பொருட்கள்**

- காளான் -250 கிராம்
- மிளகாய்த்தூள் -2 மே.க.
- மாஜரீன்- தே.எண்ணெய் -2 மே.க.
- றம்பை, கறிவேப்பிலை - 1 நெட்டி
- உப்பு-3 கிராம்

**தயாரிக்கும் முறை**

- காளானை துப்புரவாக்கி கழுவி, பிழிந்து மேலதிக நீரை அகற்றவும்.
- அதனை சிறுதுண்டுகளாக வெட்டவும்
- ஏனைய பொருட்களுடன் சேர்த்து சூடான எண்ணெய்யில் இட்டு பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

**குறிப்பு**

மிளகாய்த்தூளிற்கு பதிலாக மிளகுதூள் பாவிக்கலாம். விரும்பின் தேங்காய்ப்பால் சேர்த்து கறி சமைக்கலாம்.

இச்சுவையான பொரியல் 4 தொடக்கம் 5 பேருக்கு போதுமானதாகும்.

### காளான் வறை

**தேவையான பொருட்கள்**

- காளான் -100 கிராம்
- மெல்லிய தேங்காய்த்துருவல்-1 கோப்பை
- வெட்டியபச்சை மிளகாய்-3
- வெட்டிய சின்ன வெங்காயம்-3 மேசைக்கரண்டி
- கொறுக்காய்/ எலுமிச்சம்புளி-பாதி
- நீர்- 1 டம்ளர்
- றம்பை, கறிவேப்பிலை -1 நெட்டி
- மாசி அல்லது நெத்தலிக்கருவாடு-10 கிராம்
- மஞ்சள் தூள் -1/4 தே.கரண்டி
- உப்பு - 5 கிராம்

**தயாரிக்கும் முறை**

- தேங்காய்துருவல் தவிர்ந்த ஏனைய பொருட்களை பாத்திரத்தில் இட்டு மெல்லிய நெருப்பில் அவிக்கவும்.
- அவற்றை 2 தொடக்கம் 3 நிமிடம் நீர்வற்றும் வரை விடவும்
- தேங்காய்த்துருவலைக் கலந்து 5 நிமிடம் வறுத்து இறக்கவும்.

**குறிப்பு**

நீர்வற்றும் அளவுக்கு வறுத்தல் வேண்டும்.

இச்சுவைமிக்க காளான் வறை 3 தொடக்கம் 5 பேருக்கு போதுமானது.

### காளான் கறி

**தேவையான பொருட்கள்**


- காளான் -500 கிராம்
- பெரிய வெங்காயம் -2
- உள்ளி-4 பல்லு
- இஞ்சி-1 துண்டு
- மாஜரீன்/ தேங்காய் எண்ணெய்-3 மே.கரண்டி
- முந்திரிகைப்பருப்பு- 25
- மிளகாய்த்தூள் -2 மே.கரண்டி
- முதற் தேங்காய்ப்பால் -1/2 கப்
- வெட்டிய தக்காளிப்பழம் -2
- றம்பை, கறிவேப்பிலை-1 நெட்டி
- வெந்தயம்- 1 தே.கரண்டி
- மஞ்சள் தூள்-1/4 தே.கரண்டி
- உப்பு- 5 கிராம்

**தயாரிக்கும் முறை**

- காளானை நன்கு கழுவி சுத்தம் செய்து சிறு துண்டுகளாக வெட்டவும்
- வெங்காயம், உள்ளி, தக்காளி, இஞ்சி, கறிவேப்பிலை, றம்பை என்பவற்றை வெட்டி வைத்துக்கொள்ளவும்
- பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய்விட்டு காளான், தக்காளி தவிர்ந்த ஏனைய வெட்டிய பொருட்களை அதற்குள் போட்டு தாளிக்கவம்.
- அவை பொன்னிறமாக வதங்கிய பின் காளான், தக்காளி என்பவற்றைச் சேர்த்து அவற்றடன் மஞ்சள், மிளகாய்த்தூள், உப்பு யாவையும் சேர்த்து 5 நிமிடம் எண்ணெயில் வதக்கவும்.
- இறுதியில் தேங்காய் முதற்பாலை கலந்து 10 தொடக்கம் 15 நிமிடங்கள் மெல்லிய நெருப்பில் அவியவிடவும் பின் அடுப்பிலிருந்த இறக்கவும்.

இச்சுவைமிகு காளான் கறியினை 4 தொடக்கம் 6 பேருக்கு பரிமாறலாம். (தொடரும்)

**கி.சிறீபாலசுந்தரம்**
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)
யாழ்ப்பாணம்.



தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பசிசளிப்பு விழாவும் அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபை மிருசுவில் பொதுநூலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதனையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம்.

## மாதாந்த உதவிப் பணத்தை பெற்றுக் கொள்ளவும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கு கடந்த ஒக்டோபர் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கான தொகை வழங்கப்படவுள்ளது.

இந் நிலுவைத் தொகையானது அந்தந்த தபால் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக் கொடுப்பனவுகளை இம்மாதம் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உதவிப்பணம் பெறும் 3ஆயிரத்து 440 பேருக்கான இம்மாதக் கொடுப்பனவுகள் அஞ்சல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனை நாளை மறுதினம் வியாழக் கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறும் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(அ-29)

# புகையிலைக்கு மாற்றீடான பயிர் உற்பத்திகளில் நாம் ஈடுபடவேண்டும்

## யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

எமது இளம் சமுதாயம் போதைப் பொருள் பாவனையிலிருந்து முற்றாக விடுபட வேண்டும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச்செய்கை தொடர்பான ஆய்வு நூலின் தமிழாக்க நூல் வெளியீட்டு நிகழ்வும் யாழ்.மாவட்டத்தில் பொதுமக்களின் நலன் கருதி புகையிலை சார் உற்பத்தியில் பொருட்களை விற்பனை செய்யாத சகல உணவகங்களதும் பலசரக்குக் கடைகளினதும் உரிமையாளர்கள் சுகாதாரத்திணைக்களத்தினாலும் மதுவரித் திணைக்களத்தினாலும் நற்சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். குடாநாட்டில் புகையிலை உற்பத்தியானது கடந்த 2010 ஆம் ஆண்டு உயர்வடைந்து காணப்பட்டது.

இதுதவிர புகையிலை உற்பத்தியில் யாழ். குடாநாடு முன்னோடியாக திகழ்கின்றது. இதில் நாம் அவ்வளவாக பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது.

காரணம் உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் நோயை உண்டாக்கக்கூடிய பயிர் செய்கையினையே நாம் அதிகளவில் உற்பத்தி செய்கின்றோம்.புகையிலை உற்பத்தி செய்வோரின் எண்ணிக்கை யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வருகின்றது.அத்தோடு இங்குள்ள விவசாயிகளும் புகையிலையை உற்பத்தி செய்வதன்மூலம் அதிக வருமானத்தை பெற்று வருகின்றனர்.அவர்களின் பொருளாதாரத்தில் இந்தப் பயிர்ச்செய்கை பாரிய பங்களிப்பு செய்து வருகிறது.

திடீரென அந்தப் பயிர்செய்கையை செய்ய விடாது தடுப்போமேயானால் அது அவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

எனவே புகையிலைக்கு மாற்றீடாக பயிர் செய்கையை அறிமுகப்படுத்தும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம்.ஹால்டீன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.யூட், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி பிரசன்னா கூரே ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-6)



## நிதி உதவி கோருகிறார்



சுபாஸ் தாமரைச்செல்வி (இல.312/14/C புளூமெண்டல் வீதி, கொழும்பு 14) அவர்களின் செல்வப் புதல்வியான சுபாஸ் பிரமிளா ஏழு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு கண் பார்வை இழந்த நிலையில் - கண் சத்திர சிகிச்சைக்காக பெருமளவிலான பணம் (8 இலட்சம்) தேவைப்படுவதால் பொதுமக்களாகிய உங்கள் எல்லோரிடமிருந்தும் இயலுமானளவு உதவிகளை செய்து உதவுமாறு வேண்டி நிற்கின்றார்.

ஐயப்பன் கன்னிச்சாமியாகிய குழந்தை பிரமிளாவின் பெயருக்கு திருமணம் தடைப்பட்டு இருப்பவர்களும், திருமணமாகி பல வருடங்கள் பிள்ளைப் பேறு இல்லாதவர்களும் இயலுமானளவு உதவிகளைச் செய்து அவரின் சத்திர சிகிச்சைக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றார்.

ஐயப்பன் மாலை கழற்றி திரும்பி வரும்போது கண்பார்வையுடன் வர வேண்டுமென்று அவரின் தாயார் விரும்புகின்றார்.

Mr. Muthukarupan Subas
Commercial Bank Account No
8610053096
T.P.0776982755
0752483885

ஜ

# தமிழ் மக்களின் முன்மாதிரியை கண்டு சிங்களவர்கள் வெட்கப்படவேண்டும்

## ஐ.ம.முன்னணியின் பொதுச் செயலாளர்

சரத் பொன்சேகாவுக்கு இன்று ஏற்பட்டுள்ள துரதிர்ஷ்ட நிலை கண்டு சந்தோசப்படவேண்டிய தமிழ் உணர்வாளர்கள் அவரின் விடுதலைக்காக போர்க்கொடி தூக்கியுள்ளனர் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் ந.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

சரத்பொன்சேகாவை விடுவிக்கக்கோரி ஐக்கிய தேசியக்கட்சி ஏற்பாடு செய்த கையெழுத்து வேட்டையின் அங்குரார்ப்பண நிகழ்வு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கை மனிதவுரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. தமிழ் பேசும் ஆயிரக்கணக்கான மக்கள் எவ்வித குற்றமும் செய்யாது வருடக்கணக்காக மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சரத்பொன்சேகா இன்று சிறையில் வாடுகின்றார். இவருக்கு இன்று ஏற்பட்டுள்ள இந்நிலை கண்டு சந்தோசப்படவேண்டிய தமிழ் மக்கள் அவரை மனிதாபிமானத்துடன் பார்க்கின்றனர் அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்படவேண்டும் என்ற மன நிலையில் உள்ளனர். அவரின் விடுதலைக்காக தம்மாலான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார்கள். இதன் ஓர் அங்கமாகவே இக்கையெழுத்து வேட்டையில் நாம் கலந்து கொண்டுள்ளோம். தமிழ் மக்களின் இத்தகைய முன்மாதிரியான நடவடிக்்கையைக் கண்டு சிங்களவர்கள் வெட்கப்படவேண்டும். தேசத்தை மீட்டெடுப்பதற்காக தனது உயிரையும் துச்சமென மதித்து போர்க்களத்தில் குதித்து வெற்றி கண்ட சரத் பொன்சேகா சிறை வைக்கப்பட்டுள்ளார். அவரின் விடுதலைக்காக இன மத பேதங்களை மறந்து நாம் ஒன்றிணைய வேண்டும். அதேவேளை எவ்வித தவறும் செய்யாது அப்பாவித்தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக எவ்வித விசாரணைகளும் இன்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான இலங்கையிலே சர்வாதிகாரம் கொண்டவர்களால் மனிதவுரிமை தொடர்ந்தும் மீறப்பட்டு கொண்டேயுள்ளது. ஆகவே நாம் இவற்றைக் கண்டித்து கிளர்ந்தெழ வேண்டும்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டிருந்தால் கூட இன்று அவர்கள் குடும்பத்தினருடன் இணைந்து வாழ வழி பிறந்திருக்கும்.

ஏன் இவ் வாறு வஞ்சம் தீர்க்கப்படுகிறது. இத்தகையவர்களை நீதியின் முன் நிறுத்துங்கள்.

அவர்கள் மீது குற்றம் சாட்டமுடியவில்லையானால் விடுதலை செய்யுங்கள் எனவும் தெரிவித்தார். (அ-2)

## கொத்மலையில் எலும்புக்கூடு மீட்பு

கொத்மலையில் உள்ள வீடொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் மனித எலும்புகளை பரிசோதனைக்குட்படுத்துவதற்காக கொழும்பிலுள்ள இரசாயன பகுப்பாய்வு பிரிவிற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையை கம்பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

கொத்மலையில்அமைந்துள்ளமகாவலி அதிகார சபைக்கு சொந்தமான விடுதி ஒன்றில் இருந்தே இந்த மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாககம்பளைபொலிஸார் கூறினர்.

கடந்த சனிக்கிழமை மாலை ஊழியர்கள் சிலர் இந்த விடுதியை சுத்தம் செய்து கொண்டிருந்த போது விடுதியின் மலசலகூடத்திற்குள் சில மனித எலும்புகள் காணப்பட்டதை தொடர்ந்து தமக்கு தகவல் வழங்கியதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். பொலிஸார் இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## புலி இருந்திருந்தால் மரபுரிமை பேணப்பட்டிருக்கும்-எல்லாவலதேரர்

மரபுரிமை ஸ்தானங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். கிழக்கில் மரபுரிமை ஸ்தானங்கள் நாசமாக்கப்படுகின்றன. புலி இருந்தால் ஆபத்து ஏற்பட்டிருக்காது என்று பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மரபுரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இன, மத ரீதியாக மரபுரிமைகளைப் பார்க்கக் கூடாது. கிழக்கில் புதையல் தோண்டுவதற்காக சென்றோர் அங்கு புலி இருந்தமையினால் திரும்பி வந்துவிட்டனர். புலி இருந்திருந்தால் மரபுரிமை ஸ்தானங்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## அரசியல்கைதிகளின் விடுதலை குறித்து அரசு சிந்திக்க வேண்டும்

### காணாமல் போனோரை கண்டறியும் குழு

காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? அல்லது கொல்லப்பட்டு விட்டார்களா? என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி நேற்று பாரிய எதிர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப் போவதாக காணாமல் போனவர்களை கண்டறியும் குழு அறிவித்துள்ளது.

தமிழ் அரசியல்கைதிகள் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் இவர்களின் விடுதலை குறித்தோ உரிமைகள் குறித்தோ சிந்திப்பதில்லை. சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் கூட தமிழ் கைதிகளுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்றும் அக்குழு குறிப்பிட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நாட்டில் காணாமல் போனவர்களின் பிரச்சினை மேலோங்கியுள்ளது. அரசு இவர்கள் தொடர்பில் எவ்விதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. காணாமல் போனவர்களை தேடித் தருமாறு வலியுறுத்தி அவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டம் செய்யும்போது இனந்தெரியாத குழு தாக்குகின்றது. அது மட்டுமன்றி அரசாங்கம் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எவ்வாறானதொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை.

மாறாக தமிழ்மக்கள் இன்னோரன்ன பிரச்சினைகளை எதிர்கொள்ளக் கூடிய சூழலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இன்று அரசுக்கு எதிராகவும் நாட்டில் காணாமல்போன உறவுகளின் உரிமைக்காகவும் அனைத்து தரப்புகளும் இணைந்து போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

இதில் ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி. ஐக்கிய சோஷலிசகட்சி உட்பட பல மனித உரிமைகள் அமைப்புக்கள் கலந்து கொள்ளவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## ஹஜ் கடமைக்கு சென்றவர்கள் முறைப்பாடுகளை தெரிவிக்கலாம்

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஹஜ் முகவர்களினூடாக இவ்வருடம் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றச் சென்றவர்கள் முகவர் தொடர்பான கருத்துக்களையும் முறைப்பாடுகளையும் தெரிவிக்கலாம் என மேற்படி திணைக்களம் அறிவித்துள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வை.எல்.எம்.நவவி இது தொடர்பான அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பதிவு செய்யப்பட்ட ஹஜ்முகவர் நிலையங்களூடாக இம்முறை கடமையை நிறைவேற்றச் சென்றவர்கள் தமக்கு ஏற்பட்ட அநீதிகள் மற்றும் அசௌகரியங்கள் தொடர்பாக முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

முறைப்பாடுகளை தெரிவிக்க விரும்புவோர் பணிப்பாளர் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இல.180 ரி.பி.ஜயா மாவத்தை கொழும்பு 10 என்ற முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை அடுத்தாண்டு புனித ஹஜ் கடமைய்யை நிறைவேற்றவுள்ளவர்கள் மேற்படி திணைக்களத்தில் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறும் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். இதன்போது முதல் தடவையாக கடமையை நிறைவேற்ற உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## 10 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

மன்னார் தாழ்வுபாடு பிரதேசத்தில் பத்து கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிறவுண் சுகர் மற்றும் ஹெரோயின் ஆகிய போதைப் பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இதன் எடை சுமார் நான்கு கிலோ கிராம் என குறிப்பிடப்படுகின்றது. இலங்கைக் கடற்படையினர்குறித்த போதைப்பொருட்களை மீட்டுள்ளதாகவும் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து ஒன்பது சிம் அட்டைகளும் 2 ஆயிரம் ரூபா இந்திய நாணயமும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பாஸ் நடைமுறைகளில் மாற்றம் கொண்டுவரப்படும்

## அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு

(கொழும்பு)

மன்னார் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாஸ் நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்படும் என அமைச்சர் ரிஷாத் பதியூதீன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அவர்கள் கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்ட செயலகம் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியதுடன் நான்கு கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் மாவட்ட செயலாளரிடம் கையளித்தனர்.

மீனவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற உயர் மட்டக் கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

மீனவர்களுக்கு வித்தியாசமான முறையில் வழங்கப்பட்டுள்ள பாசை இரத்துச் செய்து அனைவரும் ஒரே சமமாக மதிப்பிடக் கூடிய விதத்தில் பாஸ் நடைமுறையை மாற்ற நடவடிக்கை எடுப்பேன்.

இவ்விடயம் தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் மற்றும் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்து விரைவில் தீர்வைப் பெற்றுத் தருவேன்.

சிலிண்டர் பாவனை வேறு மாவட்டங்களில் நடைமுறையில் இருந்தபோதிலும் அதற்கு சில விதிமுறைகள் உள்ளன. சுமார் இருபது கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்றே சிலிண்டரைப் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது.

இந்நிலையில் அத்தூரம் மன்னாருக்கு ஏற்புடையதாக இல்லை. ஏனென்றால் மன்னாருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தூரம் அதை விடவும் குறைவாக உள்ளது. இதனால் மன்னார் மீனவர்கள் சிலிண்டரைப் பயன்படுத்தமுடியாதுள்ளனர்.

ஆகவே குறிப்பிட்ட தூர எல்லைக்குள் அதனை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தர முயற்சி எடுத்துள்ளேன்.

இப்பகுதி மீனவர்கள் கடல் அட்டை, சங்கு என்பன பிடிப்பதற்கு மீன்பிடித்திணைக்களத்திடம் அனுமதிபெற்றுள்ள போதிலும் கடற்படையினர் அனுமதி மறுக்கின்றனர். இப்பிரச்சினைக்கும் அவர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பேன்.

அதேவேளை இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாகவும் ஜனாதிபதி மற்றும் உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தீர்மானம் பெற்றுத்தருவேன் எனவும் கூறினார். (அ-2)

# ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட மேற்குலகை நாட்டுக்குள் அனுமதிக்கக்கூடாது

## குணதாச அமரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை எத்தகைய தன்மையினை கொண்டிருந்தாலும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதே ஐ.நா. உள்ளிட்ட மேற்குலக சக்திகளின் நோக்கமாகும்.

எனவே, நவநீதம்பிள்ளை போன்றவர்களை நாட்டுக்குள் அரசு அனுமதிக்கக் கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

-நாட்டிற்கு எதிரான சர்வதேச செயற்பாடுகள் தீவிரம் கண்டுள்ளன. இன்று இலங்கையை ஏதாவது வழியில் போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா, ஐ.நா. மற்றும் கனடா போன்ற நாடுகள் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்தச் சவாலை அரசாங்கம் புத்திசாலித்தனமாக எதிர்கொள்ள வேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகும் வரை மேற்படி தீய சக்திகள் இலங்கையை அவதானித்துக் கொண்டுள்ளன.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள். பேரவையின் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளையை நாட்டிற்குள் அனுமதிக்கக்கூடாது.

பான் கீ மூனும் நவநீதம்பிள்ளையும் தான் தற்போது இலங்கையை மண்டியிட வைக்க சரியான கால நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கைக்கு போதுமான படை பலமும் இயற்கை வளங்களும் உள்ளன.

எனவே மேற்குலக நாடுகளில் தங்கியிருக்கம் தேவை இலங்கைக்கு கிடையாது.

ஆகவே இலங்கை அரசு நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி செயற்பட வேண்டும். குறிப்பாக இலங்கைக்கு எதிராக செயற்படுபவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார். (அ-2)

## பஸ்விபத்தில் ஒருவர் பலி; 10 பேர் காயம்

(கொழும்பு)

கெப்பிட்டி கொல்லாவ, அதாகட பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற பஸ் விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் 10 பேர் காயங்களுக்குள்ளான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புல்மோட்டையில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த தனியார் பஸ் வண்டியொன்றே பாதையை விட்ட விலகிச் சென்று அங்கிருந்த வயல் வெளிக்குள் குடை சாய்ந்துள்ளதாக கெப்பிட்டி கொல்லாவ பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரி ரஞ்சித் கும்புரேகம தெரிவித்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இலங்கை விவகாரம் தொடர்பில் ஐரோப்பா தலையீடு செய்யாது

## ஜெப்ரி வென் ஓர்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை விடயத்தில் ஐரோப்பா தலையீடு செய்யாது என ஐரோப்பிய நாடாளுமன்றின் பாதுகாப்பு பேச்சாளர் ஜெப்ரி வென் ஓர்டன் தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்தினால் இலங்கைக்கு சுமத்தப்பட்டு வரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சிறந்த பதிலாக அமைய வேண்டும்.

இந்த நிலையில் குறித்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பகிரங்கப்படுத்தப் பட்டதன் பின்னர் இலங்கை தொடர்பான சர்வதேசத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் தொடர்பில் ஒரு நாட்டு விடயத்தில் வேறு நாடுகள் தலையீடு செய்யக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது ஓர்டன் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்றில் பிரதான தலைப்புச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

30 ஆண்டுகளாக போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பயங்கரவாதத்தில் கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களும் முஸ்லிம்களுமே என்றும் அவர் தெரிவித்துள்ளதாகவும் சிங்கள பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# ஜனவரி இரண்டாவது வாரத்தில் அமைச்சரவையில் மாற்றம்?

இலங்கையில் அமைச்சரவை மாற்றம் மற்றும் புதிய பிரதியமைச்சர்களை நியமிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்தில் சுபதினத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

அத்தோடு பதினைந்து அரச நிறுவனங்களுக்கான புதிய தலைவர்கள் நியமிப்புக்கான பட்டியலும் அரசாங்கத்தால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக அரசியல் வட்டாரங்களிலிருந்து மேலும் தெரிய வருவதாவது,

வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவுடன் அதற்கு அடுத்த வாரத்தில் அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் ஜனவரி மாதத்தில் இரண்டாவது வாரத்தில் வரும் சுபதினத்தில் அமைச்சரவை மாற்றங்களை மேற்கொள்ளவும் புதிய பிரதியமைச்சர்களை நியமிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பான தெரிவுகள் கடந்த வாரம் ஜனாதிபதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறியவருகின்றது.

இதேவேளை அரச நிறுவனங்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதத்தில் புதிய தலைவர்களை நியமிக்கும் பட்டியலும் அரசாங்கத்தால் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

பதினைந்து நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்படவுள்ளதோடு மேலும் 12 நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமிப்பது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அறியக்கிடக்கிறது. (அ-2)

# பச்சிலைப்பள்ளியில் மலசலகூடங்கள் அமைக்கும் பணியை ஆரம்பிக்கமுடிபு

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களின் நலன் கருதி 10 மில்லியன் ரூபா செலவில் 100 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகப் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் முகுந்தன் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்திலிருந்து வாழ்ந்த மக்கள் கடந்த இரு மாதங்களுக்கு முன்பு சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். அடிப்படை வசதிகளில் ஒன்றான மலசலகூட வசதியின்றி இவர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்ததுடன் சுகாதார சீர்கேடுகளுக்கும் உள்ளானார்கள். உதவி அரசாங்க அதிபர் எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக யுனிசெப் நிறுவனமும் வடமாகாண சமூக சேவைத்திணைக்களமும் இணைந்து மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளன. இதைத் தொடர்ந்து தற்பொழுது இப்பிரதேசத்தில் மலசலகூட வசதியில்லாத மக்களுக்கு 10 மில்லியன் ரூபா செல்வில் 100 மலசலகூடங்கள் அமைக்கப் பட்ட வருகின்றன.

ஒவ்வொரு மலசலகூடமும் ஒரு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது மலசல கூடம் அமைக்கும் பணி பூர்த்திய டைந்ததும் மக்கள் மத்தியில் நிலவி வந்த மனக்குறையும் நீங்கிவிடும் என்று உதவி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# 15.53 சதவீத ஆசிரியர்களே பயிற்றப்பட்டவர்கள்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள ஆசிரியர்களில் 15.53 சதவீதமே பயிற்றப்பட்டவர்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி கடந்த வருடம் நாட்டின் 2 இலட்சத்து 15 ஆயிரத்து 638 ஆசிரியர்களில் 15.53 சதவீதமானோர் மாத்திரமே பயிற்றப்பட்டவர்களாக இருந்தனர். அதற்கு முந்தைய வருடம் இச்சதவீதம் 18.21 ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடுமுழுவதும் சமத்துவமான கல்வி மட்டத்தைப் பேணுவதற்கு இந்நிலை ஒரு தடையாகவுள்ளது எனத் தெரிவித்துள்ள கணக்காய்வாளர் நாயகம், ஆசிரியர் பயிற்சி நடைமுறைகளை கிரமமாக்கும்படி வலியுறுத்தியுள்ளார். (அ-2)



வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியுடன் இலங்கைக்கான கில்ட் கவாட்ஸ்ரான்ட் தலைமையிலான நோர் வேயின் தூதுக்குழுவினர் ஆளுநர் பணிமனைய்யில் வடமாகாண நிலைமைகள் பற்றி கலந்துரையாடுவதனைப் படத்தில் காணலாம். (படம்: என்.குமார்)


# யாழ்ப்பாண மாநகர சபை ஆதனவரி அறிவித்தல்-2011

2011 ஆம் ஆண்டு நான்காம் கந்தாயத்திற்கான ஆதனவரியினை 2011.12.30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு முன்பதாக எவ்வித தண்டமும் இன்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக்காணிகள் -15%
ஏனைய காணிகள் -20%

நிலுவை உட்பட 2011 ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவைத் தொகையினைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252: பிரிவுXII 252 (I) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் *மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்* என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திருமதி. யோ.பற்குணராசா,
முதல்வர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(சி/5177)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 21-12-2011 முதல் 16-12-2014 வரை




(சித்திரை 3,4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)

**ஜென்ம இராசியில் சனி! சிந்தித்து செயற்பட வேண்டும் இனி!**

***எடுத்த காரியத்தை எளிதில் முடிக்கும் ஆற்றலைப் பெற்ற துலாம் இராசிநேயர்களே!***

உங்கள் இராசி நாதனாக சுக்ரன் விளங்குவதால் எல்லாவிதமான சுகங்களையும் நீங்கள் அனுபவிக்க ஆசைப்படுவீர்கள். அறிமுகமானவர்கள் மட்டுமல்லாமல் அறிமுகமில்லாதவர்கள் கூட உங்களிடம் நெருங்கிப் பழக துடிப்பார்கள். காரணம் உங்கள் அணுகுமுறை மற்றவர்களை கவருவது தான்.

சுக்ரபலம் பெற்ற மனைவி உங்களுக்கு வாய்க்கும் பொழுதுதான் வாழ்க்கையில் சந்தோஷங்களை மட்டுமே நீங்கள் சந்திக்க முடிகின்றது.

நீதிக்கும் நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் பாதிக்கும் பொழுது மட்டுமே பயபக்தியோடு சாமி கும்பிடுவீர்கள். அந்த வழிபாட்டில் அதிக கவனம் செலுத்தினால் தொந்தரவுகளில் இருந்து விடுபடலாம்.

குறிப்பாக உங்கள் இராசிநாதன் சுக்ரன் இருக்கும் சாரபலமறிந்து சுய ஜாதகத்தில் நடக்கும் தெசாபுத்திக்கேற்ப பரிகாரங்களைச் செய்தால் ஏழரைச் சனி காலத்தில் கூட நீங்கள் இன்பங்களை வரவழைத்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த சனிப் பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சிதானா என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஏழரைச் சனியில் இது ஜென்மச்சனி!**

மார்கழி 5 ஆம் திகதி முதல் உங்கள் இராசியான துலாம் இராசியிலேயே சனி சஞ்சரித்து உச்சம் பெறுகிறார். இதன் விளைவாக அதன் பார்வை 3,7,10 ஆகிய இடங்களில் பதிவதால் சகோதரர், சகாயம், களத்திரம், பயணம், தொழில், உத்தியோகம், செயற்பாடுகள் ஆகியவற்றிற்குரிய ஆதிபத்தியங்களில் எல்லாம் எண்ணற்ற மாற்றங்களை வழங்கப்போகிறார்.

உங்கள் இராசிக்கு 4,5, ஆகிய இடங்களுக்கு அதிபதியாக இருப்பதால் சனி உங்கள் இராசியில் உச்சம் பெறும் பொழுது குடும்பத்தில் ஒருவர் மாறி ஒருவருக்கு உடல் நலத் தொல்லைகள் உருவாகலாம். இருப்பினும் உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்புக் கிரகம் என்பதால் முறையாக சில வழிபாடுகளை வைத்துக் கொண்டால் உங்கள் முன்னேற்றத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

இதுபோன்ற சனியின் ஆதிக்கக் காலங்களில் ஆதியந்தப்பிரபு இருக்கும் ஆலயங்களில் நீங்கள் அடியெடுத்து வைக்கலாம். இல்லத்து பூஜையறையில் அந்தப் படத்தை வைத்து வெற்றிலையும் அறுகம்புல்லும் இணைந்த மாலையை அதற்கு சூட்டினால் வெற்றிகள் வந்து சேரும். சிறப்பு வழிபாடாக நாராயண சாமியை வழிபாடு செய்து வாருங்கள். தங்கு தடைகள் அகலும். தனஇலாபமும் குவியும்.

பொதுவாக உச்ச சனியை குரு பார்ப்பதால் குருப்பெயர்ச்சி வரை மலைபோல் வந்து கொண்டிருந்த துயர் பனிபோல் விலகும். அதற்குப் பின்னர் மகிழ்ச்சியை மட்டுமே நிரந்தரமாக்கிக் கொள்ள இதுபோன்ற வழிபாடுகள் தான் உங்களுக்கு தேவை.

**மந்தன் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்.**

உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை 3,7,10 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்க அதிக அளவில் பிரயாசை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இன்னும் 2 அரை ஆண்டுகளுக்கும் மேலாக தங்கியிருந்து அங்கு ஆட்சி செய்யப்போகிறார். எனவே அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வதன் மூலமே அல்லல்களிலிருந்து விடுபட இயலும். பொதுவாக உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். அலைச்சலைக் குறைத்துக் கொள்ளுங்கள். அடுத்தவர்களுக்கும் முதியவர்களுக்கும் உதவி செய்து அவர்களது வாழ்த்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

7 ஆம் இடத்தைச் சனி பார்ப்பதால் இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்குவரும். இருந்தாலும் மணம் முடிக்கும் இடம் நல்ல இடம் தானா என்று ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். இல்லையேல் மறுபடி, மறுபடி பிரச்சினைகள் எழலாம். தொழில் புரிபவர்கள் பணியாளர்களை மாற்றும் எண்ணம் மேலோங்கும். அது மட்டுமல்ல பங்குதாரர்களையும் மாற்றுவீர்கள். சனியின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் வேலைப்பளு கூடும். குடும்பச் சுமையும் அதிகரிக்கும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலுமா என்பது சந்தேகம் தான்.

**குருப் பெயர்ச்சிக் காலம்!**

சனி துலாம் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறுகிறது.17.05.2012 இல் இடப இராசியிலும் 28.05.2013 இல் மிதுன இராசிலும் 13.06.2014 இல் கடக இராசியிலும் குரு சஞ்சரிக்கப் போகிறார். இடப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். பூமி வாங்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். புதிய இல்லம் கட்டி குடியேறும் வாய்ப்பு கிட்டும்.

மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 1,3,5 ஆகிய இடங்களில் பதிவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். பேரும் புகழும் பெருமையும் சேரும். அரசியல் அனுகூலம் உண்டு. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும்.

கடக இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதிவால் கல்யாண கனவுகள் நனவாகும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பகல்- இரவாக பாடுபட்டதற்கேற்ற பலன்களும் வந்து சேரும். இதுபோன்ற காலங்களில் நந்தீஸ்வரர் வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. சர்வேஸ்வரர், முனீஸ்வரர், சனீஸ்வரர் ஆகியோரையும் முருகப்பெருமானையும் வழிபட்டு வந்தால் முன்னேற்றங்கள் தடையின்றி வந்து சேரும்.

**இராகு-கேது பெயர்ச்சிக் காலம்.**

02.12.2012 இல் துலாம் இராசியில் இராகுவும் மேட இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 21.06.2014 இல் கன்னி இராசியில் இராகுவும் மீன இராசியில் கேதுவும் உலா வரப் போகிறார்கள். முதல் இராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் திடீர் திடீரென முடிவுகளை மாற்றிக் கொள்வீர்கள். திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிப் போகலாம். சர்ப்பதோஷம் அதிகமாக இருப்பதால் முறையாக சர்ப்ப சாந்தியைச் செய்து கொண்டால்தான் முன்னேற்றத்திற்கு வழி பிறக்கும். அடுத்த இராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் திடீர் பயணங்கள் அதிகரிக்கும். தெய்வதிருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். கைநிறைய குவிந்த பொருளைக் கொண்டு கட்டடப் பணியைத் தொடர ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் வி.ஆர்.எஸ் வாங்கும் வாய்ப்பு உருவாகும். திசை மாறிய தெய்வங்களை வழிபட்டால் தித்திக்கும் வாழ்க்கை அமையும்.

**சனியின் வக்ரகாலம் பொற்காலமாக மாற!**

உங்கள் இராசியில் உச்சமடையும் சனி 5 முறை வக்ரமடைந்து நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 4,5 க்கு அதிபதியான சனி வக்ரமடைவதால் ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமலிருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் எடுக்கும் திடீர் முடிவுகள் உங்களுக்கு பிரச்சினைகளை உருவாக்கலாம். பூமிகாரகனின் ஆலயத்திற்கு செல்வதன் மூலம் பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம்.

**சனியின் சஞ்சாரப் பலன்கள்**

சிக்கல்களை நீக்குமா? இல்லை வரவழைக்குமா? இதுவரை உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இப்பொழுது ஜென்ம இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இது உடல் நலம், அறிவாற்றல், புகழ், கீர்த்தி, பொறுப்புக்கள் ஆகியவற்றைக் குறிக்கும் இடமாகும்.அங்கிருந்து கொண்டு 3,7, 10 ஆகிய இடங்களையும் பார்த்து புனிதமடைய வைக்கிறார்.24 மணிநேரமும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நேரமாகும். கல்வி கற்பவர்கள் கவனக்குறைவாக இருந்தால் தேர்வில் வெற்றிபெற இயலாது.

எனவே எந்த காரியத்தைச் செய்தாலும் ஒரு முறைக்கு இருமுறை சிந்தித்து செய்யுங்கள். அருகில் இருக்கும் ஆலயங்களுக்கு சென்று விநாயகப் பெருமானையும் அனுமனையும் சனீஸ்வரரையும் அர்ச்சித்து வழிபட்டு வாருங்கள். அர்ச்சனைகள் செய்தால் பிரச்சினைகள் தீரும்.

## எடுத்த காரியத்தை விரைந்து முடிபுக்கு கொண்டுவரும் ஆற்றல் பெற்றவர்கள்

## சிவல்புரிசிங்காரம்

**தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு**

சனியை வழிபட்டால் சந்தோஷங்கள் வந்து சேரும். இனியவாழ்க்கைக்கு இது உத்தரவாதமென்று முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் வார வழிபாடாக வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகையை வழிபட்டு வந்தால் இன்பங்கள் வந்து சேரும்.


சிறப்பு வழிபாடாக சக்கரத்தாழ்வாரையும் திருமாலையும் இலக்குமியையும் வழிபட்டு வந்தால் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும். அங்குள்ள அனுமன் சந்நிதியில்

**அஞ்சனை பெற்ற திருமகனே!**<br>
**அருகில் வந்தே துதித்திட்டேன்!**<br>
**நெஞ்சில் கவலை போக்கிடுவாய்**<br>
**நிலையாய்ச் செல்வம் அளித்திடுவாய்!**

என்ற பாடுங்கள் எண்ணங்கள் நிறைவேறும்.

(தொடரும்)

# தியானம்



## ஆனந்தத்தின் வாசல்

**ஆன்மீகம் 08**

கேள்வி: சக்தி நிலையை உயர்த்தவும், மகிழ்ச்சியாய் இருக்கவும் ஒருவருக்கு யோகப்பயிற்சிகள் மிகவும் அவசியமானதா?

சத்குரு: யோகா என்பது ஒரு பயிற்சி அல்ல. தற்போது அது ஒரு பயிற்சியாகக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. யோகா அறிவியல் என்பது தன்னிலை சார்ந்த அறிவியல். தன்னிலை சார்ந்த பரிமாணம் இல்லாமல் கற்றுக்கொடுக்கப்பட்டால், இது வெறும் உடற்பயிற்சி போலத்தான். இது ஒரு பொறுப்பில்லாத தன்மையாகிவிடும். ஆனால், உலகில் நடைபெறும் 100% யோக வகுப்புகள் எல்லாமே அந்த நிலையில்தான் நடக்கின்றன. வெளிச் சூழலின் சார்பு மேலும்மேலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்தியாவில் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் யோகவகுப்புகள் மேற்கத்திய நாடுகளில் இருந்து மீண்டும் இங்கே வந்திருக்கின்றன. மேற்கத்திய நாடுகளில் பயிற்றுவிக்கப்படும் யோக வகுப்புகளை குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க ஐக்கிய நாடுக்ளிலும் கற்றுத்தரப்படும் யோக வகுப்புகளைப் பார்த்தால் மிகமிகப் பைத்தியக்காரத்தனமாகத் தெரியும். எல்லாவற்றையும் அவர்கள் மிக எளிமையர்ன உடற்பயிற்சிகளாகவும், தர்க்கரீதியாக சரியானதாகவும் அமைத்து விட்டார்கள். நீங்கள் அவர்களோடு அதைப்பற்றி வாதிடக்கூட முடியாது. அந்த அளவிற்கு அதை தர்க்க ரீதியாக வடிவமைத்து வைத்திருக்கிறார்கள். வெளிநிலையை சார்ந்து இருப்பது என்ற ஒரு அச்சம் மனிதனை நிறைவடையச் செய்யாது இல்லையா? ஏனென்றால் நீங்கள் எல்லாவற்றையுமே வெளியேதான் பார்க்கத் தொடங்குவீர்கள்.

குடும்பங்கள் எதற்காக உடைகின்றன? ஏனென்றால் நீங்கள் அவற்றை வெளிநிலை சார்ந்தாகப் பார்த்ததால் தான். நான் ஏன் என் பணத்தை என் மனைவிக்கு தரவேண்டும், என் கணவருக்குத் தரவேண்டும்? இது நான் சம்பாதித்தது, எதற்காக இதை பங்கிட்டுக் கொள்ளவேண்டும்? நான் தான் அதிகமாக சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன். நீ குறைவாக சம்பாதித்துக் கொண்டிருக்கிறாய். இதெல்லாம் வந்துவிட்டன. சில காலங்களுக்கு முன்னால் இப்படிப்பட்ட விடயங்களே இல்லை, இல்லையா? நீங்கள் மிக அதிகமாக வெளிநிலை சார்ந்து சிந்திக்கும்போது எல்லாமே தனித்தனியாகப் பிரிந்து போகிறது. மனிதர் என்ற தன்மையும் பிரிந்து போகின்றது. எனவே தன்னிலை சார்ந்தது என்பதுதான் யோகா. இந்த தன்னிலை சார்ந்த பரிமாணம் இல்லாவிட்டால் யோகா என்பது ஒரு நல்ல விடயம் இல்லை. அது ஒரு வெறும் பயிற்சி மட்டும்தான். ஏதோ ஒரு பயிற்சியைச் செய்ய வேண்டும் என்று மட்டும் நீங்கள் விரும்பினால், யோகாவை விடமிக நல்ல பயிற்சிகள் இருக்கின்றன.

யோகப்பயிற்சி என்பதில் தன்னிலை சார்ந்த பரிமாணம் இணைக்கப்பட்டுள்ளது. பெற்றுக்கொள்ளும் இயல்போடு உடைய ஒரு உறுதியான சூழலை நீங்கள் உருவாக்காவிடில், இந்த தன்னிலை சார்ந்த அம்சம் மாற்றமடைய வாய்ப்பில்லை. மக்களுக்கு இதன் மீதுள்ள ஈர்ப்பின் காரணமாகவோ அல்லது வணிக ரீதியான மதிப்பு இருப்பதன் காரணமாகவோ இன்றைய காலகட்டத்தில் யோகா என்பது ஒரு உறுதியான சூழலில் நடத்தப்படாமல் இருக்கிறது. அதனால்தான் இதன் மீது உங்களுக்கு ஆர்வம் குறைந்துவிட்டது.

கேள்வி: தியானம் செய்யும்போது உடலுக்கு என்ன நேர்கிறது?

சற்குரு: உதாரணமாக மன அழுத்தம் மிக்க சூழ்நிலைகளாலும் அனுபவங்களாலும் மக்கள் பாதிப்படைகிறார்கள். நீங்கள் எப்படி நடக்க வேண்டும் என்று நினைத்தீர்களோ அப்படி இல்லாத ஒரு சூழலில் இருத்தப்பட்டால், உங்களை பதற்றம் தொற்றிக் கொள்கிறது. இந்தப்பதற்றத்தின் காரணமாக உங்கள் உடலின் வளர்சிதை மாற்றம் அதிகரித்து நோய்த் தன்மையை ஏற்படுத்துகிறது. இன்று விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் மனிதர்களைத் துன்புறுத்தும் நோய்களில் 70% மனரீதியானவை என்கிறார்கள். ஏனென்றால் மனதின் கட்டுக்கடங்காத செயற்பாட்டினை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. எனவே அவர்கள் நோய்த்தன்மை அடைகிறார்கள். மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களில் 30% மட்டுமே வெளியிலிருந்து வரக்கூடியவை. 70% அதிகமான நோய்கள் உள்ளிருந்தே உருவாகின்றன. எனவே யோகப் பயிற்சிகளை நீங்கள் தொடர்ந்து செய்யும் போது உங்களுடைய உடல் இயக்க அமைப்பு அமைதியாகவும் எச்சரிக்கையுடனும் இருக்கிறது. அப்படி இருக்கும்போது மன அழுத்தம் என்ற பேச்சிற்கே இடமில்லை. சில வாரகால பயிற்சிக்குள்ளேயே தங்களுக்குள் ஒரு சமநிலையையும் உடல் செயற்பாட்டில் ஒரு ஸ்திரத்தன்மையையும் ஒரு கட்டுப்பாட்டில் இருப்பதையும் நீங்கள் பார்க்க முடியும்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# முஸ்லிம்களின் ஆடற்கலைகளில் களிகம்பு

**04**



"களிகம்பு ஆட்டம்"

களிகம்பு ஆட்டம் தொடங்குவதற்கு முன்னதாக பிரார்த்தனை நடைபெறும். மூஸ்லிம்கள் எந்த ஒரு விடயத்தை ஆரம்பிப்பதாயினும் பிரார்த்தனையோடு ஆரம்பிப்பது வழக்கம். கோலாட்டம் மிகவும் சிக்கலான ஆட்டமாதலினால், - ஆடும்போது கைத்தடிகள் தலையையோ கையையோ பதம் பார்த்து விடாமலும் ஆடும் போது ஆட்டம் இடையில் பிழைக்காமலும் இருக்க வேண்டி இப் பிரார்த்தனை அமையும். இதன் பின் ஆட்டக்காரரர்கள் அனைவரும் அண்ணாவியாரிடமிருந்து தனது ஆட்டத்திற்கான இரு கோல்களையும் பெற்று இரு கைகளிலும் பிடித்தவர்களாக நிற்பர். இதனிடையில் ஆடப்போகின்ற இடத்தின் நடுவில் ஓர் உரலைக் கவிழ்த்து அதற்கு மேல் ஒரு விரிப்பு விரித்து அதன் மேல் ஓர் குத்துவிளக்கினை ஏற்றி எரிய விடுவர். இது வட்டமாக நின்று ஆடும் ஆட்டக்காரர்கள் மிகவும் நெருங்கி ஒன்று கூட விடாமலும் ஆட்ட அரங்கில் உள்ள விளக்குகள் அணைந்தால் நடுவில் இருக்கும் குத்துவிளக்கினுடைய வெளிச்சத்தில் தொடர்ந்து ஆடி முடிப்பதற்கும் உதவியாக இருக்கும். சில இடங்களில் குத்துவிளக்கினை எடுத்துவிட்டு அண்ணாவியார் உரலின் மேல் ஏறிநின்று பாடுவார். இதன் பின் ஆட்டம் ஆரம்பமாவதற்காக அண்ணாவியார் விருத்தம் சொல்வார். விருத்தங்கள் அதிகமாக சீறாப்புராணம், செய்யிதத்துப் படைப்போர், மஸ்தான் சாகிபு பாடல் போன்ற நூல்களில் உள்ளதாகவே இருக்கும்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

3. திருவினும் திருவாய் பொரு
ளினும் பொருளாய்
தெளிவினும்தெளிவாய் சிறந்து
மருவினும்மருவாய் அணுவினுக்
கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்

பொருவினும் பொருவாய்
வடிவினும்வடிவாய்
பூதலத்துறைந்த பல்லுயிரின்

கருவினும் கருவாய் பெருதலம்
புரந்த
கருத்தனை பொருத்துதல்
கருத்தே

4. ஆதியே ஹூதுபே ஹௌதே
செய்ஹே
ஆசிக்கே சிரோன் மணியே
நீதியே நிறைந்த வாழ்வே
நித்தியமான ஹூவே
சோதியே சுடரே மணியே
சூட்சும கலிபத்துல்லாஹ்

காதிரே தஸ்கிகீரே
கண்மணி முகியித்தீனே

விருத்தம் ஆரம்பமானவுடன் ஆட்டக்காரர்கள் ஒன்றை வட்டமாகி வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் சுற்றிவருவதுடன் விருத்தத்தின் ஒவ்வோர் அடிகளின் பின்பும் மர்ஹபா நல்லதே! என்று கூறிக்கொள்வர் விருத்த முடிவை அண்ணாவியாருடன் சேர்த்து ஏகாரத்துடன் முடித்து ஒற்றை வட்டமாக உள்ளவர்கள் இரட்டை வட்டமாக மாறி தனது இரு கைகளில் உள்ள தடிகளையும் ஒத்த ஓசையோடு தட்டிக் கொள்வர்.

விருத்தம் பாடி முடிந்தவுடன் அண்ணாவியார் **தெய்தாம்தைய்** என்று கூறித் தாம் பாட இருக்கும் பாடலின் தருவை ஆரம்பிப்பார். அதைத் தொடர்ந்து ஆடுவோர் தருவைப் பாடுவார்கள். அண்ணாவியாரும் அவருக்கு உதவியாக இருப்பவரும் பாடலைப்பாட எதிரும் புதிருமாக நிற்கும் இரட்டை வட்டத்தில் உள்ள ஆட்டக்காரர்களும் தாளத்திற்கு அமைவாக ஆடத்தொடங்குவர். மட்டக்களப்பை அண்மிய பகுதியில், உள்ள களிகம்பு ஆட்டக் குழுவினர் ஆரம்ப ஆட்டமாக தன்னாளைச்சுற்றி ஆடுவர். இது திகிர்தை என்று வழங்கப்படுகிற மிக இலகுவான ஆட்டம். இதற்கான பாடல்கள் இறைஞ்சுதல்-பிரார்த்தனை-அவையடக்கம் ஆகிய கருப் பொருட்கள் கொண்டதாக இருக்கும்.

**பாவலர் சாந்தி முஹியித்தீன்**

(தொடரும்)

# நீரிழிவு நோயால் வரும் சில முக்கிய பிரச்சினைகள்

இந்த பாதிப்பு கண்டறியப்பட்டால் உடனடியாக மருத்துவ சிகிச்சையை பெற வேண்டும். விழித்திரையின் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு விட்டால் என்ன சிகிச்சை செய்தாலும் பார்வை இழப்பை தடுக்க முடியாது.

விழித்திரையில் ஓட்டை விரிசல் போன்று ஏதேனும் ஏற்பட்டிருந்தால் நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு லேசர் முறையிலான சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.

### நீரழுத்த நோய்

கண்களில் அழுத்தம் உண்டாகி பார்வை நரம்புகளை பாதித்து பார்வைக் குறையை உண்டாக்கும் நோய்தான் நீரழுத்த நோய். இதை **கிளாக்கோமா** என்பார்கள்.

இதில் இருபதுக்கு மேற்பட்ட வகைகள் இருந்தாலும் நான்கு முக்கிய வகைகள் அதிக பாதிப்பை ஏற்படுத்துபவை.

தீவிரமான கிளாக்கோமா, நீடித்த கியாக்கோமா. பிறவியிலிருந்து வரும் கிளாக்கோமா ஆகியவை முக்கியமானவை. இவை எல்லாமே கருவிழியில் அழுத்தத்தை உண்டாக்கும்.

கண்ணிலுள்ள நீர் சரியான முறையில் வடியாதபோது அதிக அழுத்தம் உண்டாகிறது. இதனால் கண் நரம்பு மற்றும் ரெட்டினாவின் இணைப்புப்பகுதியில் அழுத்தம் அதிகரித்து மூளைக்கு காட்சிகளை கொண்டு செல்லும் கண் நரம்புகளுக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தை தடுக்கிறது.

நீடித்த கண் அழுத்த நோயினால் இரத்த ஓட்டக்குறைவு அதிகரித்து கண் நரம்புகள் இறக்க நேரிடுகிறது. இதனால் பார்வையில் கறுப்புப் புள்ளிகள் விழுகின்றன. முதலில் பக்கவாட்டுக் காட்சிகள் மங்கலாகத் தெரியும்.

### அறிகுறிகள்

கண்களில் வலி, பார்வை இரட்டிப்பு, முகவலி, கண்சிவத்தல், குமட்டல், பார்வை மங்கலாகத் தெரிதல், நிறமாலையில் நிறம் தெரியாமல் காட்சிகள், கறுப்பு வெள்ளையாகத் தெரிதல் ஆகியவை முக்கிய அறிகுறிகள் ஆகும்.

### நோய் அறிதல்

கண் அழுத்தம் அதிகமாகி மெல்ல மெல்ல நரம்புகளை தளரச் செய்கிறது. முதலில் இந்த தளர்வு கண் நரம்பின் ஓரப்பகுதிகளில் ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் பார்வை இழப்பும் ஓரப்பகுதிகளில் தான் தெரியும்.

இதை முதலிலேயே பாதிக்கப்பட்டவரால் கண்டுபிடிக்க முடியாது. நோய் முற்றி பார்வை மோசமாகும் போது தான் கண்டறிய இயலும்.

இந்த வியாதியை ஆரம்ப நிலையில் கண்டறிந்து கட்டுப்படுத்த வேண்டும்.

நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களை அதிகமாக தாக்கும் என்பதால் நாற்பது வயதுக்கு கடந்தவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை கண் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோய் தவிர பரம்பரையாக வருகிறது குடும்பத்தில் ஒருவருக்கு கிளாக்கோமா இருந்தால் அவருக்கு இரத்த சம்பந்தப்பட்டவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகம். எனவே குடும்பத்தினர் அனைவரும் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

கிளாக்கோமா என்பது கண் நரம்பு சார்ந்த பிரச்சினை. இதனால் ஆறு கோடி பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பார்வை இழந்தவர்கள் பார்வை இழந்தவர்கள் எண்ணிக்கை சுமார் 75 இலட்சம்.

கிளாக்கோமா இருந்தால் உடனடியாக கண்மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள். பொதுவாக கண் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தால் நீரிழிவு நோய் இருக்குமா என்பதை பரிசோதித்து கண் மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொள்ளுங்கள்.

### நரம்பு மற்றும் இரத்த நாளங்கள் சார்ந்த பிரச்சினைகள்

நமது உடலை பின்னிப் பிணைந்திருக்கும் நரம்புகள் தான் நாம் துடிப்பாக செயற்படுவதற்கான சக்தியை அளிக்கின்றன. இந்த நரம்புகள் பாதிக்கப்படும் போது பல்வேறு பிரச்சினைகள் உண்டாகின்றன.

**நரம்புகளில் பல வகைகள் இருக்கின்றன.**

மூளையில் இருந்து உடல் முழுவதும் கட்டளைகளை கொண்டு வருபவை மோட்டார் நரம்புகள். உடலிலிருந்து மூளைக்கு தகவல்




06



களை கொண்டு செல்லும் நரம்புகளுக்கு உணர்வு நரம்புகள் அல்லது சென்சாரி நரம்புகள் என்று பெயர்.

இந்த நரம்புகள் தான் உடலில் வெப்பம், குளிர்ச்சி, தொடுதல் போன்றவற்றையெல்லாம் மூளைக்கு தெரியப்படுத்துகின்றது.

**பேராசிரியர்**
**டாக்டர் டி.காமராஜ்,**
M.D., P.G.D.C.G., D.M.R.,
**சென்னை.**

தானாக செயற்படும் நரம்புகளுக்கு பரிவு நரம்புகள் அல்லது தானியங்கு நரம்புகள் என்று பெயர்.

திசுக்களின் அடிப்பாகம் வரை சிறு சிறு நரம்புகள் இருக்கும். இவை தான் உணர்வுகளை கடக்கும் நரம்புகள் ஆகும். நரம்பு மண்டலத்தின் இயக்கத்துக்கு அடிப்படையாக இருப்பது நரம்பு செல்கள். இவை நியூரான்கள் எனப்படும்.

நமது மூளை மற்றும் தண்டுவடத்தில் மட்டும் சுமார் பன்னிரண்டு கோடி நியூரான்கள் இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

(தொடரும்)

# காலை எடுக்க வேண்டாம்

**காம்ப்ளிமெண்டரி மெடிசன் என்றால் என்ன?**

இன்றைய நாட்களில் உலகத்தின் மிக உயர்ந்த போற்றுதலுக்குரிய மருத்துவ முறையாக ஆங்கில அலோபதி மருத்துவ முறையே இருக்கிறது. அதனால்தான் உலகம் முழுவதும் இந்த மருத்துவமுறை பெரும் புகழுடன் திகழ்கிறது. அதுமட்டுமன்றி விஞ்ஞான முறைப்படி அலோபதி மருத்துவமே சரியானதும் ஆகும். ஆனால், சில குறிப்பிட்ட நோய்களை இப்பவும் அலோபதி மருத்துவத்தால் பூரணமாக குணப்படுத்த முடியவில்லை. எனவே, அலோபதி மருத்துவத்துடன் மேலும் சில மருத்துவ முறைகளைக் கையாண்டு குறிப்பிட்ட நோயினை குணப்படுத்துவற்குத்தான் காம்ப்ளிமெண்டரி **மெடிசன்** என்று பெயர். தமிழில் நாம் கூடுதல் மருத்துவம் என்று குறிப்பிடலாம். காம்ப்ளிமெண்டரி மெடிசனில் ஆங்கில அலோபதி மருத்துவத்துடன் இணைந்து **Pulse Electro Magneto Therapy** என்கிற மின் துடிப்பு காந்த அலைகள் மூலம் சிகிச்சை அளிப்பதாகும். இதனை சாதாரணமாக போலி மருத்துவர்கள் மேற்கொள்ளும் காந்த சிகிச்சையுடன் ஒப்பிட்டுக் குழம்பிக் கொள்ள வேண்டாம்.

**விஞ்ஞான ரீதியான அலோபதி மருத்துவம் இருக்கும்போது இந்தக் காம்ப்ளிமெண்டரி மெடிசனின் தேவை என்ன?**

உலகம் முழுவதும் மருத்துவம் விழிப்புணர்ச்சி அடைந்து வருகிறது. சகல நோய்களையும் அலோபதி மருத்துவத்தால் மட்டும் குணப்படுத்த முடியாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் அலோபதியுடன் இணைந்து கூடுதலான சிகிச்சை முறையும் தேவைப்படுகிறது.

உதாரணமாக நீரிழிவு நோயினை அலோபதியால் மட்டுமே கட்டுப்படுத்த முடியாது என்பது எல்லோரும் ஒத்துக்கொண்ட உண்மை. எனவே, அலோபதியுடன் இணைந்து செயல்படுத்த இன்னொரு மருத்துவமுறையும் தேவைப்படுகிறது. அலோபதி முறையில் ஒரு நீரிழிவு நோயாளி பெறுகிற நோய் கட்டுப்பாட்டைவிட காம்ப்ளிமெண்டரி மெடிசன் முறையில் சிகிச்சை பெறும் நீரிழிவு நோயாளி அதிக அளவு குணம் பெறுவார் என்பதுதான் உண்மை.

**நீரிழிவு நோயாளிக்கு எந்தவிதத்தில் அலோபதியைவிட காம்ப்ளிமெண்டரி மெடிசன் சிகிச்சை பயன்தரும் என்கிறீர்கள்?**

நீரிழிவு நோயாளிக்கு உடலில் உள்ள எல்லா நரம்புகளும் திசுக்களும் இரத்தக் குழாய்களும் பாதிக்கப்பட்டிருக்கும். குறிப்பாக இரத்தக்குழாய்களின் பாதிப்பினால் நீரிழிவு நோயாளிகளுக்குக் காலில் கொப்புளம் உண்டாகலாம். அக்கொப்புளமே பின்னர் புண்ணாகிவிடலாம். நீரிழிவு நோயாளிக்கு இப்படிக் காலில் ஏற்படும் புண்களில் செகண்டரி இன்பெக்ஷன் எனப்படும் நுண்ணுயிர் தொற்றுநோய்கள் ஏற்பட்டு அந்தப் புண் மேலும் ஆழமாகி ஆறாத புண்ணாகி விடும். இவர்களுக்கு வந்துள்ள கால் ஆறாத புண்ணை வெறும் அலோபதி மருத்துவத்தால் மட்டுமே குணப்படுத்த முடியாது. எனவே, ஆறாத புண் உள்ள நோயாளிக்கு அலோபதி மருந்துகளுடன் பல்ஸ் எலக்ட்ரோ மேக்னடிக் மூலம் கூடுதல் சிகிச்சை செய்ததன் மூலம் ஆறாத புண் ஆறியதைக் கண்டறிந்த போதுதான் காம்ப்ளிமெண்டரி மெடிசன் முக்கியத்துவம் எங்களுக்கே புரிந்தது.

உலகம் முழுவதும் நீரிழிவு நோயாளிக்கு வருகிற கால் புண்களை குணப்படுத்துவதில் காம்ப்ளிமெண்டரி மெடிசனின் பங்கு முக்கியத்துவம் பெற்று வருகிறது.

**காம்ப்ளிமெண்டரி மெடிசன் மூலமாக என்னென்ன நோய்களை குணப்படுத்தலாம்?**

செர்விக்கல் ஸ்பாண்டிலோஸிஸ் என்கிற கழுத்து முள் எலும்பு தேய்மானம், லெம்பர் ஸ்பாண்டிலோஸிஸ் என்கிற கீழ் முதுகு முள் எலும்பு தேய்மானம், வயதானால் வருகிற ஆடியோ ஆர்தரைடிஸ் (மூட்டுத் தேய்மானம்), கீழ் வாதம், நீரிழிவு நோயாளிகளின் கால் புண், மூளை வளர்ச்சியுற்ற குழந்தையின் கால் விறைப்புத் தன்மை, வெரிக்கோஸ் வெயின் எனப்படுகிற கால்சிரை சுருட்டல் மற்றும் ஒற்றைத் தலைவலியையும் இந்தக் காம்ப்ளிமெண்டரி மெடிசன் மூலம் குணப்படுத்தலாம். உலகில் உள்ள சகல நோய்களையும் சுத்தமாக இதனால் குணப்படுத்த முடியும் என்று சொல்ல முடியாது. மேற்சொன்னவை மட்டும்தான்.

**கீழ் முதுகு முள் எலும்பு தேய்மானம், கழுத்து முள் எலும்பு தேய்மானம் ஏன் ஏற்படுகிறது? இதனை ஆங்கில மருத்துவத்தால் ஏன் முழுமையாக குணப்படுத்த இயலாது என்கிறீர்கள்?**


கழுத்து முள் எலும்பு தேய்மானம் அடைய காரணங்கள் கரடு முரடான பாதையில் நீண்ட தூரம் அடிக்கடி பயணம் செய்வது, கணனியில் அதிக நேரம் பணிபுரிவது, இரண்டு சக்கர வாகனங்களில் அடிக்கடி பயணிப்பது, வயதானவர்களுக்கு எலும்பில் சுண்ணாம்புச் சத்துக் குறைவது போன்றவைகளாகும். மேற்சொன்ன காரணங்களுடன் சரியற்ற இருக்கைகள், தவறான நிலையில் அமர்ந்து பணிபுரிதல் போன்றவை சேர்ந்து கொண்டால் அதுதான் கீழ் முதுகு முள் எலும்பு தேய்மானத்திற்கான காரணங்களாகும். இந்தத் தேய்மானங்களை அலோபதியால் மட்டும் ஏன் குணப்படுத்த முடியாது என்றால் முதுகில் கழுத்துப் பகுதியில் தேய்ந்துவிட்ட முள் எலும்புகளை எந்த ஆங்கில மருந்தினாலும் சீர்செய்ய முடியாது. பெரும்பாலும் இந்தத் தேய்மானத்திற்கு வலி நிவாரணிகளைத்தான் வைத்தியர்கள் பரிந்துரைக்கிறார்கள். இந்த வலி நிவாரணிகள் பக்க விளைவுகள் கொண்டவை. இந்தத் தேய்மானத்திற்குத் தரப்படும் மருந்துகள் கல்லீரல், சிறுநீரகங்களைப் பாதிக்கும். இரைப்பை சுழற்சியை உண்டு பண்ணும். குறிப்பாக டைனகுளோபினக் மருந்துகளைத்தான் இந்தத் தேய்மானத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். இந்த மருந்துகளால் வலி மட்டுப்படுத்தப்படாத நிலையில் கடைசி கட்டமாக சத்திரசிகிச்சை வைத்தியர்கள் சிபாரிசு செய்வார்கள். இதற்கான செலவை சாமானியர்களால் சமாளிக்க முடியாது. எனவே, பக்கவிளைவு அற்ற, அதிகம் செலவில்லாத உடனடி நிவாரணம் தரக்கூடிய காம்ப்ளிமெண்டரி மெடிசன் இந்தத் தேய்மானத்திற்குப் பெரிதும் பக்கபலமாக அமைகின்றது.

**வெரிக்கோஸ் வெயின் என்பது என்ன?**

வெயின்ஸ் எனப்படுவது தமிழில் சிரைகள் எனப்படும். கால்பகுதியில் இந்தச் சிரைகள் சுருட்டிக்கொண்டு இரத்த ஓட்டத்தைக் தடைப்படுத்தி அந்தப் பகுதியில் உள்ள திசுக்கள் பாதிக்கப்படுகிற நிலைக்குத்தான் வெரிக்கோஸ் வெயின் என்று பெயர். இந்தப் பாதிப்பு நீண்ட நேரம் நின்று கொண்டே பணி புரிகின்றவர்களுக்கு வரலாம். இதுபோலவே கர்ப்பிணிப் பெண்களுக்கு, வயதான பெண்களுக்கு, பார வண்டி இழுப்பவர்களுக்கு வரலாம். வெரிக்கோஸ் வெயின் வந்தால் கால் பகுதியில் இரத்த ஓட்டம் தடைப்படும்.

சிரையின் உள்ளே உள்ள இரத்த சிவப்பு அணுக்கள் அந்தச் சிரையை ஒட்டி உள்ள திசுக்களில் ஊடுருவும். இதனால் அப்பகுதியில் அரிப்பு ஏற்படும். சொறியத் தோன்றும்.

01



சொறிந்து சொறிந்து அங்குப் புண் ஏற்பட்டுவிடும். அப்புண் எளிதில் ஆறாது. இந்த ஆறாத புண்ணை மருந்தால் மட்டும் குணப்படுத்த முடியாது. சத்திரசிகிச்சைதான் செய்ய வேண்டியிருக்கும். ஆனால் சத்திரசிக்ச்சை எதுவும் இல்லாமல் மின்காந்த துடிப்பு அலை கள் மூலம் ஆறாத புண்ணை குறைந்த செலவில் குறுகிய காலத்தில் குணப்படுத்தி விடலாம்.

**சில குழந்தைகளுக்கு மூளை வளர்ச்சிக் குறைபாடு ஏன் ஏற்படுகிறது?**

பொதுவான காரணம் இதற்குண்டு. பிரசவ நேரத்தில் பனிக்குடம் உடைந்த பின்னர் நீண்ட நேரம் குழந்தையானது வெளிவர தடை ஏற்பட்டால் (**Delayed Second Stage Of Labour**) குழந்தையின் மூளைக்கு ஒட்சிசன் செல்வதில் தடை ஏற்படும். இதன் பின்விளைவுதான் மூளை வளர்ச்சியற்ற குழந்தைகள். இந்தக் குறைபாடு பற்றிய உண்மை பல மகப்பேறு மருத்துவர்களுக்கே கூட இந்நாட்களில் தெரிந்திருக்கவில்லை.

இப்படி மூளை வளர்ச்சிக் குறைபாடு உள்ள குழந்தைகளில் சிலருக்குக் காலில் விறைப்புத்தன்மை இருக்கும்.

இதனால் இவர்களால் சரிவர நடக்க முடியாது. இதனை ஆங்கில மருத்துவத்தால் மட்டும் குணப்படுத்த முடியவில்லை.

**டாக்டர் சி.ஆர்.ராமசுவாமி, MD,**
**சென்னை-40.**

இத்துடன் காம்ப்ளிமெண்டரி மெடிசனும் இணைத்து தந்தால் விறைப்புத் தன்மை பெருமளவில் குறைந்து முக்கால் பங்கு குணம் கிடைக்கும். அதாவது கால் விறைப்புத் தன்மை நீங்கி நடக்க முடியும். மூளை வளர்ச்சிக் குறைபாடு முழுவதுமாக நீங்கிவிடும் என்று அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டாம். மூளை வளர்ச்சியற்ற குழந்தைகளைப் பூரணமாக நலம்பெற வைக்கும் சிகிச்சை இன்னமும் கண்டுபிடிக்கவில்லை என்பதே உண்மை.

# உறவுகளை இழந்தவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதை எவராலும் தடுக்க முடியாது

## யாழ்.ஆர்ப்பாட்ட விடயம் குறித்து ஐ.தே.க.தெரிவிப்பு

சர்வதேச மனித உரிமைகள் தினமான கடந்த 10 ஆம் திகதி யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற ஜனநாயக அடக்குமுறை சம்பவமானது அரசாங்கத்தின் மேலுமொரு கறுப்பு தினத்தை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டியிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

குடாநாட்டில்பொதுமக்கள்மீது பொலிஸாரையும் இராணுவத்தினரையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அரச பயங்கரவாத அடக்குமுறையை வன்மையாகக் கண்டிப்பதாகக் தெரிவித்துள்ள அக்கட்சி, இது குறித்து சர்வதேச மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேற்படி தினத்தில் யுத்த காலத்தில் காணாமல் போனவர்களை மீட்டுத்தருமாறும்,சிறைப்படுத்தப்பட்டவர்களை விடுவிக்குமாறும் கோரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இடையூறு விளைவிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் அக்கட்சியின் மனித உரிமைகள் தொடர்பான இணைப்பு செயலாளருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இத்தினத்தை அனுஷ்டிப்பதற்கு இலங்கையும் உரித்துடைய நாடாகும். ஏனெனில் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் ஒரு சாராருக்கு இழைக்கப்பட்ட அநீதியின் காரணமாகவே இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கின்றது. உறவுகளை இழந்தவர்கள் உரிமை போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தடை விதிக்க எவருக்கும் உரிமை கிடையாது.

இருந்த போதிலும் இங்கு பொலிசாரையும் இராணுவத்தினரையும் பயன்படுத்தி பாரிய அடக்குமுறை இடம்பெற்றுள்ளது. சமாதானம், இன ஐக்கியம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு பற்றியெல்லாம் கூச்சலிடுகின்ற அரசாங்கம் சாதாரண மக்களின் அதுவும் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமையை, கருத்துச் சுதந்திரத்தை தமது அரச பயங்கரவாதத்தால் அடக்க முற்படுவதானது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி இந்த செயலை மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

இலங்கையின் ஒவ்வொரு அசைவினையும் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்ற சர்வதேசம், குடாநாட்டு சம்பவத்தையும் உள்ளவாறே படம் பிடித்திருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

மேலும் பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் நாட்டு மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளையும் சர்வதேசத்திடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற அவப் பெயரையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றார். (அ-2)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

இரத்மலானை பகுதியில் பாழடைந்த கிணற்றிலிருந்து 35வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கல்கிசை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து நேற்று முன்தினம் பிற்பகலில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(அ-2)

# கட்டார் பிரதமருடன் ஜனாதிபதி பேச்சு

இந்தோனேஷியாவின் பாலி நகரில் நடைபெற்ற பாலி ஜனநாயக ஒன்றியத்தின் நான்காவது மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளார்.

இந்தோனேஷிய ஜனாதிபதி கலாநிதி சுசிலோ பெம்பேன் யுதோயோனோவின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தோனேஷியா மாநாட்டில் கலந்து கொண்டார்.

ஜனநாயகத்தை விரும்புகின்ற 54 ஆசிய நாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு அமைச்சர்கள் நான்காவது பாலி ஜனநாயக ஒன்றியத்தின் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாறிவரும் உலகில் ஜனநாயகப் பங்களிப்பை வளர்த்தல் மற்றும் ஜனநாயக குரலுக்கு செவிமடுத்தல் என்ற தொனிப்பொருளில் பாலி ஜனநாயக மாநாடு நடைபெற்றது.

மேலும் பல்வேறு உப தலைப்புக்களிலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இம் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு விடயங்களையும் வலியுறுத்தினார். முக்கியமாக ஜனநாயகம் பலமடையவும் அர்த்தமுடையதாகவும் இருக்க வேண்டுமானால் அது அன்றாட மக்களின் வாழ்க்கையுடன் தொடர்புபட வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். மேலும் இலங்கையானது ஆசியாவில் மிகவும் பழைய ஜனநாயக நாடு என்றும் ஆசியாவில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்த முதலாவது ஆசிய நாடு இலங்கை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை இந்த மாநாட்டின்போது கட்டார் அரசாங்கத்தின் பிரதமருடன் ஜனாதிபதி இருதரப்பு பேச்சுவார்த்தையை நடத்தினார். இதன்போது இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தோனேஷிய ஜனாதிபதி சுசிலோ பெம்பேன் யுதோயோனோவையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் இறைமை ஆகியவற்றை இந்தோனேஷியா பெரிதும் மதிப்பதாக இந்தோனேஷிய ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். மேலும் பல்வேறு விடயங்கள் குறித்து இரண்டு தரப்பினரும் பேச்சு நடத்தியுள்ளனர். (அ-2)

# கனடாவில் சட்டவிரோதமாக 6500 பேர் தங்கியிருக்கின்றனர்

## கனடா அரசு தெரிவிப்பு

கனடாவில் சட்டத்திற்கு புறம்பாக சுமார் 6500 பேர் நூறு நாடுகளில் இருந்துவந்து தங்கியிருப்பதாக கனடா அரசு தெரிவித்துள்ளது.

இந்த ஏமாற்று வேலையை கனடா மக்கள் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள் என்று கனடாவின் புலம் பெயர்வுத்துறை அமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், கனடாவின் குடியுரிமை விற்பனைக்கு இல்லை. மோசடியாக குடியுரிமை பெற்றவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள்.2ஆயிரத்து 100 பேர் சட்டத்திற்கு புறம்பாகவும்,4ஆயிரத்து 400 பேர் மோசடியாகவும் குடியுரிமை பெற்றுள்ளனர்.

மேலும் கனடாவில் ஒருவர் குடியுரிமை பெற இரண்டாண்டுகளாவது கனடாவில் தங்கியிருக்கவேண்டும்.

இவ்வாறு தங்காதவர்கள் குடி யுரிமை பெற்று இருப்பதை பொலிசாரும் புலம்பெயர்வுத்துறை அதிகாரிகளும் தொடர்ந்து கண்காணித்து அவர்களின் குடியுரிமையை புறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்கிறார்.

கடந்த 1867 ஆம் ஆண்டு முதல் கனடாவில் குடியுரிமை பறிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 66 என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மனிதாபிமான செயற்பாடுகளில் அரசு முன்னோடியாக செயற்படுகின்றது

## சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் அனைவருக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளை தடையின்றி வழங்க வேண்டுமென அரச அதிகாரிகளுக்கு தான் பணித்துள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

பூநகரி பள்ளிக்குடா பகுதியில் மீள் குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

70 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பகுதி மக்களுக்கு உதவிகள் இன்று (நேற்று) வழங்கப்படுகின்றது.


யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இந்தப் பகுதிகளில் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னும் பல அபிவிருத்திப் பணிகள் இங்கு மேற்கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம்.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளனர். அதாவது சமூகத்துடனும் தமது குடும்பத்துடனும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் 600 பேர் தான் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களையும் விரைவில் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வுருகின்றோம்.

சமூகத்தில் இணைக்கப்படும் முன்னாள் போராளிகள் எந்தவித நெருக்கடிகளுக்கும் உட்படாமல் அவர்கள் சுதந்திரமாக வாழும் சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளில் முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். மேலும் இந்த நாட்டில் எமது அமைச்சு வரலாற்று சாதனையொன்றை அண்மையில் நிகழ்த்தியுள்ளது.



கடந்த வாரம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போது 100க்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகளை அங்கு அழைத்துச் சென்றோம்.


அங்கு பிரதமருடனும் அமைச்சர்களுடனும் அவர்கள் கலந்துரையாடினர். இவ்வாறு எந்த நாட்டிலும் இதுவரை செய்யப்படவில்லை. மீள்குடியேற்றம், மக்களுக்கான உதவிகள், கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வது என பலவற்றில் எமது நாடு முன்னோடியாக திகழ்கின்றது.

இது தவிர கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றிய 240 முன்னாள் போராளிகளில் 47 பேர் கடந்த வருடம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள யு.என்.ஐ., ஐ.சி.ரி கம்பஸ் நிறுவனத்தால் 2011 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பங்குபற்றி கற்கை நெறிக்கு பதிவு செய்த மாணவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட மாணவி ஒருவருக்கு நிறுவன இயக்குநர் செ.செல்வதாஷன் கணனி ஒன்றை பரிசாக வழங்குவதனைப் படத்திற் காணலாம்.(படம்:-சித்தங்கேணி செய்தியாளர்)

# எயிட்ஸ் நோய்க்கு தடுப்பூசி



"மன்மத லீலையை வென்றார் உண்டோ" என்கிற ரீதியில் கட்டுபாடுகளின்றி தம் பாலியல் இச்சைகளை தீர்த்துக் கொண்டவர்களுக்கு பரிசாகக் கிடைத்ததுதான் எய்ட்ஸ் என்னும் ஒரு கொடிய உயிர்க் கொல்லி நோய். தகுந்த பாதுகாப்பின்றி உடலுறவு வைத்துக் கொண்டவர்களுக்கு பிள்ளைகளாகப் பிறந்த பாவத் துக்காக பல குழந்தைகளும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் மருத்துவ சிகிச்சைகளின் போதும், போதைப் பழக்கத்தினாலும், சுத்தம் செய்யப்படாத ஊசிகளை பயன்படுத்தியவர்கள் என குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சமூகத்தின் பலரை பாதித்துள்ளது எய்ட்ஸ். இதற்கு காரணமானதுதான் எச்.ஐ.வி வைரஸ்.



இந்த வைரஸ் ஒருவரது உடலுக்குள் சென்று சில மாதங்களிலேயே, உடலின் நோய் எதிர்ப்பு சக்தி உயிரணுக்களை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, மெல்ல மெல்ல பலவீனப்படுத்திவிடும். எச்.ஐ.வி வைரசை அழிக்க பல மருத்துவ ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக, இந்த வைரஸ் தாக்காமல் பாதுகாக்கும் தடுப்பூசிகள் மற்றும் எய்ட்ஸ் நோய்கான சிகிச்சைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆனால், இது வரையில் நடந்த ஆய்வுகள் மூலம் எந்த முன்னேற்றமும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் எய்ட்ஸ் நோய்க்கு ஒரு புதிய தடுப்பூசி மற்றும் இந்த நோயிலிருந்து நிவாரணம் அளிக்கக்கூடிய மருந்து என இரண்டையும் உருவாக்கிய விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர். அதாவது, நான்கு மரபணுக்களைச் சேர்த்து (மரபணு காக்டெயில்) ஊசி மருந்து ஒன்றை உருவாக்கியுள்ளார்கள் ஸ்பெயின் நாட்டு விஞ்ஞானி மரியானோ எஸ்டெபான் தலைமையிலான ஆய்வுக் குழுவினர்.

அதுசரி, மதுபானங்களின் காக்டெயில் தெரியும். அதென்ன மரபணு காக்டெயில் ?

ஆய்வாளர் மரியானோ உருவாக்கியுள்ள மரபணு காக்டெயில் தடுப்பு ஊசி மருந்தில், எச்.ஐ.வி வைரசின் நான்கு மரபணுக்கள் இருக்கின்றன. இவை நான்கும் 'டி' மற்றும் 'பி' லிம்போசைட்டுகள் என்றழைக்கப்படும். இவை இரு வகையான வெள்ளை இரத்த அணுக் களை தூண்டும் திறன் உடையவை. இந்த மரபணு காக்டெயில் தடுப்பூசியை MVAB தடுப்பூசி என்றழைக்கிறார்கள்.

நமது உடல் முழுவதும் லிம்போசைட்டுகள் பரவியுள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான நுண்கிருமியை தாக்கி அழித்து, அவற்றிடமிருந்து நம் உடலைப் பாதுகாக்கின்றன. இவை சாதாரண கிருமிகளை எளிதாக அழித்துவிடும். ஆனால், எச்.ஐ.வி வைரஸ் மற்ற நுண்கிருமிகளைப் போல சாதாரணமானதல்ல. நம் உடலை பாது காக்கும் லிம்போசைட்டுகளையே தாக்கி, மொத்தமாக அழித்துவிடக் கூடியது.

எச்.ஐ.வி வைரஸ்கள் நம் உயிரணுக்களை தாக்கும் முன் அவற்றை அழிக்க லிம்போசைட்டுக்களுள் ஒன்றான 'பி' லிம்போசைட்டுகள் அண்டி பொடிகள் (நோய்க்கிருமி எதிரி) என்னும் ஒருவகையான புரதங்களை உற்பத்தி செய்கின் றன. ஆனால், மற்றொரு வகை லிம்போசைட்டான டி லிம்போசைட், வைரஸ்களால் பாதிக்கப்பட்ட உடலின் உயிரணுக்களை தாக்கி அழிக்கும் பணியை செய்கின்றன. ஆய்வாளர் மரியானோ மேற்கொண்ட பரிசோதனையில் அரோக் கியமான 24 பேருக்குMVAB தடுப்பூசி போடப் பட்டது. அதில் 22 பேருக்கு (அதாவது 92%) எச்.ஐ.வி க்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தி உருவானது. மேலும் இந்த தடுப்பூசி போடப்பட்டு பதினொரு மாதங்களுக்குப் பின்னர் பரிசோதனை செய்தபோது முக்கால் வாசிப் பேருக்கு உடலில் எச்.ஐ.வி.இக்கு எதிரான நோய் கிருமி எதிரிப் புரதமும் மூன்றில் ஒரு பங்கு பேருக்கு CD 4+ மற்றும் மூன்றில் இரண்டு பங்கு பேருக்கு CD 8+ என்று அழைக்கப்படும் எச்.ஐ.வி. வைரசைத் தாக்கும் திறனுள்ள இருவகையான டி லிம்போசைட்டுக்களும் உற்பத்தியானது குறிப்பிடத் தக்கது.

மொத்தித்தில் 92% மக்களுக்கு எச்.ஐ.வி. வைரசுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தி உருவானது.ஆனால், இது இந்த நோய்க்கு எதிராக முழுப் பாதுகாப்பை அளிக்கிறது என்று சொல்லமுடியாது. இருந்த போதும் இந்தத் தடுப்பூசி உருவாக்கம் அதன் தொடக்க நிலையில் இருப் பதால் வரும்காலத்தில் எச்.ஐ.வி. வைரசுக்கு எதிரான முழுப்பாது காப்பை இதிலிருந்து பெறமுடியும் என்று நம்பிக்கையூட்டுகிறார் ஆய்வாளர் மரியானோ எஸ்டெபான்.

இந்த எயிட்ஸ் நோய்க்கு எதிரான மருத்தவ முயற்சியின் அடுத்த கட்டம் இதே MVAB மருந்தினை உடலுக்குள் பரவிவிட்ட எச்.ஐ.வி. வைரஸ் எண்ணிக்கையைக் குறைக்கும் திறனுள்ள சிகிச்சை மருந்தாக பயன் படுத்த முடியுமா என்பதே.

# உங்கள் குணத்தை சொல்லும் மரபணு


நடப்பது எல்லாம் கடவுள் செயல் என்று சொல்லிக் கொண்டிருக்கி றோம். ஆனால், இனி எல்லாம் மரபணுமயம் என்று சொல்ல வேண்டும் போல் இருக்கிறது. ஏனென்றால் மூச்சு விடுவதில் தொடங்கி மூர்ச்சையாகி விழுவது வரையிலான மனிதனின் பல்வேறு உடல் இயக்கங்களுக்கும் ஏதோ ஒரு மரபணுதான் காரணமாயிருக்கிறது.

இதை ஆதார பூர்வமாக நிரூபித்துக் கொண்டும், ஆணித்தரமாய் நம்பிக்கொண்டும் இருக்கிறார்கள் மரபணுவியல் விஞ்ஞானிகள். இனி நீங்களும் நம்பித்தான் ஆகவேண்டும் என்று சொல்வது போல் இருக்கிறது கனடாவிலுள்ள றொறண்டோ பல்கலைக்கழகத்தின் சமீபத்திய ஆய்வு ஒன்று.


ஒருவர் அன்பானவரா இல்லையா என்று தெரிந்து கொள்ள நாம் சம்பந்தப்பட்டவருடன் பேசிப்பழகி னால் தான் கண்டுபடிக்க முடியும். "இனி அதெல்லாம் மறந்திடுங்க ஒருத்தர் கனிவானவரா இல்லையான்னு தெரிஞ்சுக்கணும்ன்னா அவருடைய ஒக்சிடோசின் ரிசெப்டர் மரபணு GG Version ஆக இருக்குதான்னு மட்டும் பாருங்க போதும்" என்கிறார் டொரான்டோ பல்கலைக்கழக ஆய் வாளர் அலெக்சாண்டர் கோகன்.

ஒக்சிடோசின் என்பது நம் உடலில் சுரக்கும் ஒரு ஹார்மோன். ஒருவரின் உடலில் இந்த ஹார்மோன் அதிக அளவில் சுரந்தால் அவர் பழகுவதற்கு இனியவராகவும் ஜனரஞ்சகமானவராகவும் மாறிவிடுவார் என்று நம்பப்படுகிறது. உடலில் சுரக்கும் ஹர்மோன்களை உயிரணுக்கள் உள்வாங்கி இரசாயன சமிக்ஞைகள் மூலம் உடலியக்க மாற்றங் களை ஏற்படுத்த ஒவ்வொரு ஹார்மோனுக்கும் ரிசெப்டர் எனும் ஒரு புரதம் உண்டு. அது உயிரணுக்களின் மேற்புறத்தில் இருக்கும். ஒவ்வொரு ஹார்மோனின் செயற்பாட்டுக்கும் இந்த ரிசெப்டெர்களே அடிப்படை.

இந்த ரிசெப்டெர்களின் மரபணுக்களில் ஏற்படும் சில மூலக்கூறு மாற்றங்களால் பல வகையான ரிசெப் டெர்கள் உருவாகின்றன. ஆக, ஒக்சிடோசின் ரிசெப்டர்களிலும் பலவகை உண்டு. இவை ஒருவரின் பழக்கவழக்கங்களை பாதிக்கிறதா என்பதைக் கண்டறிய ஆய்வாளர் கோகன் தலைமையிலான குழுவினர் சுமார் 116 தன்னார்வலர்களை 20 நொடிகளுக்கு ஓடும் சத்தமில்லாத 23 படக் காட்சிகளைப் பார்க்கச் செய்தனர். ஒவ்வொரு படத்திலும் தன்சோகக் கதையைச் சொல்லும் ஒரு நண்பருக்கு மற்றொருவர் எப்படி ஆறுதல் சொல்கிறார் அல்லது எதிர்வினை செய்கிறார் என்பது பதிவு செய்யப்பட்டிருந்தது.



இதைப்பார்த்த பின்னர் படத்தில் பார்த்த ஆறுதல் சொல்பவர் எவ்வளவு கனிவானவர் மற்றும் நம்பிக்கைக்குரியவர் என்று கணித்துச் சொல்லும் படிகேட்டுக் கொள்ளப்பட்டது. சோதனையின் முடிவில் ஒக்சிடோசின் ரிசெப்டர் மரபணுவின் GA அல்லது AA Version உள்ளவர்களைவிட GG Version உள்ளவர்களே மிகவும் கனிவானவர்கள் என்று தெரியவந்தது.




அதுசரி, ஒக்சிடோசின் ரிசெப்டர் மரபணுவின் GA அல்லது AA Version உள்ளவர்களுக்கும் GG Version உள்ளவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

ஒக்சிடோசின் ரிசெப்டர் மரபணுவின் GG Version உள்ளவர்களின் ஆறுதல் பேச்சில் GA Version அல்லது AA Version உள்ளவர்களின் பேச்சைக் காட்டிலும் அதிகமான அளவில் புன்னகையும் கனிவான தலையாட்டுதலும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வகையான அணுகு முறை மாற்றங்களே பார்வையாளர்களின் முடிவுக்கு காரணமாக இருக்க முடியும் என்கிறார் ஆய்வாளர் கோகன்.மேலும் ஒக்சிடோசின் ரிசெப்டர் மரபணுவில் ஏற்படும் மூலக்கூறு மாற்றங்கள் உடலில் சுரக்கும் ஒக்சிடோசின் ஹார்மோன் அளவுகளை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைக் கண்டறிய மேலதிக ஆய்வுகள் அவசியம் என்கிறார் கோகன்.

நம் குணாதிசயங்கள் பலவற்றிற்கு நம் உயிரணுக்களில் உள்ள மரபணுக்களே காரணம் என்னும் அறிவியல் உண்மையை அழுத்தமாகப் பதிவு செய்கிறது. ஒக்சிடோசின் ரிசெப்டர் மரபணுவில் ஏற்படும் மாற்றங்கள் ஒருவரின் கனிவான குணத்திற்கு காரணம் என்கிறது இந்த ஆய்வு!

# அறிவியல் கலசம்

## கேப்கானவரல் தேர்வான விதம்!



புளோரிடாவில் உள்ள கேப் கானவரலை (Cape Canaveral) செயற்கைக் கோளைச் செலுத்துவதற்குத் தகுந்த இடமாக அமெரிக்காவின் நாசா தேர்ந்தெடுத்தது.

விண்ணில் செயற்கைக்கோள்களை செலுத்த உதவும் பூஸ்டர் ராக்கெட்டுகள், செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியபிறகு மனிதர்களுக்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாமல் கடலில் விழும் என்பது இதன் ஒரு முக்கியமான சாதகம்.

தவிர இன்னொரு முக்கியமான விடயம், பூமி மேற்கிலிருந்து கிழக்காக மணிக்கு 910 மைல் வேகத்தில் நகர்கிறது. புளோரிடாவின் கேப்கானவரலில் இருந்து ராக்கெட்டை கிழக்குப் புறமாக அனுப்புவதால், பூமியின் சுழற்சியால் 1மணி நேரத்துக்கு17 ஆயிரத்து 300 மைல் ஒட்ட வேகம் ராக்கெட்டுக்கு அதிகமாகக் கிடைக்கிறது.

## 'ஷாக்' அடிக்கும் மீன்கள்!

மத்திய தரைக்கடலில் ஸ்கேட்ஸ் என்ற ஒரு வகை மீன் உள்ளது. இதை டார்பிடோரேஸ் என்றும் அழைக்கிறார்கள்.

இந்த மீன் பொதுவாக அமைதியாகவும், மெதுவாகவும் நீந்தும்.

ஆனால், இதன் அருகே வேறு சில மீன்களோ, நண்டுகளோ, கடல் வாழ் உயிரினங்களோ வந்துவிட்டால் அவற்றை மின்சாரத்தால் தாக்கும்.

அதில் துடிதுடித்து மடியும் அந்த உயிரினங்களை ஸ்கேட்ஸ் உணவாக்கிக் கொள்ளும்.

ஸ்கேட்ஸ் மீன்களைப்போலவே மின்னாற்றலை வெளிப்படுத்தும் இன்னொரு வகை மீன், ஈல் ஆகும். ஆனால், இவை கடலில் அல்லாமல், நன்னீரில் வாழ்பவை.




ஈல்

இந்த மீன்கள் இரவில் மட்டுமே தண்ணீரில் இரை தேடும்.

தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் நதியின் ஆழமற்ற பகுதிகளில் இம்மீன்கள் அதிகமாக காணப்படுகின்றன.

இவை வெளிப்படுத்தும் மின் சக்தி, பெரிய பிராணிகளைக்கூட செயலிழக்கச்செய்யும் அளவு சக்தி வாய்ந்தது. இதனால் அப்பகுதியில் வாழும் பூர்வகுடி மக்கள் அமேசான் நதியில் இறங்கி நடக்கவே அஞ்சுகிறார்கள்.







எஸ்.கே.எம். லங்கா வோல்டிங் நிறுவன யாழ்ப்பாண கிளையினரின் சமூகசேவைகள் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் புங்குடுதீவில் உள்ள முன்பள்ளிகளுக்கு பாடநூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்களிடம் பாடநூல்கள் கையளிக்கப்படுவதையும் அருகில் எஸ்.கே.எம். லங்கா வோல்டிங் நிறுவன பிரதிநிதியையும் படங்களில் காணலாம்.

## முன்னாள் போராளிகள் வெளிநாடு செல்லத் தடை?

(கொழும்பு)

அரசினால் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படும் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறி செல்லுமிடத்து விமான நிலையத்தில் கைது செய்யப்படுவார்களென அச்சுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புனர்வாழ்வளிக்கப்பட்டு அரசினால் குடும்பங்களுடன் இணைய அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலரும் வாரத்திலோ அல்லது மாதத்திலோ ஒரு நாள் அவ்வப்பகுதி படை முகாம்களிற்கு விசாரணைக்கு அழைக்கப்படுவது தொடர்கின்றது.

அவ்வாறு விசாரணைக்கென செல்லும் வேளையிலேயே நாட்டை விட்டு எக்காரணம் கொண்டும் வெளியேறக் கூடாதென்ற நிபந்தனை விதிக்கப்படுவதாக முன்னாள் உறுப்பினர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சியான இராணுவ நெருக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாகவும் பொருளாதார நிலைமை கருதியும் பல முன்னாள் உறுப்பினர்கள் வேலைவாய்ப்பு கருதி நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே அவர்களை நாட்டை விட்டு வெளியேற பாதுகாப்பு தரப்பு தடை விதித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஏ)

## ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்களை சமரசப்படுத்த முனையும் உறுப்பினர்கள்

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக கரு ஜயசூரியவை நியமிப்பதோடு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ரணில் விக்கிரமசிங்க வகிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து கட்சியின் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட உறுப்பினர்கள் சிலர் இரு தரப்பினரதும் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை நடத்தியுள்ளனர்.

இதனை நடைமுறைப்படுத்தினால் கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ளபிரச்சினைகளுக்குதீர்வுகிடைக்குமென்றும் இக்குழு பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளதாகவும் கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இரு தரப்பினருக்கும் பாதக மேற்படாத வகையில் தீர்வைக் காண்பதற்கே இக் குழுவினர் இந்நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

சமரசத்தை ஏற்படுத்த முனையும் குழுவினரின் யோசனைகள் அடங்கிய அறிக்கை கரு எம்.பி.யின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் சில தினங்களில் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இவ் யோசனைகள் கையளிக்கப்படவுள்ளன.

இதன்போது கூடிய விரைவில் சமரசமான தீர்மானத்தைக் காண வேண்டுமென குழுவினரால் வலியுறுத்தப்படவுள்ளது.

இம்முயற்சி தோல்வியுற்றால் கட்சியின் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை சமரசக் குழுவினர் மேற்கொள்ளவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதேவேளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பதாக கட்சியின் சம்மேளனத்தை நடத்தியாக வேண்டும். ஆனால் செயற்குழுவிற்கு உறுப்பினர்கள் முழுமையாக நியமிக்கப்படாமை மற்றும் கட்சியில் தோன்றியுள்ள நெருக்கடிகளை காரணம் காட்டி 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை சம்மேளனத்தை ஒத்தி வைப்பதற்காக கட்சியில் சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவ்வாறு ஒத்திவைக்கப்படுமானால் அதற்கெதிராக ஒரு குழுவினர் நீதிமன்றம் செல்லவுள்ளதாகவும் மேலும் தெரிய வருகிறது. (அ-2)

## டெங்குநோய்; 167 பேர் பலி

டெங்குநோய் தொற்று காரணமாக இந்த வருடத்தில் இதுவரை 167 பேர் பலியானதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே டெங்குநோய் காரணமாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தில் 100 இற்கு 70 சதவீதமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

டெங்குநோய் தொற்று காரணமாக இதுவரை 23 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் ஆலோசனைகளை பின்பற்றாமையே இந்த நோய் தொற்று அதிகரிப்புக்கான காரணம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஏ)

## 2011.12 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1577-சேர் பிரான்சிஸ் டிரேக் இங்கிலாந்தின் பிளைமவுத்தில் இருந்து தனது உலகத்தைச் சுற்றி வரும் பயணத்தை ஆரம்பித்தார்.

★1642-ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தை அடைந்தார்.

★1888-யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சூறாவளியில் பலத்த சேதம் ஏற்பட்டது.

★1937-சீனாவின் நான்ஜிங் நகரம் ஜப்பானியரிடம் வீழ்ந்ததை அடுத்து அங்கு பல பொது மக்கள் கொல்லப்பட்டும் பாலியல் வதைக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

★1941-இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி,ருமேனியா ஆகியன ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தன.

★1943-இரண்டாம் உலகப் போர் ஐக்கிய அமெரிக்காவின் 710 போர் விமானங்கள் ஜேர்மனியின் கீல் நகர் மீது தாக்குதலை நடத்தின.

★1949-இஸ்ரேலின் சட்டசபை நாட்டின் தலைநகரை ஜெருசலேம் நகருக்கு மாற்ற முடிவெடுத்தது.

★1959-மக்காரியோஸ் சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதியானார்.

★1972-அப்பல்லோ 17 விண்வெளி வீரர்கள் யூஜீன் செர்னன், ஹரிசன் ஸ்மீத் ஆகியோர் சந்திரனில் இறங்கினர். 20 ஆம் நூற்றாண்டில் சந்திரனில் இறங்கிய கடைசி மனிதர்கள் இவர்களே.

★1974-மோல்ட்டா குடியரசானது.

★1981-போலந்தில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

★2001-இந்திய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலில் தீவிரவாதிகள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.

★2003-ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேன் அவரது சொந்த ஊரான திக்ரித்துக்கு அருகே அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

★2004-சிலியின் சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினோச்சே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

★2006-பாய்ஜீ என்ற சீன ஆற்று டொல்பின் அருகிய இனமாக அறிவிக்கப்பட்டது.

### இறப்புக்கள்

★1557-டார்ட்டாக்ளியா, இத்தாலியக் கணிதவியலாளர் (பி.1499)

★1944-வசிலி கண்டின்ஸ்கி, ரஷ்ய ஓவியர் (பி.1866)


★1987-நா. பார்த்தசாரதி, எழுத்தாளர் (பி.1932)

★2010-திமிலை மகாலிங்கம், ஈழத்து எழுத்தாளர் (பி.1938)

★2010-ரிச்சர்ட் ஆல்புரூக், அமெரிக்கத் தூதுவர்

### சிறப்பு நாள்

★மோல்ட்டா- குடியரசு தினம் (1974)



★1996- ஐ.நா. சபையின் பொதுச் செயலாளராக கோஃபி அனான் தெரிவு செய்யப்பட்டார்.

# காணிப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னரான நாட்டில் காணிப் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினையாக உருவாகியுள்ளது என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திரநிலையம் சுட்டிக் காட்டியுள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் காணி உரிமை தொடர்பாக சர்ச்சைகள் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவணங்கள் காணாமல் போனமை, பாரியளவிலான இடம்பெயர்வு, வேறும் தரப்பினர் காணிகளை பயன்படுத்துகின்றமை, காணியற்ற மக்கள், இராணுவத்தினர் காணிகளை பயன்படுத்துகின்றமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திரநிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் காணிப்பயன்பாடு மற்றும் காணி உரிமை தொடர்பில் தெளிவான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெளிவான கொள்கைகளை வகுத்து அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வடக்கு காணிப்பிணக்குகளை தீர்க்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று தசாப்தங்கள் யுத்தம் இடம்பெற்றுள்ள நிலையில் சில மாற்றங்கள் அவசியப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் தலையீடு, இராணுவமயமாக்கல் உள்ளிட்ட இன்னபிற காரணிகளினால் காணிப்பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத் தன்மையுடனும் பொது மக்களின் பங்களிப்புடனும் வகுக்கப்படும் கொள்கைகள், பிணக்குகளுக்கு நடைமுறைச்சாத்தியமான தீர்வினை வழங்கும் என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ-2)

# இராணுவத்தில் இருந்து தப்பியோடிய படைவீரர்களை கைதுசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடி குற்றச் செயல்களில் ஈடுபட்ட படைவீரர்களை கைது செய்ய விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடு தழுவிய ரீதியில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் நிஹால் ஹப்புவாராச்சி தெரிவித்துள்ளார்.

பாரியளவிலான குற்றச்செயல்களில் ஈடுபட்ட 22 முன்னாள் இராணுவ படைவீரர்களை தேடி விசேட சோதனை நடத்தப்படவுள்ளது.

பொலிஸார் மற்றும் இராணுவ பொலிஸாரினால் இந்த சோதனை வேட்டை நடத்தப்படவுள்ளது.

சந்தேகநபர்கள் பற்றிய தகவல்களை 119 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய மேலும் 440 முன்னாள் இராணுவப் படைவீரர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# முதுகெலும்புடன் எழுந்து நின்று நீதியை நிலைநாட்டுங்கள்

## பாரதவின் மகள் தெரிவிப்பு

நாட்டில் நீதி நிலை நாட்டப்படுகின்றதா என்பது சந்தேகமே என அண்மையில் படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருனியா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

நீதி,நேர்மை குறித்து எந்த நாளும் பேசப்படுகிறது.எனினும் அவை அமுல்படுத்தப்படுகின்றனவா என்பது சந்தேகமாகவே காணப்படுகின்றது.

அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் முதுகெலும்புடன் எழுந்து நின்று நீதி நிலை நாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனால் நாட்டில் தற்போது நிலவிவரும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும்.தற்போதைய அரசியல் கலாசாரத்தை தலைகீழாக மாற்றியமைக்க வேண்டுமாயின் இலங்கையர்கள்அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

இதேவேளை மீண்டும் இடதுசாரி அரசியல் பிரவாகம் ஒன்றை உருவாக்க ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 12 ஆம் ஆண்டு நிறைவு தின நிகழ்வில் கலந்து கொண்ட போது ஹிருனிகா இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இரத்தினபுரியில் பேருந்து விபத்து; 29 பயணிகள் காயம்

(கொழும்பு)

இரத்தினபுரி பகுதியில் நேற்றுக்காலை தனியார் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 29 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

மொனராகலைய்யிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மேற்படி பேருந்து இரத்தினபுரி பகுதியில் அமைந்துள்ள மாணிக்கக்கல் விற்பனை நிலையமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பயணிகள் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த விபத்துச் சம்பவத்தால் மேற்படி மாணிக்கக்கல் விற்பனை நிலையம் பாரியளவில் சேதமடைந்துள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு மேற்கொண்டு வருகின்றது. (அ-2)

# கிரிக்கெட் விளையாடுவதற்கு நாடாளுமன்றம் செல்லவில்லை

## அரியநேந்திரன் எம்.பி.தெரிவிப்பு

அரசு தமிழர்களின் வாழ்க்கையுடன் பல்வேறு கோணங்களில் விளையாடி வருகின்றது. இந்த இலட்சணத்தில் அவர்களுடன் இணைந்து நாம் கிரிக்கெட் விளையாடலாமா? இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் நேற்று முன்தினம் கிரிக்கெட் போட்டியொன்று நடைபெற்றது.

இந்தப் போட்டியை ஐ.தே.க. மாற்றுக் குழுவினரும் ஜனநாயக தேசிய கூட்டமைப்பினரும் புறக்கணித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணியில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விளையாடினார்.

கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை எனக் கேட்ட போதே அரியநேத்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் விளையாடுவதற்கோ அல்லது காற்பந்து விளையாடுவதற்ஙோ மக்கள் எம்மை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவில்லை. அதனைப் புரிந்து செயற்பட்டால் நல்லது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றாதது குறித்து எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. ஆனால் சுமந்திரன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் கலந்து கொண்டிருப்பார் என்றார் அவர். (அ-2)

# இலங்கையர் மூவருக்கு மாலைதீவில் சிறை


மாலைதீவு நாடாளுமன்ற குழுத் தலைவரான மூஸா மனிக்கிற்கு சொந்தமான காரொன்றில் மலிந்த வகை மதுபான போத்தல்கள் காணப்பட்டமை தொடர்பான வழக்கில் மூன்று இலங்கையர்களுக்கு ஒருவருட காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


இஸுறு பிரியங்கர, நிரோஷன் டொன், முகைதீ முகமெட் ஆகிய இலங்கையர்கள் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் மேற்படி வழக்குத் தொடர்பில் கைது செய்யப்பட்டனர்.

தான் சிங்கப்பூரில் இருந்த வேளையில் தனது கார் சாரதிக்கு இலஞ்சம் கொடுத்து தனது காரில் மதுபான போத்தல்கள் வைக்கப்பட்டதாக மூஸா கூறினார்.

தனது அரசியல் செல்வாக்கை கெடுக்க வேண்டுமென சிலர் இதனைச் செய்வித்ததாக நீதிமன்றில் அவர் தெரிவித்தார்.

சட்டத்துக்கு புறம்பான வகையில் மாலை தீவுக்குள் மதுபானம் இறக்கியவர்களென குற்றம் காணப்பட்டு மூன்று இலங்கையர்களுக்கும் தலா ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இருப்பினும் இந்தக் குழுவின் தலைவரென கருதப்படும் பிரதான சந்தேக நபர் தப்பியோடிவிட்டார். (அ-2)





கமத்தொழில் காப்புறுதிச் சபையில் காப்புறுதி செய்யப்பட்ட மூன்று பசுக்களிற்கான இழப்பீட்டு கொடுப்பனவு அண்மையில் வழங்கப்பட்டது. இதில் இரண்டு பசுவிற்கான கொடுப்பனவு காப்புறுதி சபையின் தலைவி திருமதி சுமணா சூரியதாஸ இழப்பீட்டாளருக்கு வழங்குவதனையும் பிறிதொரு பசுவிற்கான கொடுப்பனவு அபிவிருத்தி பணிப்பாளர் எஸ்.வீரசிங்கம் இழப்பீட்டாளருக்கு வழங்குவதனையும் படங்களிற் காணலாம்.


# ஹஜ் யாத்திரை குறித்து பேச்சு

முஸ்ஸிம் அரசியல்வாதிகளுடன் நகர அபிவிருத்தி சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் விசேட பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முஸ்ஸிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், சகல கட்சிகளிலும் அங்கம் வகிக்கும் முஸ்ஸிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களை அமைச்சர் இதன் போது சந்திக்க வுள்ளார்.

ஹஜ் யாத்திரை தொடர்பில் சகல முஸ்ஸிம் அரசியல்வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதர்க குறிப்பிடப்படுகிறது.இதேவேளை அடுத்த ஆண்டு மேற்படி யாத்திரை மேற்கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு அமைச்சர் கோரியுள்ளார். (அ-2)

# அமெரிக்க விமானம் நுழைந்தால் சுட்டுவீழ்த்த பாகிஸ்தான் உத்தரவு



(இஸ்லாமாபாத்)

அத்துமீறி நுழையும் அமெரிக்க விமானங்களை அனுமதியின்றி சுட்டு வீழ்த்த பாகிஸ்தான் இராணுவம் முடிவு செய்துள்ளது.

பலுசிஸ்தானில் உள்ள ஷாம்சி விமான தளத்தில் இருந்து அமெரிக்க படை வெளியேற 15 நாட்கள் கெடு விதித்தது பாகிஸ்தான்.

கெடு விதிக்கப்பட்ட கடைசி நாளான நேற்று முன்தினம் அமெரிக்கப்படை முற்றிலும் வெளியேறியது. தற்போது ஷாம்சி தளம் பாகிஸ்தான் முழு கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாக அந்நாட்டு பிரதமர் யூசுப் கிலானி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இதற்கிடையே அமெரிக்க தலைமையிலான நேட்டோ படைகளுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான உறவை மாற்றி புதிய பாதுகாப்பு கொள்கையை பாகிஸ்தான் இராணுவம் வகுத்துள்ளது.

அதில் இனி நேட்டோவின் ஆளில்லா விமானம் பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தால் எந்தவொரு அனுமதியின்றி சுட்டு வீழ்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அத்துடன் பாகிஸ்தான் நாட்டு வான்வெளியை பயன்படுத்த அமெரிக்காவுக்கு தடை விதிக்கப்படும் எனவும் பாகிஸ்தான் பிரதமர் பேட்டியளித்தார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்துள்ள பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி தங்கள் நாட்டு வான்வெளியை பயன்படுத்த அமெரிக்காவுக்கு தடை விதிக்கப்படும் என எச்சரித்தார். இது குறித்து கூறியதாவது,

அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் நாடுகளிடையே பரஸ்பர நம்பிக்கை குறைந்து வருவதாகவும் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் மீது திட்டமிட்டே நேட்டோ படையினர் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்றும் குற்றம் சாட்டினார்.

மேலும் நேட்டோ படையின் வாகனங்கள் தமது நாட்டுக்குள் நுழைய தடை விதிக்கும் எண்ணம் உள்ளதாகவும் அமெரிக்காவுடனான நம்பிக்கையை பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பாகிஸ்தான் பிரதமர் கூறினார். (அ-2)

# தேர்தல் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்த உத்தரவு

(மொஸ்கோ)

ரஷ்யாவில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரினை அடுத்து விரிவான விசாரணை நடத்த ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனால் பிரதமர் புடினுக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது. தற்போது பிரதமராக உள்ள விளாடிமிர் புடின் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்த தேர்தலில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரில் அந்நாட்டு மக்கள் கடும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளனர். தலைநகர் மொஸ்கொவில் 30 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கண்டன பேரணி நடத்தினர். பிரதமர் விளாடிமிர் புடின் பதவியை இராஜினாமா செய்ய கோரிக்கை விடுத்துள்ளார்.

புடினுக்கு எதிராக கண்டன கோஷங்கள் அந்நாட்டு பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத் தளங்கள் வாயிலாக வேகமாகப் பரவி வருகின்றன.

ரஷ்ய அரசியல் வரலாற்றில் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவில் இதுபோன்று ஒரு மக்கள் போராட்டம் நடந்ததில்லை என கூறப்படுகின்றது. இன்னும் ஓரிரு நாட்களில் ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவ் அல்லது விளாடிமிர் புடின் யாரேனும் ஒருவர் நேரடியாகவோ தொலைக்காட்சி மூலமாகவோ மக்களுக்கு விளக்கமளிக்கவுள்ளனர். (அ-2)




# மெக்சிக்கோ தலைநகரில் 6.5 ரிக்டரில் பூகம்பம்



(மெக்சிகோ சிட்டி)

மெக்சிகோவில் தலைநகர் உட்பட பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் பூகம்பம் ஏற்பட்டது. 40 விநாடி ஏற்பட்ட பூகம்பத்தால் வீடுக, கட்டடங்கள் குலுங்கின. அதனால், பீதியடைந்த மக்கள் தெருக்களில் தஞ்சமடைந்தனர்.

இகுயலா அருகே கூரை இடிந்ததில் முதியவர் ஒருவரும் மெக்சிகோசிட்டி அகபுல்கோ நெடுங் சாலையில் சென்ற சிறிய வான் மீது பாறை விழுந்ததில் இளைஞர் ஒருவரும் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது ரிக்டர் அளவில் 6.5 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு தெரிவித்துள்ளது. கடந்த 1985 ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் ரிக்டர் 8.1 ஆக பதிவான பயங்கர பூகம்பத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகினர். அதேபோன்று தற்போதும் பெரிய ஆபத்து ஏற்படும் என்ற பீதியில் மக்கள் உள்ளனர்

(அ-2)

# உலக பருவநிலை மாற்றம் குறித்த ஐ.நா.வின் மாநாடு

(டர்பன்)

உலக பருவ நிலை மாற்றம் குறித்த ஐ.நா.வின் சர்வதேச மாநாடு கடந்த 10 ஆம் திகதி முடிவடைந்தது. இதில் வளர்ந்த நாடுகள் தாங்கள் வெளியிடும் காபன் அளவைக் குறைப்பதற்கான சட்டபூர்வ ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளன.

இம் மாநாட்டில் 194 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் . இந்தியா சார்பில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெயந்தி நடராஜன் கலந்து கொண்டார். உலகளவில் நாடுகள் வெளியிடும் காபன் அளவைக் குறைப்பதன் மூலம் உலக வெப்பமயமாதலை தணிப்பதுதான் இம் மாநாட்டின் முக்கிய நோக்கம்.

மாநாட்டில் உரையாற்றிய ஜெயந்தி நடராஜன், காபன் அளவைக் குறைப்பதற்கான பொறுப்பு வளர்ந்த நாடுகளுக்கும் உள்ளன. வளரும் நாடுகளான இந்தியா போன்றவற்றின் மீது அதற்கான சுமையை சமத்துவது முறையல்ல .வளர்ந்த நாடுகளே காபன் அளவைக் குறைக்க முன்வராத போது இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஏன் காபனை குறைக்க வேண்டும்? என கேள்வி எழுப்பினார். இந்தியா, சீனா, ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்கா இடையே கடந்த இரு நாட்களாக காரசாரமான விவாதம் நடந்தது.

மாநாட்டின் இறுதியில் உரையாற்றிய மாநாட்டு தலைவரும் தென்னாபிரிக்காவின்வெளியுறவு அமைச்சருமான மைட் கோவானா மஷாபபே எதிர்வரும் 2015 க்குள் காபன் வெளியீட்டைக்குறைப்பதற்கான சட்டபூர்வ முன்வரைபு தயாரிக்கப்படும். இந்த முன்வரைபு இறுதி செய்யப்பட்டு எதிர்வரும் 2020 முதல் அமுல்படுத்தப்படும். இந்த முடிவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றார்.

மேலும் ஏழை நாடுகள் தாங்கள் வெளியிடும் காபன் அளவைக் குறைப்பதன் மூலம் எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சினையை சமாளிக்க அந்நாடுகளுக்கு நிதியுதவி வழங்கும் விதத்தில் பசுமை பருவ நிதி என்ற பெயரில் 100 பில்லியன் டொலர் கொண்ட ஓர் நிதியமைப்பை இன்னும் ஓராண்டிற்குள் உருவாக்க வேண்டும் எனவும் முடிபு செய்யப்பட்டது. அதேபோல் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டோடு முடியும் கியோட்டோ மாநாட்டின் ஒப்பந்தத்தின் கால வரையறை 2017 ஆம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இராணுவதளத்தை அமைக்க சீனா முடிபு

(பீஜிங்)

இந்தியப் பெருங்கடலில் உள்ள ஷெசல்ஸ் தீவில் தனது இராணுவத் தளத்தை அமைக்கப்போவதாக சீனா அறிவித்துள்ளது.

கடற்படைக்கு எரிபொருள் ஆயுத விநியோகம் செய்ய இந்தத் தளத்தை அமைக்கவுள்ளதாக சீன பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே தனது தென் சீனக் கடல் பகுதியிலிருந்தும், இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ள கடற்படைத்தளத்தின் மூலம் இந்திய நீர்மூழ்கிகள் ,போர்க்கப்பல்களை சீனா கண்காணித்து வருகிறது.

இப்போது ஆபிரிக்க கண்டனத்துக்கு கிழக்கே உள்ள இந்த ஷெசல்ஸ் தீவிலும்தனதுஇராணுவத்தளத்தை அமைப்பதன் மூலம் இந்தியாவை மூன்று பக்கத்தில் இருந்து சீனா கண்காணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# டைனோசரின் எலும்புக்கூட்டு படிமங்கள் கண்டுபிடிப்பு

வடஅமெரிக்க கண்டத்தில் 6 கோடியே 90 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மிகப்பெரிய டைனோசரின் எலும்பு கூடு படிமங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை அலமோசரஸ்சஞ்சுவான்சிங் டைனோசஸ் குடும்பத்தைச் சேர்ந்தது.

அவை ஒட்டக சிவிங்கியை விட மிக நீளமான கழுத்தை கொண்டவை. இந்த வகை டைனோசர்கள் தாவரங்களை மட்டும் சாப்பிட்டு உயிர் வாழ்ந்தவை என கருதப்படுகின்றது.

அவற்றின் எலும்பு படிவங்கள் உத்தா, நியூ மெக்சிக்கோ மற்றும் அமெரிக்காவின் டெக்சாஸ் ஆகிய இடங்களில் 2003 முதல் 2006 ஆம் ஆண்டு வரை கண்டெடுக்கப்பட்டது. மோண்டானா மாகாண பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் டென்வர் டபிள்யூ போவியர் பென்சில்வேனியாவின் ஹரிஸ் பரிக்கை சேர்ந்த ராபர்ட் எம். சுல்லிவான் ஆகியோர் இது குறித்து ஆய்வு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த டைனோசரின் எலும்பு கூடு படிமம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் அமெரிக்காவின் மோண்டானா மாகாணத்தில் அருங்காட்சியகத்தில் வடிவமைத்து வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஆளில்லா போர்விமானத்தை திருப்பித்தர முடியாது

## ஈரான் புரட்சிப்படை திட்டவட்டம்

(டெஹ்ரான்)

நாங்கள் பிடித்து வைத்துள்ள அமெரிக்காவின் ஆளில்லா போர் விமானத்தை திருப்பித் தர முடியாது என ஈரானின் புரட்சிப் படை திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் ஆப்கானிஸ்தான் எல்லையில் இருந்து 225 கிலோ மீற்றர் தொலைவில் ஈரானுக்குள் அமெரிக்காவின் ஆளில்லா போர் விமானம் ஒன்று பறந்து கொண்டிருந்ததாகவும் அதைச் சிறிதளவு தாக்கியதன் மூலம் தரையிறக்கி விட்டதாகவும் ஈரான் தெரிவித்திருந்தது.

தொடர்ந்து கடந்த 8 ஆம் திகதி அந்த விமானத்தை ஈரான் அதிகாரிகள் சிலர் பார்வையிடும் வீடியோவையும் வெளியிட்டது.

இந்நிலையில் ஈரானின் புரட்சிப் படை துணைத் தளபதி உசேன் சலாமி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

ஈரானின் வான் வெளிக்குள் அமெரிக்க போர் விமானம் நுழைந்தது போரைத் தூண்டும் நடவடிக்கை. இதன் விளைவுகள் மோச மாக இருக்கும். எனினும் இவ் விமானத்தை நாங்கள் அமெரிக்காவிடம் திருப்பிக் கொடுக்கப்போவதில்லை என தெரிவித்தார்.

ஆர்.க்யூ-170 ரக ஆளில்லா போர் விமானம் ஒன்று காணாமல் போனதை ஒப்புக் கொண்ட அமெரிக்க அதிகாரிகள் அந்த விமானத்தை சுட்டோ, மின்னணு தொழில்நுட்பம் மூலமோ ஈரான் தரையிறக்கியிருக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். (அ-2)

# க. பொ. த.சாதாரண தர பாடத்திட்டத்தில் சட்டம் ஒருபாடமாக உள்வாங்கப்பட வேண்டும்

## அஜித் பெரேரா எம்.பி சபையில் வலியுறுத்தல்

சட்டம் தொடர்பில் சாதாரண மக்கள் அறிந்திருக்காத காரணத்தால் அதனை கல்வி பொதுத்தராதர ச்ாதாரண தரத்தில் ஒரு பாடத்திட்டமாக உள்வாங்கப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட எம்.பி.அஜித் பி.பெரேரா அண்மையில் சபையில் அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

நீதிமன்றங்களில் பிணைகள் வழங்குவதில் ஒழுங்கு விதிகள் அமைக்கப்பட வேண்டும் என்பதுடன் அது முழு நாட்டுக்கும் பொதுவானதாக அமைய வேண்டும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு செலவுத்திட்டத்தின் நீதி மற்றும் புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்

நீதிமன்றங்களில் பிணைகள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்கான விதிகள் பின்பற்றப்படுவதில் சிக்கல்கள் இருக்கின்றன. சில நீதிபதிகள் பிணை வழங்குவதற்கு மறுக்கின்றனர். எனவே நீதிமன்றங்களில் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்குவது தொடர்பில் ஒழுங்கு விதிகளை அமைப்பதற்கான சட்டங்கள் கொண்டு வரப்படவேண்டும்.

மேலும் பிணை வழங்குவது இழுத்தடிக்கப்பட்டு வருவது தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழு ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

பிணை வழங்கும் போது ஒழுகப்படுகின்ற விதிகள் திருத்துகின்ற விதிகள் திருத்தியமைக்கப்படவேண்டும் என்பதுடன் அவை நாடு முழுவதிலும் பொதுவானதாக செயற்படுத்தப்படவேண்டும்.

மேலும் சட்டம் தொடர்பில் அறிந்தவர்கள் நாட்டில் மிகக் குறைவானவர்களே உள்ளனர். சாதாரண மக்களுக்கு சட்டம் தொடர்பில் போதிய தெளிவில்லை.

எனவே பொதுமக்களுக்கு சட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு வழிவகை செய்யப்படவேண்டும். அது மாத்திரமன்றி க.பொ.த.சா/தரப் பாடத்திட்டத்தில் சட்டம் ஒரு பாடவிதானமாக உள் வாங்கப்படவேண்டும் என்பது எனது கோரிக்கையாகும்.

அத்துடன் மத்தியசபை குழுவுக்கு இன்று அலுவலகங்கள் கூட இல்லாத நிலை காணப்படுகின்றது. எனவே அவர்களின் சேவை கருதிய வகையில் இந்த உத்தியோகத்தர்களுக்கான தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்றார். (அ-2)

# இறுதிக்கட்ட யுத்தம் முட்டாள்தனமானது யுத்தக்குற்றச்சாட்டுகளுக்கு இதுவே காரணம்

## சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக சர்வதேசத்திலிருந்து எமது நாட்டின் மீது குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. முறையாக யுத்தம் செய்யாது அது முட்டாள்தனமாக நடத்தப்பட்டதாலேயே இவ்வாறான குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நீதி மற்றும் புனர்வாழ்வளிப்பு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இறுதி யுத்தமானது முறையாக நடத்தப்படவில்லை. அது முட்டாள்தனமான யுத்தமாகவே நடத்தப்பட்டிருக்கின்றது. அதனால் தான் சர்வதேச அளவில் எமது நாட்டின் மீது குற்றச்சாட்டுகளும் அழுத்தங்களும் முன்வைக்கப்படுகின்றன.

இறுதி யுத்தத்தில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக சர்வதேசம் கூறுகின்றது. யுத்தம் முறையாக நடத்தப்பட்டிருந்தால் இந்தக் குற்றச்சாட்டு எழுந்திருக்காது என்றார். (அ-2)

# நான்கு நாட்கள் பயிற்சிக்காகவே குழந்தையை ஒப்படைத்தேன்

இலங்கையின்கிழக்கே மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸசாரால் 2 வயது குழந்தையை ரூபா 12 ஆயிரத்திற்கு விற்பனை செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான குழந்தையின் தாய் அக்குழந்தையின் பேரால் எவ்வித பணக் கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே குழந்தையை வாங்கியதாகக் கூறப்படும் மற்றொரு சந்தேகநபரான பெண்ணும் இதனையே கூறியிருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதாகி நீதிமன்ற உத்தரவின்.பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த சந்தேகநபரான 3 பெண்களும் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜரானார்கள்.

மத்திய கிழக்கு நாட்டில் தொழில் வாய்ப்பு நிமித்தம் நான்கு நாட்கள் பயிற்சியொன்றின் காரணமாகவே குழந்தையை உறவினரான குறித்த பெண்ணிடம் ஒப்படைத்ததாக குழந்தையின் தாய் கூறுகின்றார்.

குழந்தையின் தாயும் வாங்கியதாகக் கூறப்படும் பெண்ணும் குழந்தை விடயத்தில் எவ்வித பணப்பரிமாற்றமும் இடம்பெறவில்லை என கூறினாலும் இடைத்தரகராக செயற்பட்டதாகக் கூறப்படும் மூன்றாவது சந்தேகநபரான 63 வயது பெண், குழந்தையை விற்பதற்காகவே தன்னிடம் குறித்த பெண் ஒப்படைத்ததாகக் கூறுகின்றார்.

இதனை வாங்கிய தம்பதிகளுக்கு குழந்தைகள் இல்லாத காரணத்தினால் அவர்களிடம் ஒப்படைத்து ரூபா 12 ஆயிரம் பெறப்பட்டது எனவும் பணத்தைப் பெற்ற பின்பு குழந்தையின் தாயை நேரில் சந்திக்காத காரணத்தினால் பணத்தை கையளிக்க முடியவில்லை என்றும் அந்தப் பெண்மணி கூறுகின்றார்.

இதேவேளை குறித்த சந்தேக நபர்கள் நீதிமன்றில் புதன்கிழமை மீண்டும் குழந்தையுடன் ஆஜரான போது எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி வரை பிணை நீடிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.(அ-2)

# அச்சுவேலியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

அச்சுவேலி கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய டெங்கு நுளம்பு ஒழிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் பொதுசுகாதார பரிசோதகர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதுக்கள், இராணுவத்தினர், பொலிஸார் பொதுப் பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள்.

இக்குழுவானது வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு செய்யவுள்ளது. அந்த வகையில் வாரத்தில் செவ்வாய், வியாழக் கிழமைகளில் வீடுகளுக்கான தரிசிப்பு இடம் பெறும் என குழுவிற்கு தலைமை வகிக்கும் பொது சுகாதார பரிசோதகர் ஆர்.ரவிவர்மா அறிவித்துள்ளார். (அ-70)

# யுத்தம் நிறைவுபெற்றும் அரசியல் தீர்வுக்கான சமிக்ஞை எதுவுமில்லை

## இன்டிபென்டன்ட் நாளேடு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் போர் முடிந்துவிட்டது. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். ஆனாலும் அரசியல் தீர்வு பற்றிய எந்த சமிக்ஞையையும் காண முடியவில்லை என்று பிரித்தானிய நாளேடான இன்டிபென்டன்ட்டில் நேற்று வெளியாகியுள்ள செய்திக் கட்டுரை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 1995 தொடக்கம் போரின் இறுதிக்கட்டம் வரைபோர் சாராத பணிகளில் ஈடுபட்ட மூத்த அதிகாரி ஒருவரே இவ்வாறு கூறியதாக இன்டிபென்டன்டிட் நாளேடு கூறியுள்ளது.

தனது பெயரையோ செவ்வி வழங்கிய இடத்தையோ குறிப்பிடவேண்டாம் என்று கேட்டுக் கொண்ட அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் வகித்த பங்கு காரணமாக அடுத்த ஆண்டில் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டை எதிர் கொள்ளவுள்ளார்.

அரசியல் தீர்வு காண்பதே முக்கியமானது. போர் முடிந்த விட்டது. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். ஆனாலும் அரசியல் தீர்வு பற்றிய எந்த சமிக்ஞையையும் காணமுடியவில்லை.

அவர்கள் இணக்கப் பேச்சு நடத்துவதாக கூறினார்கள். ஆனால் மக்கள் திருப்தி கொள்ளவில்லை.

எமக்கு ஒரு அரசியல் தீர்வு தேவை. சிங்கள மக்களின் ஆதரவு இன்றி தமிழ் மக்களால் ஒரு அரசியில் தீர்வைப் பெறமுடியாது என்றும் அவர் கூறியுள்ளதாக இன்டிபென்டன்ட் நாளேடு தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதியகலிப்பு பணிகளுக்காக உயரமுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதனால் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணி வரை சுன்னாகம், குப்பிளான்,மயிலங்காடு,ஏழாலை, காங்கேசன் துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம் ஆகிய இடங்களிலும் நாளை புதன்கிழமை உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி இடங்களிலும் மின்தடைப் படுமென யாழ்.பிராந்திய மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஓய்வு மண்டபம் அமைப்பு

(பூநகரி)

பூநகரி நல்லூர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் நன்மை கருதி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய நீரியல் வள அமைச்சின் அனுசரணையோடு இருபது இலட்சம் ரூபா செலவில் கடற்தொழிலாளர்களுக்கான ஓய்வு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ் ஓய்வு மண்டபத்திற்கான வேலைகள் நிறைவு பெறும் நிலையிலுள்ளதாக நல்லூர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ந.தெட்சணாமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-84)







கிளி. பூநகரி மகாவித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா, கிளிநொச்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.கணேசலிங்கம் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

இறைவனும் சரி, மனிதர்களும் சரி உங்களிடம் இருந்து எப்போதும் வரவேற்பது உங்களின் தன்னம்பிக்கையான சிந்தனைகளைத்தான்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## காரைநகர் வர்த்தகப் பெருமக்களுக்கு ஓர் அன்புமடல்!

அன்புமிகு காரைநகர் வர்த்தகப் பெருமக்களுக்கு முதற்கண் வணக்கம்!

உங்களிடம் இருக்கக்கூடிய வர்த்தகத்திறன், சமயப்பற்று, திட்டமிடல் என்பவற்றுக்காக எமது பாராட்டுக்கள் உரித்தாகுக.

அதேநேரம் யாழ்.குடாநாட்டின் பொருளாதார பலத்தில் எழுபத்தைந்து வீதமான வகிபங்கை கொண்டிருக்கும் தங்களிடம் சிலவற்றை சுட்டிக் காட்டியே இக்கடிதம் எழுதப்படுகின்றது.

உங்களிடம் இருக்கக்கூடிய பொருளாதார பலம்,காரைநகரில் உள்ள கோயில்களை இடித்துக் கட்டுவதற்கும், குடமுழுக்குகள் வைத்து சொர்ணபுஷ்பத்தால் அர்ச்சனை செய்வதிலுமே செலவாகிப் போகின்றது.

வாரிவளவில் கோயில் நிர்மாணித்தால் வலந்தலையிலும் பஞ்சதளக் கோபுரத்துடன் அமைக்கின்றோம் பார் என்ற பந்தயம் யாழ்.குடாநாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அமிழ்த்திவிடுகின்றது.

இருக்கின்ற ஆலயத்தை அதே அளவில் புனருத்தாரணம் செய்து வழிபாடு நடத்துவது நியாயமானது.

அதற்காக ஆலயத்தை அடியோடு புரட்டி அதலபாதாளத்தில் அத்திபாரம் போட்டு எட்டுத் திசைக்கும் கோபுரம் எழுப்பி என்னதான் செய்ய முடியும்?

நீங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் காரைநகர் சென்று வழிபாடு நடத்திவிட்டு அன்றைய தினமே வீடுதிரும்பும் வழமையைக்கூட உங்கள் பிள்ளைகள் தொடர்வார்கள் என்று கூற முடியாது.

ஆக, கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டு அவர் செய்தார், நானும் செய்கிறேன் எனப் போட்டிபோட்டு பிரமாண்டமாக ஆலயங்களை அமைத்து பூசை செய்யும் அர்ச்சகரைத் தவிர, காகம் துரத்தவும் ஆளில்லாத நிலையில் ஏன் தான் இப்படிச் செய்கிறீர்கள் என்பது புரியாமல் உள்ளது.

ஒரு பிரதேசத்தின் பொருளாதார பலம் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் தெளிந்த சிந்தனை உடையவர்களாக,தூரநோக்குடையவர்களாக இருக்கவேண்டும்.

ஆனால், யாழ்.குடாநாட்டின் பொருளாதார பலத்தில் அதிகூடிய பங்கை வகிக்கின்ற காரைநகர் வர்த்தகர்கள் தங்கள் வருமானமீட்டலின் பெரும் பங்கை கோயில்களுக்கு கொட்டி யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை மந்தமடையச் செய்வது மிகவும் துரதிர்ஷ்டமானது.

இன்றைய உலகின் வளர்ச்சி வேகத்திற்கு நாம் ஈடுகொடுக்க முடியாதவர்களாக இருந்தாலும், தென் பகுதி மக்களின் அபிவிருத்தி வேகத்தில் எங்கள் மக்களும் பயணிக்க வேண்டுமல்லவா?

அதற்காக நீங்கள் செய்யும் பணி யாது?

உங்கள் பொருளாதார பலம் பெரும் கைத்தொழில் நிறுவனங்களை தோற்றுவித்து ஆயிரம் ஆயிரம் இளைஞர் யுவதிகளுக்கு காத்திரமான வேதனத்துடன் வேலைவாய்ப்பை வழங்குமாக இருந்தால், எங்கள் தமிழ் மண்ணில் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வு காணமுடியும்.

அதுமட்டுமல்ல; சமூகசேவையையும் எங்கள் பண்பாட்டு அடையாளங்களை பாதுகாக்கும் பெரும் பணியையும் நீங்கள் முன்னெடுக்க முடியும்.

காரைநகரில் ஒரு பெரும் அரும்பொருட் காட்சியகத்தை அமைத்து எங்கள் முன்னோர்களின் வாழ்வியல் அடையாளங்களை ஆவணப்படுத்துவீர்களாக இருந்தால் அது தமிழ் இனத்திற்கு நீங்கள் செய்யும் பெரும் தொண்டாகும்.

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் சிறுவர்களுக்கான வைத்தியசாலையைக் கட்டி அதனை இலவசப் பணியாக நடத்தினால் அது உயிர் காக்கும் புண்ணியமாக அமையும். இவற்றை நீங்கள் செய்வீர்களாக இருந்தால், பன்றிக்குட்டிக்கு பால் கொடுக்க வந்த பரமன் உங்கள் மக்கள் தொண்டை பாராட்ட மகேசனாக இங்கு வருவான். நடக்குமா?

# யாழ்ப்பாணத்தில் ஜனவரி மாதம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றமும் வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனமும் இணைந்து யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் எதிர்வரும் 2012 ஜனவரி மாதம் 20, 21, 22 ம் திகதிகளில் மிகவும் பிரமாண்டமான முறையில் சர்வதேச கைத்தொழில் வர்த்தகக் கண்காட்சியினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளன.

இதில் உள்நாட்டு, வெளிநாட்டு உற்பத்தி, சேவை வழங்குநர்களுடன், வடமாகாண உற்பத்தி சேவை வழங்குநர்களும் இணைந்து தமது உற்பத்தி, சேவைகளைக் காட்சிப்படுத்துவதற்கு ஏதுவாக 200 காட்சிக் கூடங்கள் இடம்பெறவுள்ளன.

தொழிற்துறையில் புத்துயிர் பெற்று வரும் வடபகுதியானது, மேற்படி கண்காட்சியின் ஊடாக பிந்திய தொழில்நுட்பங்களினூடாக தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கும் சிறந்த தர முகாமைத்துவத்தின் ஊடாக சந்தைப்படுத்துதல் மற்றும் சர்வதேச வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்துவதன் ஊடாக புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் ஓர் இணைப்புப்பாலமாக அமையவுள்ளது.

மேற்படி கண்காட்சியில் யாழ்.குடாநாட்டு உற்பத்தி மற்றும் சேவைகளை காட்சிப்படுத்த ஏதுவாக முன்னுரிமை மற்றும் சலுகை அடிப்படையில் காட்சிக் கூடங்கள் வழங்கப்படவுள்ளதால் ஆர்வமுள்ளோர் இல.175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்ற அலுவலகத்துடன் எதிர்வரும் 23ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு காட்சிக் கூடங்களை பதிவு செய்யுமாறு அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி அறிவித்துள்ளார். (எ)

# வாழும் கலை அமைப்பின் யாழ்.இளைஞர்களால் 22 அடி உயரமான விநாயகர் சிலை திறப்பு



இலங்கையில் முதன் முதலாக உருவாகியுள்ள இப் பிரமாண்ட சிலையை காண்பதற்கு பல நூற்றுக்கணக்கான மக்கள் ஆவலோடுள்ளனர். இவ்வுருவ சிலை தரிசனத்திற்காக கடந்த 11 ஆம் திகதி முதல் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. பஜனை, மந்திர உச்சாடனம், உபவாசம் மற்றும் பிரார்த்தனைகள் 21 நாட்களாக இடம்பெறவுள்ளன. கடவுள் கணேஷரின் 22 அடி உயர் வண்ணமயமான சிலை ஒரு தனிப்பட்ட ஆக்கத்திறன் வெளிப்பாடாகவும் உலக அமைதிக்காகவும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பொறியிலாளர் செல்வரத்தினம் திவாகரன் (வயது-22) மற்றும் நுண்கலை மாணவர்கள் 3 பேரினாலும் உருவாக்கப்பட்டது. இந் நிகழ்வானது யாழ்ப்பாணத்தில் இந்த இளைஞர்கள், அவர்களின் திறமைகளைக் காட்ட ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

சரியாக 30 நாட்களில் இச் சிலை மிகுந்த அர்ப்பணிப்பு மற்றும் தொண்டு சேவையாக உருவாக்கப்பட்டிருகின்றது. இந்தச் சம்பவம் வாழும் கலையின் இளையோர் கலை எனும் திட்டத்தை தொடங்க அடிகோலுகின்றது. வாழும் கலை ஆசிரியர் வித்யுத் ஜீ அவர்களின் யோசனைப்படியே இவ் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆன்மிகம், படைபாற்றல் மற்றும் வளர்ச்சியை இத்திட்டம் ஊக்குவிக்கிறது.இவை இரண்டுமே இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு இன்றியமையாத தேவையாக உள்ளது என அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிற்பம் மற்றும் நுண்கலை அனுவபத்தினை 15 ஆண்டுகளாக உடைய சுவாமி ஷரனுஜி தலைமையில் இளைஞர்களும் கைவினைஞர்களும் இச்சிலையை வடிவமைத்தார்கள். வடிவமைப்பில் புலமைத்துவம் உள்ள சுவாமி இதற்காகவே இந்தியாவிலிருந்து இங்கு வந்துள்ளார்.

அவர் செல்வரத்தினம் திவாகரனின் இளைஞர் அணிக்கு பல நுட்பங்களை கற்பித்தார். சுவாமி ஷரனுஜி இச்சிலை பற்றி கூறுகையில் இது உயரம் மட்டுமல்ல இ ச் சிலை மக்களை உள்முகமாக பார்ப்பத ற்கும் தியானத்தில் ஆழமாக இறங்கவும் உதவும்.

பண்டைய நாட்களில் உருவ வழிபாடானது உருவமற்ற இறைவனை அடைய ஆரம்ப புள்ளியாக வடிவமைக்கப்பட்டது.

ஐரோப்பாவில்கூட சிறந்த கலைப் பொருட்கள் வழிபாட்டு இடங்களிலேயே வைக்கப்பட்டுள்ளன என்றார்.

வழிநடத்தப்பட்ட தியானம், புனித மந்திரங்கள் மற்றும் ஆன்மிக இசை என்பன 21 நாட்களும் இடம் பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் எல்லாப் பாகங்களிலும்இருந்தும் பல நூற்றுக் கணக்கான மக்கள் தெய்வீக காட்சி மற்றும் தியானத்தில் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எமது இளையோர் கலை திட்டத்தை ஊக்குவிக்கவும் ஆதரவு தெரிவிக்கவும். artoflivingsl@gmail.com (or) slartofliving@gmail.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் இலங்கையின் வாழும் கலையானது பதிவு செய்யப்பட்டதுடன் மன அழுத்தம் நீக்குதல், கல்வி மற்றும் மனித மேம்பாட்டு சேவைகளை செய்யும் தொண்டு நிறுவனம் ஆகும்.

## வர்த்தக நிலையத்தை திறக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

நத்தார் புதுவருடப் பிறப்பு தினத் தை முன்னிட்டு வரும் 18ம் திகதி ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் ஜனவரிமுதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள சனி ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்யலாம் என யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவித்துள்ளது. விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் எனவும் யாழ். வர்த்தகர்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (எ)


## நீதி மன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐந்து நபர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த யாழ் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ ஆனந்தராசா, குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகள் எனக் கண்டு ஒவ்வொருக்கும் 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உழைப்பில்லாமல் உயர்வில்லை



✦ உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து நீங்கள் தப்பியோட முயற்சி செய்யாதீர்கள். வெற்றியா, தோல்வியா என்று சிந்தித்துக் கொண்டிருக்காமல் சேவையில் ஈடுபடுங்கள்.

✦ தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறும் மிதமிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதர்களைச் சாத்தான்களாக்கிவிடுகின்றன.

✦ பெரியவர்கள் வாழ்வில் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள்.அதன் விளைவால் உண்டாகும் நன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது.

✦ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவையாகும்.

✦ ஒவ்வொரு உயிரிலும் தெய்வீக சக்தி ஒளிந்து கிடக்கிறது. அந்த தெய்வ சக்தியை வெளிக்கொண்டுவருவதுதான் வாழ்க்கையின் இலட்சியம். இதற்காக புறவாழ்விலும் அக வாழ்விலும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுங்கள்.

✦ அரிய செயல்கள் யாவும் பெரிய உழைப்பின்றி ஒருபோதும் முடிந்ததில்லை.

# பிரதமர் மன்மோகன் மொஸ்கோ பயணம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நாளை மறுதினம் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவுக்கு பயணமாகிறார். அவருடன் முக்கிய அதிகாரிகள் அடங்கிய தூதுக்குழுவும் செல்கிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதி அங்கு இருநாட்டுகுழுவினரின் உச்சிமாநாடு நடக்கிறது. இதில் பிரதமர் தலைமை தாங்குகிறார். ரஷ்ய குழுவுக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவ் தலைமை தாங்குகிறார்.

**10 ஒப்பந்தங்கள்**

இந்த உச்சி மாநாட்டில் அணு சக்தி துறை, இராணுவ பாதுகாப்பு, வர்த்தக உறவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்து விவாதித்து முடிவு எடுக்கப்படுகிறது. இந்த துறைகளில் இரு நாடுகளின் உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக சுமார் 10 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதுடன் ஜனாதிபதி மெட்வடேவ், பிரதமர் புடின் ஆகியோருடன் மன்மோகன்சிங் இரு நாடுகளின் உறவை பலப்படுத்தும் வகையில் தனியாக முக்கிய பேச்சுவார்த்தையும் நடத்துகிறார்.

**அணு சக்தி துறையில் உதவி**

ரஷ்ய நாட்டின் ஒத்துழைப்புடன் கூடங்குளத்தில் 2 அணுமின் நிலையங்கள் கட்டப்பட்டு உற்பத்தியை தொடங்கும் நிலையில் உள்ளன. அங்கு மேலும் 3 மற்றும் 4 ஆவது அணு உலைகள் அமைக்க ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது. இதை அமுல்படுத்துவது குறித்தும் இரு நாட்டு குழுவினரும் ஆலோசனை நடத்துகிறார்கள்.

**ரூபா 10 இலட்சம் கோடி**

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு வரை ரஷ்யா ஒரு இலட்சம் கோடிக்கு அதிகமாக இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய முடிவு செய்து உள்ளது. இதன் மூலம் இரு நாடுகள் இடையே பல்வேறு துறைகளில் மட்டுமல்லாது வர்த்தக உறவு மென்மேலும் வளர நல்ல சூழல் ஏற்படும் என்று இந்தியாவுக்கான ரஷ்யத் தூதுவர் தெரிவித்தார்.

ரஷ்ய பாராளுமன்றத்துக்கு சமீபத்தில் தேர்தல் நடந்தது. தேர்தலுக்கு பின்னர் முதன் முதலாக செல்லும் சர்வதேச தலைவர் மன்மோகன்சிங்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முல்லைப் பெரியாறு விவகாரம் ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு

## விஜயகாந்த் தெரிவிப்பு



(சென்னை)

முல்லை பெரியாறு அணை விவகாரத்தில் மத்திய அரசின் போக்கை கண்டித்து தேனியில் நாளை மறுதினம் புதன்கிழமை தே.மு.தி.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அக்கட்சித் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முல்லை பெரியாறு அணை பிரச்சினையில் கேரள அரசின் போக்கின் காரணமாக கலவரம் ஏற்படும் அபாய சூழல் ஏற்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்த வேண்டுமென 2006 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் அதை இன்று வரை கேரள அரசு செயற்படுத்த மறுத்து வருகிறது. மேலும் அணை மிகப் பலவீனமானது எனக்கூறி புதிய அணை கட்ட கேரள அரசு முயற்சித்து வருகிறது.

இதற்கிடையில் கேரளாவிற்கு சென்ற ஐயப்ப பக்தர்களை தாக்குதல், பஸ்களையும் பயணிகளையும் தாக்குதல் போன்ற சம்பவங்கள் நடக்கின்றன. கேரள சட்டசபை கூடி புதிய அணை கட்ட வேண்டும் எனவும் அணையின் நீர்மட்டத்தை 120 அடியாகக் குறைக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றகிறது.

முல்லை பெரியாறு அணை இந்திய ஒருமைப்பாட்டின் சின்னம். இதில் மத்திய அரசின் போக்கை கண்டித்து மேற்படி திகதியில் காலை தே.மு.தி.க.சார்பில் எனது தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இதில் கட்சியினர் மட்டுமின்றி பொதுமக்களும் பங்கேற்று ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என விஜயகாந்த் தெரிவித்துள்ளார். (அ-2)

# முல்லைப் பெரியாறு விவகாரம் விசேட கூட்டத்திற்கு அழைப்பு

## ஜெயலலிதா அறிவிப்பு



முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழக மக்கள் மற்றம் அனைத்து கட்சியினரும் ஒற்றுமையுடன் இருப்பதை நிலைநாட்டும் வகையில் நாளை மறுதினம் சட்ட சபை விசேடக் கூட்டம் நடத்தப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தால் தமிழகம், கேரளா, தேனி, குமுளி உட்பட கேரள எல்லைப்பகுதியில் அதிக பதற்றம் தொடர்கிறது. முல்லைப் பெரியாறு அணைக்கு மாற்றாக புதிய அணையை கட்ட வேண்டும் என கேரளாவில் அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நின்று போராடி வருகின்றன.

**உணர்ச்சி வசப்படாதீர்கள்**

இந்நிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, நான் உங்களில் ஒருத்தியாக உங்களின் உணர்ச்சிகளை பகிர்ந்து கொள்கிறேன். இந்த பிரச்சினை குறித்து உணர்ச்சி வசப்படாமல் இருக்கும்படி தமிழக மக்களை கேட்டுக் கொள்கிறேன். நாம் வன்முறையிலும் வெறுப்பிலும் நம்பிக்கையற்றவர்கள் என்பதை உலகிற்கு உணர்த்துவோம். இப்பிரச்சினையை விஞ்ஞான ரீதியாகவும் தர்க்கபூர்வமான முறையிலும் கையாள தமிழக அரசை அனுமதிக்க வேண்டும் என்று பொது மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பிரச்சினையை மேலும் சிக்கலாக்காமல் உடனே கலைந்து செல்லும்படி மாநில எல்லையில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**விசேட சட்டசபை கூட்டம்**

தன் அறிக்கையில் அவர் முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழக மக்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சியினரும் ஒற்றுமையுடன் இருப்பதை நிலைநாட்டும் வகையில் நாளை மறுதினம் காலை 11 மணிக்கு சிறப்பு சட்டசபை கூட்டம் கூட்டப்படும்.

இந்த கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்று தவறாக பரப்பப்படும் பீதியின் அடிப்படையில் தமிழகம் தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது என்ற தீர்மானம் நிறை வேற்றப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

முல்லைப் பெரியாறு விவகாரத்தை ஆராயும் நீதிபதி ஆனந்த் தலைமையிலான உச்ச நீதிமன்றின் உயர்மட்டக்குழு கூட்டம் எதிர்வரும் ஜனவரி 2, 3 ஆம் திகதிகளில் டில்லியில் நடக்கவுள்ளது. (அ-2)

# முல்லைப் பெரியாறு அணை மீட்பு நடைபயணத்திற்கு ஏற்பாடு

(திண்டிவனம்)

தேனியில் இருந்து முல்லைப் பெரியாறு அணை மீட்பு நடைப்பயணத்தை 16 ஆம் திகதி மேற்கொள்ள இருப்பதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

திண்டிவனத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, முல்லைப் பெரியாறு பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் வழங்கிய இடைக் காலத் தீர்ப்பை கேரள ஆட்சியாளர்கள் மதிக்கத் தவறுகிறார்கள்.மின் உற்பத்தியை பெருக்கிக் கொள்ளலாம் என்று முல்லைப் பெரியாறு அணையை உடைக்க எண்ணுகிறார்கள்.

ரஷ்யா போன்ற நாடுகள் எதிர்வரும் 2020 க்குள் அங்குள்ள அணுமின் நிலையங்களை மூடி விடுவோம் என தெரிவிக்கின்ற நிலையில் இந்தியாவில் புதிய அணு உலையைத் தொடங்குவதால் வருங்காலத் தலைமுறையினருக்குத் தீங்கு நேரும். எனவே கூடங்குளம் அணு மின் நிலையத்தை மூட மத்திய அரசு முன் வர வேண்டும். மேலும் எரிசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டை முழுமையாகத் தடுக்கும் வகையில் நாடாளுமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடரிலேயே இத்திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும். ஏழைகளைப் பாதிக்கும் பால் மற்றும் பஸ்கட்டண உயர்வை அரசு திரும்பப் பெறவேண்டும். ஆர்வலர்கள் மீது பொலிஸ் போட்டுள்ள பொய் வழக்கைத் திரும்பப் பெற வேண்டும் என்றார் அவர். (அ-2)

# முல்லைப் பெரியாறு விவகாரம்; குமுளியை நோக்கி பேரணி

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசின் நடவடிக்கையை கண்டித்து தமிழக கேரள எல்லையான குமுளியை நோக்கி 2 ஆவது நாளாக நேற்று முன்தினம் ஒரு இலட்சம் பேர் பேரணியாக சென்றனர். அவர்கள் கேரளாவிற்கு செல்லும் 13 வழிச்சாலைகளை மூடக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

**2ஆவது நாளாக பேரணி**

கேரள அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கூடலூர், கம்பம், காமயகவு டன்பட்டி, சுருளிபட்டி பகுதி மக்கள் 25 ஆயிரம் பேர் கடந்த 10 ஆம் திகதி கேரள மாநிலம் குமுளி எல்லையை நோக்கி பேரணியாக சென்று அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக கம்பம், கூடலூர் பகுதிகளை சேர்ந்த கிராம மக்கள், விவசாயிகள் கேரள எல்லையான குமுளியை நோக்கி பேரணி நடத்தினர். இதற்காக ஆங்கூர் பாளையம் காமயகவு டன்பட்டி, சுருளிபட்டி, அணைபட்டிநாரா, நாராயணதேவன் பட்டி, குச்சனூர், கூளையனூர் மற்றும் கம்பம் பள்ளத்தாக்கு, கூடலூர் பகுதிதிராட்சை தோட்ட விவசாயிகள், தொழிலாளர்கள் பொதுமக்கள் அந்தந்த பகுதிகளில் திரண்டனர். ஆயிரக்கணக்கான மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 200 ற்கும் மேற்பட்ட டிரக்டர்களில் அவர்கள் குமுளியை நோக்கி பேரணியாக சென்றனர். இந்த பிரமாண்டப் பேரணி காரணமாக குமுளி வீதி மக்கள் வெள்ளத்தில் ஸ்தம்பித்தது.

பேரணியாக சென்றவர்களை பொலிஸார் கூடலூர் பெற்றோல் பங்க் அருகே தடுத்துநிறுத்தினார்கள். ஆனால் கட்டுக்கடங்காத அளவிற்கு மக்கள் வெள்ளம் திரண்டதால் அவர்களை பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியவில்லை. மக்கள் பொலிஸாரை மீறி முன்னேறி சென்று கொண்டே இருந்தனர். கூடலூர் ஆலமரம் பஸ் நிறுத்தம் அருகே தடுப்புப் பகுதியில் பொலிஸார் அவர்களை தடுத்தனர்.

ஆனால் ஆவேசமாக வந்த மக்கள் குமுளி வரை சென்று போராட்டம் நடத்த வேண்டும். கேரள மாநிலத்துக்கு செல்லும் அனைத்து வீதிகளையும் மூட வேண்டும் என்று கோசம் எழுப்பினர். (அ-2)



பாராளுமன்றம் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட்ட அபசல் குருவிற்கு தண்டனையை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி உத்தரபிரதேச மொராதாபாத்தில் இந்து ஜக்ரான் மன்ஞ் அமைப் பைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

# பிரேஸ்வெல் மிரட்டலில் ஆஸி பணிந்தது

# நியூசிலாந்து 7 ஓட்டங்களால் வெற்றி



(ஹோபார்ட்)

பிரேஸ்வெல்லின் அபாரமான பந்து வீச்சில் சிக்கிய அவுஸ்திரேலியா அணி இரண்டாவது இன்னிங்சில் 233 ஓட்டங்களுக்கு கசல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் நியூசிலாந்து அணி இரண்டாவது டெஸ்டில்7 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூஸிலாந்து அணி ரான்ஸ்–தஸ்மன் கிண்ணத்திற்கான 2 போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இதில் முதலாவது டெஸ்ட் தொடரில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இந்நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 9ம் திகதி ஹபார்ட்டில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களை எடுத்தது. இதில் பிறவுன் லைன் 56 ஓட்டங்களையும், வில்லியம்சன் 19, சௌத்தி 18 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் பற்றின்ஸன் 5 விக்கெட்டுக்களையும், சிடில் 3 விக்கெட்டுக்களையும், ஸ்ரார்க் 2விக்கெட்டுக்களையும் சாய்த்தனர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 136 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதில் சிடில் 36, அணித்தலைவர் மைக்கல் கிளார்க்22, பற்றின்ஸன் 17 ஓட்டங்களயும் எடுத்தனர்.


பந்து வீச்சில் மார்ட்டீன், பௌஸ்ற், பிரேஸ்வெல் தலா 3விக்கெட்டுக்களையும், சௌத்தி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தநிலையில் முதலாவது இன்னிங்ஸில் 14 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நியூஸிலாந்து இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை எடுத்தது.

. இதன்மூலம் அவுஸ்திரேலிய அணிக்கு 241 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ரோஸ் ரெய்லர் 56 ஓட்டங்களையும் வில்லியம்ஸன் 34, சௌத்தி 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக பற்றின்ஸன், சிடில், லியோன் தலா 3 விக்கெட்டுக்களையும் மைக்கல் ஹசி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 241 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 72 ஓட்டங்களையும் எடுத்தது.



இந்தநிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர் கன்னி டெஸ்ட் சதம் அடித்து கைகொடுத்தார். எனினும் மத்திய வரிசை வீரர்கள் சோபிக்காத நிலையில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 233 ஓட்டங்களை மாத்திமே எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன்மூலம் நியூசிலாந்து அணி 7 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 போட்டிகள் கொண்ட தொடரை1:1 என்ற கணக்கில் சமநிலை செய்தது.

துடுப்பாட்டத்தில் வோர்னர் 170 பந்துகளில் (14 பவுண்டரிகள் உட்பட) 123 ஓட்டங்களையும் ஹவயா 23, ஹக்ஸ் 20, பொன்டிங் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரேஸ்வெல் 6 விக்கெட்டுக்களையும் சௌத்தி 2 விக்கெட்டுக்களையும், மார்டீன், பௌஸ்ற் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப்போட்டியில் சதமடித்து சாதித்த அவுஸ்திரேலிய அணியின் டேவிட் வோர்னர் ஆட்ட நாயகனாக தெரிவானதுடன் சக வீரர் பற்றீன்சன் தொடர் நாயகன் விருதையும் பெற்றார்.

இதேவேளை தொடர் சமநிலையான போதும் தொடரைக் கைப்பற்றிய வகையில் ரான்ஸ் - தஸ்மன் வெற்றிக்கிண்ணம் இம்முறையும் வழங்கப்பட்டது.

# பங்களாதேஷ் அணிக்கு 35வது இன்னிங்ஸ் தோல்வி

(சிட்டகொங்)

முதலாவது டெஸ்டில் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் மற்றும் 184 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது. இதன் மூலம் பங்களாதேஷ் அணி டெஸ்ட் அரங்கில் 35 வது இன்னிங்ஸ் தோல்வியை சந்தித்தது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 9ம் திகதி சிட்டகொங்வில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களை எடுத்தது. இதில் நஷுர் ஹுசைன் 41, நஷுமுடின் 31, மாமுடுல்லா 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சகிட் அஜ்மல், றீமன் தலா 3 விக்கெட்டுக்களையும் உமர் குல், சீமா தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ் தான் அணி யூனிஸ்கானின் இரட்டைச் சதத்தின் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 594 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை நிறுத்தியது.

இதில் யூனிஸ்கான் ஆட்டமிழக்காமல் 290 பந்துகளில் (18 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 200 ஓட்டங்களையும் மஹமட் ஹபிஸ்143, அசாத் சபீக்104 ஓட்டங்களையும் தௌபிக் உமர் 61 ஓட்டங்களையும் எடுத் தனர்.

பந்துவீச்சில் இலியாஸ் சணி 3 விக்கெட்டுக்களையும் சாகடாட் ஹுசைன், மாமுடுல்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்

இதன்மூலம் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 459 ஓட்டங்களை எடுக்கவேண்டிய கட்டாயத்தில் 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் 4 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களையும் எடுத்தது.

இந்த நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்படுத்தாடிய பங்களாதேஷ் அணி 2வது இன்னிங்ஸில் 275 ஓட்டங்ககளை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் மற்றும் 184 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 போட்டி கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அறிமுக வீரர் நஹுமுடீன் 78 ஓட்டங்களையும் சகிப் அல் ஹசன் 51, அணித்தலைவர் முஸ்பீகர் ரகீம் 49 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக றீமன் 4 விக்கெட்டுக்களையும் சீமா, அஜ்மல் தலா 2 விக்கெட்டுக்களையும் முகமட் ஹபீஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் பாகிஸ்தான் அணியின் யூனிஸ்கான் ஆட்ட நாயகனாக தெரிவா னார்.

இதேவேளை இப்போட்டியில் இன்னிங் ஸ் தோல்வி கண்ட பங்களாதேஷ் அணி டெஸ்ட் அரங்கில் தான் விளையாடிய 73 டெஸ்ட் போட்டிகளில்63வதுதோல்வியைத்தழுவியது.

இதில் 35 போட்டிகளில் இன்னிங்ஸ் தோல்வியைப் பெற்றது. அத்துடன் டெஸ்ட் அரங்கில் மூன்று போட்டிகளிலுமே வெற்றி பெற்றிருந்தது

## கலந்துரையாடல்

சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிகழ்காலத்தில் எமது சமூகத்தினர் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளும் சமூகப் பாதிப்புகளும் அவற்றிலிருந்து மீளும் வழிமுறைகளும் ஆலோசனைகளும் என்ற தொனிப் பொருளிலான கலந்துரையாடல் நாளை காலை 10.00 மணி தொடக்கம் பி.ப 12.00 மணிவரை நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வி. இந்திரன், நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன், மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் கிரிஸ்டி யோசப், சொண்ட் நிறுவனத் தலைவர் செந்துராசா ஆகியோரும் பல பிரதேச மட்ட அதிகாரிகளும் சமூகத் தலைவர்களும் கலந்து கொள்வார்கள். (ஏ)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

கோயிற் கேணியில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று திருடப்பட்டுள்ளதாக கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொக்குவில் கிருபாகர சிவ சுப்பிரமணிய கோயில் தீர்த்தக் கேணியில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கோவிலுக்கு மிக அருகில் இராணுவ முகாம் ஒன்று உள்ளதாகவும் அதனையும் மீறி களவு போயுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளதாக கோயில் பரிபாலன சபைச் செயலாளர் தெரிவித்தார்(எ-4)

## வட மாகாண...

வினவியதற்கு, இந்தத் தேர் தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரை நானே தீர்மானிப்பேன் என கூறினார்.

இந்த முதலமைச்சர் பதவியின் ஊடாக தமிழ் சமூகத்திற்கு இன்னும் பல சேவைகளை செய்ய முடியும் எனினும், அமைச்சரவையிலுள்ள ஒரே ஒரு தமிழ் அமைச்சரான என்னை இழக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு விரும்பவில்லை என அமைச்சர் டக்ளஸ் மேலும் தெரிவித்தார். (எ-5)

## முல்லைத்...

தொழிலில் ஈடுபட்டமைக்கு முல்லைத்தீவு கடற்கரையோரப் பகுதிகளில் அவர்கள் நாட்டியுள்ள தென்னைமரம் சாட்சி என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் தான் முல்லைத்தீவுக்கு சென்றபோது சிங்களவர்களால் முன்பு நாட்டப்பட்ட தென்னை மரங்களின் சுவடுகளை அவதானிக்க முடிந்ததாக அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ நேற்று நாடாளுமன்றில் குறிப்பிட்டார். (எ-5)

## பாதுகாப்பு...

இந்த அதிகாரிகள் மாதந்தோறும் அரசியல் பொருளாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான இரகசியத் தகவல்கள் அடங்கிய அறிக்கைகளை ஜப்பானிய அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இந்த அதிகாரிகள் இருவரும் ஜப்பானில் இருந்து நிதியதவி பெற்று வரும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் மூத்த ஆலோசகர்களாக பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில் ஒருவர் முன்னர் பாதுகாப்பு அமைச்சில் பணியாற்றி வந்தவர் ஆவார்.

அரசியல் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களை விமர்சிக்கும் வகையில் இவர்களால் ஜப்பானிய அரசுக்கு அறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது என்றும் சிங்கள வார இதழ் தகவலை வெளியிட்டுள்ளது. (எ-5)

# யாழ்ப்பாண கள நிலைமைகளை...

இது தொடர்பில் அவர் கூறியதாவது,

பிரான்ஸ் மற்றும் கனடா நாட்டுப் பிரதிநிதிகள் குழு நேற்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியது.

இதன் போதே அவர்கள் தன்னிடம் மேற்கண்டவாறு கேள்விகளை கேட்டிருந்தனர் என அரசஅதிபர்பத்திரிகையாளர்களுக்குதெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரான்ஸ்நாட்டின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் கிறிஸ்ரின் றொபின்சன், அந்நாட்டுப் பிரதிநிதி அனோமா ராஜ புருனா மற்றும் கனடா நாட்டின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தெற்காசிய தொடர்பு அதிகாரி கேற் பின்டர், அரசியல் மற்றும் பொருளாதார உயரதிகாரி மேகன் பூஸ்ரர் ஆகியோர் என்னை சந்தித்து தற்கால நிலைவரம் தொடர்பாக கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின் போது பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் கிறிஸ்ரின் றொபின்சன் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் எவ்வாறு செயற்படுகின்றனர். தற்கால அரசியல் தமிழ்மக்களுக்கு விரும்பத்தக்கதாக உள்ளதா? நடந்து முடிந்த தேர்தல் முடிபு சரியானது என மக்கள் கருதுகின்றனரா எனவும் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இது தவிர கனடா நாட்டு பிரதிநிதிகள் இராணுவ செயற்பாடுகள் மக்களின் சுதந்திரமான வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்துகின்றதா? அவர்களின் உணர்வுகள் மதிக்கப்படுகிறதா? வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் திரும்பிவருகின்றனரா? பொலிஸ், இராணுவம் மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனரா எனவும், மீள்குடியேற்றம், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்ற பல்வேறு கேள்விகளை கேட்டிருந்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் என்னைச் சந்தித்த அமெரிக்கப் பிரதிநிதிகளும் இவ்வாறான கேள்விகளையே என்னிடம் கேட்டிருந்தனர்.

அரச நிர்வாகி என்ற ரீதியில் அவர்கள் கேட்ட கேள்விக்கு உரிய பதில்களை நான் அளித்திருந்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# காணாமல்...

கைதிகளை உடன் விடுதலை செய், காணாமல்போனவர்களின் நிலை என்ன?, தமிழ், சிங்கள உறவுக்கு யாழில் அரசு தடை போன்ற சுலோகங்கள்எழுதப்பட்ட சுலோகஅட்டைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுதந்திர தொழிலாளர் மத்திய நிலையம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு, காணாமல் போனோரை தேடியறியும் குழு, கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம் உள்ளிட்ட அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டன. (எ)

# சிறுவனை பணயம்...

முன்பக்க வாயில் திறந்திருந்தபோது மதிலைக் கடந்து உள்நுழைந்த 5 பேர் கொண்ட முகமூடி அணிந்த கொள்ளையர் குழு வாள், கத்தி போன்ற கூரிய ஆயுதங்களை காட்டி அங்கிருந்தவர்களை எச்சரித்ததோடு வாய்பேச முடியாத 13 வயதேயான சிறுவனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி நகைகளை தருமாறு அங்கிருந்தவர்களை கேட்டுள்ளனர்.

வீட்டிலிருந்த இரண்டு பெண்களும் தமது கழுத்திலிருந்த சங்கிலிகளையும் காதில் போட்டிருந்த தோட்டினையும் கொள்ளையர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

அத்தோடு சிறுவனின் கையிலிருந்த மோதிரத்தையும் கழுத்திலிருந்த பென்ரனையும் வயோதிபர் ஒருவரின் கையிலிருந்த இரண்டு மோதிரங்களையும் கொள்ளையர்களை பறித்துக்கொண்டனர்.

இது தவிர வீட்டிலிருந்த பெண்ணிடம் தாலிக்கொடியை மறைத்துவைத்திருக்கும் இடத்திலிருந்து எடுத்துத்தருமாறு கேட்டதோடு வீடு முழுவதும் தேடுதல் நடவடிக்கையிலும் கொள்ளையர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அங்கிருந்த பொருட்கள் அனைத்தும் நாசமாக்கப்பட்டது. இருப்பினும் தாலிக்கொடியை அவர்களினால் எடுக்க முடியவில்லை. மேலும் வீட்டிலிருந்த இரண்டு பெறுமதியானகைத்தொலைபேசிகளையும், தொலைக்காட்சிப்பெட்டியினையும், மோட்டார்சைக்கிளையும் கொள்ளையர்கள் அபகரித்து சென்றுள்ளனர்.

இதில் தொலைக்காட்சி அருகிலிருந்த பற்றைக் காணிக்குள் வீசப்பட்டிருந்தது.

அத்தோடு மோட்டார் சைக்கிளை மானிப்பாய் பகுதியில் பொலிஸாரைக்கண்டதும் கொள்ளையர்கள் வீதியில் போட்டு விட்டு தப்பித்து சென்றுள்ளனர்.

இவ்வாறு துணிகரமாக மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

குறித்த கொள்ளைச்சம்பவம் தொடர்பாக சின்னத்தம்பி சண்முகநாதன் என்பவர் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார்விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். குடாநாட்டில் இவ்வாறான கொள்ளைச்சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# நாடாளுமன்ற தெரிவுக்...

திட்டத்தை அங்கீகரிப்பதற்கு தேவையான பலம் நாடாளுமன்றத்தில் இன்மையால் அம்முயற்சி தோற்கடிக்கப்பட்டது. எனினும் அது இம் முறை நடைபெறாது.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கும் நடைபெறும் பேச்சுவார்த்தையின் இறுதியில் ஏற்படும் தீர்மானம் அனைத்து கட்சிகளின் அங்கீகாரத்திற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடமே முன்வைக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பிலான விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கலந்துகொள்ள முடியும் என்றால், ஏன் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள முடியாது? என அவர் கேள்வி எழுப்பினார்.

கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் தமிழ்த் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்றினால் அது சிறந்ததாக இருந்தது. ஆனால், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சலசலப்புக்காகத்தான் உரையாற்றுகின்றனர் என அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு வினோதமான கட்சியாகும். அரசாங்கத்திற்கும் அவர்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தை தொடர்பில் நம்பிக்கையில்லை என்பார்கள். பின்னர் மீண்டும் பேச்சு நடத்துவர். மீண்டும் அரசாங்கத்தை விமர்சிப்பர்.

இதன் மூலம் மீண்டும் 30 வருடங்கள் திரும்பிவரும் நிலையை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முனைகிறது. தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல்தீர்வு எந்தவொரு தமிழ்க் கட்சியிடமும் இல்லை. இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தும்படி ஈ.பி.டி.பி. கட்சியினால் முன்மொழியப்பட்டுள்ள கோரிக்கையே நிரந்தர தீர்வு.

எனினும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உடனடியாக அமுல்படுத்த முடியாது. ஆனால் குறித்த ஒப்பந்தத்தை பகுதிபகுதியாக அமுல்படுத்த முடியும் இதன் இறுதியில் மாகாண சபைகளுக்கான பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களும் வழங்கமுடியும்.

பல தமிழ்க் கட்சிகள் சண்டை பிடித்துக் கொண்டு கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் புதுடில்லி சென்று இந்தியத்தலைவர்களை சந்தித்தனர்.

இதன்போது அவர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்கள். இறுதியில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உண்டா என இந்தியத் தலைவர்கள் கேட்டதற்கு வாய்மூடி மௌனியாக இருந்துள்ளனர்.

தமிழ் மக்கள் தொடர்பில் ஈ.பி.டி.பி. ஏதாவது தவறு விட்டிருந்தால் அதை நியாய பூர்வமாக யாரும் சுட்டிக்காட்டினால் திருந்தி நடக்கவும் தயாராகவுள்ளோம் எனவும் அவர் கூறினார். (எ-5)

# மானியங்கள் ஆணைக்குழுவுக்...

சொந்த இடமாகக்கொண்ட தான் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர் என்றவகையில் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவபட்டப்படிப்பை தொடர்வதற்கு அனுமதிக்காமல் முல்லைத்தீவை சேராத ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அம்மாணவி குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, அதன் மேலதிக செயலாளர் டாக்டர் பிரியந்த பிரேமகுமார, பல்கலைக்கழக பல் வைத்திய விஞ்ஞானப்பிரிவுக்கு தெரிவான பரீட்சார்த்தியான வி.ஜயவதனி ஆகியோரை அவர் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

மனு தாரர் சார்பில் கௌரிசங்கரி தவராஜாவின் நெறிப்படுத்தலின் கீழ் ரியாட் அமீன் ஆஜரானார். முல்லைத்தீவு நகரம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த 1989ஆம் ஆண்டு தான் அங்கு பிறந்ததாக மனுதாரர் அனுஜா யோகநாதன் தெரிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டு அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான கடும் மோதலின் காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்கள் 12 கிலோமீற்றர் தொலைவிலுள்ள புதுக்குடியிருப்பு கிராமத்திற்கு இடம்பெயர்ந்தனர் எனவும் தான் க.பொ.த. உயர்தரபரீட்சை வரை புதுக்குடியிருப்பில் தற்காலிக வீடொன்றில் தங்கியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோசமான சூழ்நிலையிலும் 2005ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தான் 8 அதிவிசேட சித்திகள் பெற்றதுடன் 2008ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தத்தடவை மிருக வைத்திய பீடத்திற்கு தான் தெரிவாகுவதற்கு தகுதிபெற்ற போதிலும் மருத்துவப் பீடத்திற்கு தெரிவாக விரும்பியதால் மீண்டும் பரீட்சை எழுத தீர்மானித்ததாக கூறியுள்ளார்.

பின்னர்கடும் இராணுவமோதல்காரணமாக தானும் தனது குடும்பத்தினரும் அங்கியிருந்து தப்பிச்சென்று வவுனியா மாவட்டத்திலுள்ள மெனிக்பாம் இடம்பெயர்தோர் முகாமில் தங்கியிருந்ததாகவும் 2009ஆம் ஆண்டு வீர புரம் இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்த நிலையில் உயர்தர பரீட்சை எழுதியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சைப்பெறுபேறுகள் வெளியானபின் பேராதனை பல்கலைக்கழகத்தில் மிருக வைத்திய விஞ்ஞான பிரிவில் பாட நெறியை தொடர்வதற்கு தான் தகுதி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அம்மாணவி குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடநெறியை தொடர்வதற்கு 2009 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் இடம்பெயர்ந் தோர் முகாமிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டார்.

2003ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் பருத்தித்துறையில் உயர்தர மாணவியாக இருந்த 3ஆவது பிரதிவாதியான ஜெயவதனி, 2007, 2008ஆம் ஆண்டுகளில் மருத்துவ சான்றுதழ்களை சமர்ப்பித்து பரீட்சைக்கு தோற்றுவதை தவிர்த்து 2009ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்றியதாகவும் மனுதாரர் அனுஜா கூறியுள்ளார்.

மருத்துவம் மற்றும் பல் மருத்துவ பாடநெறிகளுக்கான இஸ்ட் ஸ்கோர் வெட்டுப்புள்ளி கிளிநொச்சிக்கு அடுத்ததாக முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இரண்டாவது ஆகக் குறைவாகவுள்ளதாக மனுதாரர் குறிப்பட்டுள்ளார்.


முல்லைத்தீவில் க.பொ.த. உயர்தரப் படிப்பை மேற்கொண்ட மாணவர்கள் தமது பல்கலைக்கழக அனுமதிக்கு கூடுதலாக முன்னேற்றமடைந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் க.பொ.த. உயர்தரப் படிப்பை மேற்கொண்ட மாணவர்களுடன் போட்டியிட வேண்டும் என எதிர்பார்ப்பது முறையற்றதும் நியாயமற்றதுமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஓகஸ்ட் மாத பரீட்சை பெறுபேறுகளின்படி, மூன்றாவது பிரதிவாதியான ஜெயவதனி முல்லைத்தீவு மாவட்ட பரீட்சார்த்தியாக உள்ளடக்கப்பட்டிருக்காவிட்டால் தான் பல் வைத்தியத்துறைக்குதெரிவுசெய்யப்பட்டிருப்பார் எனவும் மனுதாரரான அனுஜா தெரிவித்துள்ளார். (எ-5)

## மரண அறிவித்தல்

## யோகேஸ்வரன் புதர்சன்

(வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 2012 வர்த்தக பிரிவு)



உரும்பிராய் வடக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் புதர்சன் 11.12.2011 அன்று (ஞாயிற்றுக்கிழமை) அகால மரணமானார்.

அன்னார் யோகேஸ்வரன் கமலேஸ்வரி தம்பதியினரின் அருமைப் புதல்வனும் தபீசன்(பல்கலைக்கழகம் 2ம் வருடம் முகாமைத்துவ பிரிவு), நிரூபன் (2013 A/L கலைப்பிரிவு, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (6961) தகவல்: குடும்பத்தினர்

## கண்ணீர் துளிகள்

அமரர் செல்வன் யோகேஸ்வரன் புதர்சன்

[யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலய சிரேஷ்ட மாணவ தலைவன்]



பிறப்பு: 21.08.1993 இறப்பு: 11.12.2011

*கல்விசாலையதை கலைக்கோயிலாக்கி*
*நற்பண்பு மதியினிலே நமையாள் தலைமை*
*நட்பெனும் சாகரம் அக்கினியானதோ*
*தட்ப வதனம் இன்று தரணியை விட்டதோ*
*சொற்பனம் தான் கண்டோமோ சோகமீது பெற்று*
*செப்பவும் முடியவில்லை நண்பா செயற்படவும் முடியவில்லை*
*நம்பவும் முடியவில்லை நனைகிறதே எம் விழிகள்*
*நல் உள்ளம் வாழ நண்பா நாட்டில் இடமில்லை*
*சொல் நண்பா இந்த சோகத்தை ஏன் அழைத்தாய்?*

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-5176) யா/வயாவிளான் ம.ம.வி. உயர்தர மாணவர் மன்றம் (2012)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.